# கல்கி







ALKI ஆகஸ்ட் 3, 1952

4 அண

எப்பொழுதும், எங்கும்



கைகளில் அழுக்கிலிருக்கும் கிருமிகள் பற்றிக்கொள்ளலாம்



அவைகளை உங்கள் உடலிலும் பரவச்செய்யலாம்


இந்த ஆபத்தை தவிர்க்க

கைகளையும் உடலையும் தவறாமல்

# லைப்பாய்
# சோப்பினால்

கழுவுங்கள்.

அது அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து
உங்களை காப்பாற்றுகிறது.




L. 223-56 TM

# கல்கி பொருளடக்கம்

மலர் 12
இதழ் 1

1952 ஆகஸ்டு 3

நந்தன ௵
ஆடி 19


| | | |
|---|---|---|
| முடி துறந்த எகிப்து மன்னர் | (தலையங்கம்) | ... 3 |
| போலீஸ் உதவியினால் விவசாயம் நடக்குமா? | ... | ... 4 |
| சகோதரர் சண்டை | (கார்ட்டூன்) | ... 5 |
| மடங்களின் மதப் பிரசாரம்......? | ... | ... 6 |
| பள்ளத்தில் விழ முடியாது! | ... | ... 6 |
| இன்றைக்கு ஜுரம்: நாளைக்குப் பழம் | ... | ... 7 |
| பத்திரத்துக்குப் பத்திரம்!...... | ... | ... 7 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | ... 8 |
| சோதனை | வி. எஸ். ஆர். | ... 19 |
| பாரதி காட்டிய பாதை | வெ. ர. நாகராஜன் | ... 24 |
| மூன்று ராஜகுமாரர்கள் (பாப்பா மலர்) | சீதா | ... 29 |
| குந்த மாமா! | சாமா | ... 32 |
| சுகுணாவின் அத்தான் | ஜோராபால் | ... 33 |
| பாதாள உலகம்! | ஹான்ஸ் பீட்டர்ஸன் - வாஞ்சி | ... 39 |
| அருவிக்கரை ஆசிரமம் | சுதர்சன்—ரா. வீ. | ... 43 |
| ஆரோக்கிய ரகசியம் | வி. என். குமாரசாமி | ... 53 |
| உழைப்பால் உயர்ந்த ஏழை | பகீரதன் | ... 59 |


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சினிமா சஞ்சிகைகளில் சிறந்தது

# சித்ரா

மாதாந்திர கலைப் பத்திரிகை

முழுவதும் ஆர்ட் காகிதம் — பெரிய புதிய அமைப்பு
நவீன விசேஷ அம்சங்கள் — பக்கம் பூராவும் படங்கள்

ஆசிரியர்: எஸ். கிருஷ்ணஸ்வாமி
(பிலிம் டைரெக்டர்—நடிகர்)

இப்பொழுது விற்பனையாகிறது

விலை ரூ. 1/-

சித்ரா : தியாகராயநகர் : சென்னை - 17

ஏஜன்ஸி எடுத்துக்கொள்ள விரும்புபவர்கள் தங்கள் ஊரில் ஏஜண்ட் இல்லையென்று அறிந்தால் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

மண்ணைக் கிளறும் உழவன்
மக்களை நடத்தும் தலைவனுமான்




நட்சத்திரங்கள்
திலீப் குமார்
நிம்மி · ப்ரேம்நாத்
புதுமுகம் நாதிரா

மெஹ்பூப்
ப்ரொடக்ஷன்ஸ்
லிமிடெட்

ப்ரின்ட் பை டெக்னிகலர்

டைரக்ஷன் மெஹ்பூப்

MG/2B

சங்கீதம் நௌஷாத் காமிரா பெர்தூன் ஏ. இரானி

பாட்டு: கம்பதாஸன்: வசனம்: பி. எஸ். ராமையா

ஆகஸ்டு 7-ந் தேதி முதல்

ஸ்ரீ கிருஷ்ணா & சித்ரா

மற்றும் தென்னாடெங்கும்

ஆல் இந்தியா பிலிம் கார்ப்பொரேஷன் ரிலீஸ்

கல்கி

மலர் 12 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 1

# முடி துறந்த எகிப்து மன்னர்

அரபு நாடுகளிடையே முக்கிய ஸ்தானத்தை வகிக்கும், கேந்திரப் பிரதேசமாக விளங்கும் எகிப்து தேசத்தின் மன்னரான பரூக் சென்ற வாரம் வரையில் அந்த நாட்டின் சர்வாதிகாரியாக விளங்கினர். பிரதம மந்திரிகளையும் இராணுவ தளபதிகளையும் பதவியில் நியமிக்கவும் பதவியிலிருந்து விலக்கவும் அதிகாரம் பெற்றிருந்தார்.

பார்லிமெண்டில் பெரும் பான்மைக் கட்சித் தலைவரும் சிறந்த தேசபக்தரும் பிரதம மந்திரியுமான நஹாஸ் பாஷாவைப் பதவியிலிருந்து விலக்கினர். மன்னரின் கோபத்துக்கு இலக்கான நஹாஸ் பாஷாவும் மற்றத் தலைவர்களும் வெளி நாடுகளில் அடைக்கலம் புகுந்து அஞ்ஞாத வாசம் புரிய நேர்ந்தது.

சென்ற வாரத்தில் இராணுவப் புரட்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்ற ஜெனரல் நஜீப் பே என்பவரை மன்னர் பிரதம சேனாதிபதியாக நியமித்தார்.

ஆனால் ஒரு சில மணி நேரத்தில் சக்கரம் மின்னல் வேகத்தில் சுழன்று விட்டது. அந்த வேகத்தில் மன்னரின் அதிகாரங்கள் தவிடுபொடியாகி விட்டன.

எகிப்து மன்னர் பரூக் யாரைப் பிரதம சேனாதிபதியாக நியமித்தாரோ, அவரே மேற்படி மன்னரைச் சில மணி நேரத்தில் சிம்மாசனத்திலிருந்து கீழே இறக்கி வெகு சுலபமாக நாடுகடத்தி விட்டார்!

அவ்வாறு முடி துறந்த மன்னர் பரூக் கண்ணீரும் கம்பலையுமாக இளம் மனைவியுடனும் ஏழுமாதக் குழந்தையுடனும் எகிப்திலிருந்து வெளியேறி அன்னிய நாட்டில் அடைக்கலம் புகும்படி நேர்ந்து விட்டது.

* * *

ஈடு இணையில்லாத இயற்கை அதிசயங்களும் செயற்கை அற்புதங்களும் சிற்பக் காட்சிகளும் நிறைந்தது எகிப்து நாடு. இப்போது அத் தேசம் அரசியல் உற்பாதங்களுக்கும் சூழ்ச்சிகளுக்கும்கூட தான் உலகத்தில் உள்ள மற்ற எந்த நாட்டுக்கும் சளைத்ததல்ல என்று காட்டி விட்டது.

சென்ற அரை நூற்றாண்டாக எகிப்தின் சரித்திரத்தைக் கவனிப்போர் ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ளலாம்.


அங்கு 1801-ம் ஆண்டில் பிரிட்டிஷ் ஆதிக்கம் ஏற்பட்டது. அதிலிருந்து எகிப்தியர்கள் மேற்படி ஆதிக்கத்தைத் தகர்ப்பதற்குப் படாதபாடு பட்டனர். பிறகு பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு எகிப்து மன்னர்கள் உடந்தையாக இருக்க முற்பட்டதால், எகிப்திய மக்கள் பல ஆண்டுகள் வரையில் மாபெரும் சுதந்திரப் போராட்டத்தை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஒருபுறம் பிரிட்டிஷ் 'ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களுக்கு ஆதரவாக எகிப்து மன்னர் கோஷ்டியும் கச்சை கட்டிக் கொண்டு நின்றனர். மற்றொருபுறம் அவர்களை எதிர்ப்பதற்காக எகிப்து பார்லிமெண்டும் ஜனங்களும் ஏகோபித்து எழுந்தார்கள்.

எகிப்து நாட்டின் தந்தை எனப் பிரசித்தி பெற்ற ஜக்லூல் பாஷா காலத்திலிருந்து எகிப்தியர்களின் சுதந்திரப் போராட்டம் ஆரம்பமாயிற்று. மன்னர் தமது இஷ்டப்படி பார்லிமெண்டைக் கூட்டுவதும் கலைப்பதும் தினசரி நிகழ்ச்சிகளாயின.

அதன் காரணமாக, எகிப்தின் சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட வப்துக் கட்சியினர் நாளுக்கு நாள் அதிக பலமும் செல்வாக்கும் பெற்றனர்.

## உண்மையாயிற்று




சில மாதங்களுக்கு முன் எகிப்து பிரதம மந்திரி நஹாஸ் பாஷாவைப் பரூக் மன்னர் பதவியிலிருந்து விலக்கி விட்டார். அதே கதி பிறகு பரூக் மன்னருக்கும் ஏற்படலாம் என்று குறிப்பிட்டு 3-2-1952 "கல்கி" இதழில் வெளியாகியிருந்த மேற்கண்ட கார்ட்டூன் படம் இப்போது உண்மையாகிவிட்டது.

---

அவர்களுடைய போராட்டத்தின் பலனாக 1922-ல் பிரிட்டனின் ஆதிக்கத்திலிருந்து எகிப்து விடுதலை அடைந்தது. எனினும் எகிப்தில் உள்ள கேந்திர ஸ்தானங்களில் இன்றளவும் பிரிட்டிஷ் துருப்புகள் இருந்து வருவதால், எகிப்து பூரண சுதந்திரம் பெற்றது என்று சொல்வதற்கில்லை.

இன்று எகிப்தில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு அதுவும் ஒரு முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது.

மன்னர் பரூக் காலப் போக்கை உணர்ந்து தமது ஆட்சி முறையைச் சீர்திருத்திக் கொண்டிருப்பாராயின், எகிப்திய மக்களின் நன்மதிப்புக்குப் பாத்திரர்களான தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டிருப்பாராயின், அந்த நாட்டில் இன்றைய விபரீதம் ஏற்பட்டிராது.

எகிப்தில் முடியரசு அடியோடு மறைந்து விடவில்லை என்பது உண்மையே. பரூக் மன்னரின் ஆண் குழந்தையைப் புதிய மன்னராகப் பிரகடனம் செய்திருக்கிறார்கள்.

எனினும் அந்தக் குழந்தை ஆட்சி பீடத்துக்கு வரும் வரையில் எகிப்து அரசியலில் எத்தகைய மாறுதல்கள் ஏற்படும் என்பதை யாராலும் சொல்ல முடியாது.

இன்று மத்திய கேந்திர நாடுகளில் ஒன்றாவது அரசியல் உற்பாதங்களிலிருந்தும் பொருளாதார நெருக்கடிகளிலிருந்தும் விடுபட்டிருக்க வில்லை.

போர்த் தீக்கு இலக்கான பாலஸ்தீனத்தில் இன்னும் பூரண அமைதி ஏற்படவில்லை. பாரசீகத்திலும் முடியரசுக்கு ஆபத்து ஏற்படுமோ என்ற நிலைமை உண்டாகி யிருக்கிறது. சிரியாவிலோ தினசரி இராணுவப் புரட்சிகள் ஏற்பட்டு, சர்க்கார் கைமாறி வருகிறது. டிரான்ஸ் ஜோர்டனில் மன்னர் யார் என்பதே நிச்சயமாகவில்லை.

எனினும் எகிப்தில் இரத்தக் களறியில்லாமல் இராணுவப் புரட்சியை நடத்துவதில் வெற்றி பெற்ற ஜெனரல் முகமது நஜீப் தாம் எகிப்து அரசியலில் எவ்வித மாறுதலும் செய்யப் போவதில்லை என்று பிரகடனம் செய்திருக்கிறார். எகிப்து ஜனநாயக முடியரசாகவே நிகழ்ந்து வரும் என்று உறுதி கூறியிருக்கிறார். எகிப்து அரசியலிலோ உள் நாட்டுப் பிரச்னைகளிலோ வெளிநாட்டுப் பிரச்னைகளிலோ இராணுவம் தலையிடாது என்றும் அறிவித்திருக்கிறார்.

இதெல்லாவற்றுக்கும் மேலாக ஜெனரல் நஜீப், நஹாஸ் பாஷா போன்ற வப்துக் கட்சித் தலைவர்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாட முற்பட்டிருப்பதால் எகிப்தில் ஏற்பட்டுள்ள சூறாவளி இத்துடன் அடங்கி விடக்கூடும்.

# போலீஸ் உதவியினால் விவசாயம் நடக்குமா?

தஞ்சை ஜில்லாவில் சில இடங்களில் பட்டாதார்களுக்கும் உழவுத் தொழிலாளருக்கும் தகராறுகள் ஏற்பட்டன. குழப்பம் ஏற்படாமல் தடுக்கப் போலீஸார் வந்தனர். சிற்சிலர் கைது செய்யப்பட்டனர். பிறகு அவ்விடங்களில் அமைதி நிலவி வருகிறது.—இத்தகைய செய்திகளைத் தினப் பத்திரிகைகளில் படிக்கிறோம்.

இம்மாதிரி சம்பவங்கள் அருமையாகவும் அபூர்வமாகவும் இருப்பதை நினைத்துத் திருப்தி அடைய வேண்டியதா யிருக்கிறது.

போலீஸ் உதவிகொண்டு இராஜ்ய நிர்வாகம் செய்யலாம்; போலீஸ் உதவிகொண்டு கொலை, களவு முதலிய குற்றங்களுக்குப் பரிகாரம் தேடலாம்; போலீஸ் உதவிகொண்டு குழப்பம்—கலகம் நேரிடாமலும் பார்த்துக் கொள்ளலாம்.

ஆனால் வேறு சில காரியங்கள் போலீஸ் உதவி கொண்டு சாதிக்க முடியாது.

போலீஸ் உதவியை வைத்துக்கொண்டு தேர்தல் பிரசாரம் செய்ய முடியாது; அப்படிச் செய்தாலும் வெற்றிகரமாகச் செய்ய முடியாது.

அம்மாதிரியே போலீஸ் உதவியை நம்பி விவசாயமும் நடத்த முடியாது.

ஏதோ சிறிது காலம் சமாளிக்கலாம்; நீடித்து நல்ல முறையில் நடத்த முடியாது.

பட்டாதார்களுக்கும் உழவர்களுக்கும் சுமுகமான சம்பந்தம் நிலைத்திருந்தால் மட்டும் விவசாயம் நல்ல முறையில் நீடித்து நடத்த முடியும்.


• • •

தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த நிலச் சொந்தக்காரர்கள் தங்கள் பழைய அநுபவங்களைச் சிறிது நினைத்துப் பார்க்க வேண்டும்.

வருங்காலத்தில் நேரக்கூடியவைகளையும் தீர்க்க திருஷ்டியுடன் ஆலோசித்துப் பார்க்க வேண்டும்.

பெரிய காரியத்தைச் சின்னக் காரியத்துக்கு உவமையாகச் சொல்லுவதென்றால், எகிப்து மன்னர் இராஜ்யத்தைத் துறந்து தன் சொந்த நாட்டை விட்டே செல்ல நேர்ந்த சமீப நிகழ்ச்சியைக் கூட அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

# சகோதரச் சண்டை!




நேபாள மந்திரி சபை விவகாரத்தில் கொய்ராலா சகோதரர்களிடையே சச்சரவு அதிகரித்து வருகிறது. அதைத் தீர்த்து நியாயம் வழங்க ஸ்ரீமான் குரங்கார் அழைக்கப்பட மாட்டார் என்று கருதுகிறோம்.

---

மாநில மன்னர்களின் உதாரணம் சிறுநிலச் சொந்தக்காரர்களுக்கும் ஓரளவு உபயோகப்படக் கூடியதுதான் அல்லவா!

சில வருஷங்களுக்கு முன்பு தஞ்சை ஜில்லாவுக்கு மலபார் போலீஸ் படை தருவிக்கப் பட்டது. அப்போது அமைதியை நிலைநாட்ட மலபார் போலீஸார் உதவியாக இருந்தார்கள். ஆனால் அவர்கள் செய்த காரியங்கள் பின்னால் தேர்தலின் போது பல விபரீத விளைவுகளை உண்டாக்கின.

அம்மாதிரி இப்போது போலீஸ் உதவியை அதிகமாக எதிர்பார்ப்பதும் பின்னால் அத்தகைய விபத்துக்கள் அதிகம் விளைவதற்கு ஏதுவாகக் கூடும் அல்லவா!

ஆகையால், கூடியவரையில் போலீஸ் உதவியை நாடாமல் பட்டாதார்கள் உழவர்களுடன் ஏற்படும் தகராறுகளைச் சிநேக முறையில் தீர்த்துக் கொள்ள முயல்வதுதான் நலம்.

உலகமெங்கும் நில உரிமை சம்பந்தமான சீர்திருத்தங்கள் ஏற்பட்டு வருகின்றன. பல இடங்களில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன.

அத்தகைய மாறுதல்கள் முன்பின்னாக இம் மாகாணத்திலும் ஏற்பட்டே தீரும். நிலச் சொந்தக்காரர்கள் இப்போது தாங்களாகவே முன்வந்து அத்தகைய சீர்திருத்தங்களுக்கு அடிகோலுவது எல்லாருக்கும் நன்மையாகும்.

* * *

பட்டாதார்கள் — உழவர்கள் தகராறுகளில் போலீஸ் உதவியை நாடுவதைக் காட்டிலும் பொறுப்பு வாய்ந்த காங்கிரஸ் தலைவர்களின் உதவியை நாடிச் சமரசமாக தீர்த்துக்கொள்ள முயல்வது மிக மிக உத்தமம்.

இது விஷயத்திலும் நிலச் சொந்தக்காரர்கள் பழைய அநுபவத்தை எண்ணிப் பார்த்து எச்சரிக்கை அடைய வேண்டும்.

சென்ற தேர்தலுக்கு முன்னால் பலவிதங்களில் அவர்களுக்குக் காங்கிரஸ் சர்க்கார்மீது அதிருப்தி கொள்ளக் காரணங்கள் இருந்தன. அதனால் தேர்தலின்போது "யார் ஜயித்தால் என்ன!" என்று அசட்டையா யிருந்து விட்டார்கள். அந்த அசட்டையிலிருந்து அவர்கள் எதிர்பாராத விபரீத விளைவுகள் ஏற்பட்டன.

நியாயமான அளவுக்கு நிலச் சொந்தக்காரர்களின் உரிமைகளை ராஜாஜி சர்க்கார் பாதுகாப்பார்கள் என்று அவர்கள் நம்ப வேண்டும். சீர்திருத்தங்கள் செய்தால் எல்லாருடைய நன்மைக்காகவுமே செய்வார்கள் என்றும் நம்பவேண்டும். அவ்விதம் நம்பி, எல்லா விதங்களிலும் காங்கிரஸையும் ராஜாஜி சர்க்காரையும் தீவிரமாக ஆதரித்துப் பலன்தேடிக் கொடுக்க வேண்டும்.

அற்ப காரணங்களை மனதில் வைத்துக் கொண்டு, தீர்க்க திருஷ்டியில்லாமல், நிலச் சொந்தக்காரர்கள் இப்போது அசட்டையா யிருந்தாலும் சரி, ராஜாஜி மந்திரி சபையை விரோதித்து முட்டுக் கட்டை போட்டாலும் சரி, பின்னால் ஏற்படக் கூடிய விளைவுகள் பன்மடங்கு அவர்களுக்குப் பாதகமாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# மடங்களின் மதப் பிரசாரம் எங்கே நடப்பது நல்லது?

நமது புராதன மடாலயங்களின் தலைவர்கள் சிறிது காலமாக விழிப்படைந்திருக்கிறார்கள். உலகத்தோடு ஒட்டி ஒழுகவும் காலத்துக்கேற்ற பணிகளைச் செய்யவும் முன் வருகிறார்கள். சிறந்த தமிழ் நூல்களை நல்ல முறையில் வெளியிடுகிறார்கள். தமிழ் மணம் கமழும் பெயர்களுடனே சமய மகாநாடுகளைக் கூட்டிச் சமயப் பிரசாரம் தீவிரமாகச் செய்து வருகிறார்கள். — இவையெல்லாம் பாராட்டக் கூடிய காரியங்கள் தான்.

சென்னைமா நகரில் சமீபத்தில் பல தினங்கள் தொடர்ந்தாற்போல் சமயப் பிரசாரக் கூட்டங்கள் நடந்தன. தர்மபுர மடாலயத்தின் ஆதீனத்தின் கீழ் அவை நடைபெற்றன. செந்தமிழ்ப் புலவர்களும் பிரமுகர்களும் அக்கூட்டங்களில் கலந்து கொண்டனர். தமிழ் மொழியிலுள்ள அருமையான சமயப் பாடல்களில் பொதிந்திருக்கும் கருத்துக்களை எடுத்துரைத்தார்கள்.

சென்னை போன்ற நகரங்களில் இத்தகைய சமயப் பிரசாரக் கூட்டங்களை நடத்துவது மடாலயங்களின் திருப்பணியைப் பத்திரிகைகளின் மூலம் பிரசித்தி யடையச் செய்வதற்குச் சாதனமாகும். இதுவும் அவசியமானதுதான். ஆனால் மொத்தத்தில் பலன் குறைவு என்றே சொல்ல வேண்டும். தெரிந்தவர்களுக்குத் தெரிந்த விஷயங்களைத் திரும்பத் திரும்பக் கூறுவதற்கே இக் கூட்டங்கள் பெரிதும் பயன் பட்டன.

சமயப் பிரசாரக் கூட்டங்கள் நல்ல பலன் அளிப்பதற்கு அவற்றை எங்கே கூட்ட வேண்டும்! கிராமங்களில் கூட்ட வேண்டும். முக்கியமாக, மடாலயங்களின் ஆதீனத்தின் கீழ் உள்ள கிராமங்களில் கூட்ட வேண்டும்.

தர்மபுரம் — திருவாவடுதுறை முதலிய மடாலயங்களின் ஆதிக்கத்தின் கீழ் அநேக கிராமங்கள் இருக்கின்றன. பல்லாயிரக் கணக்கான ஏக்கரா விஸ்தீரணமுள்ள நிலம் இருக்கிறது. இந்த நிலங்களில் சாகுபடி செய்யும் உழவர் குடும்பத்தினர் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள்.

இவர்களிடையே முக்கியமாக சமயப் பிரசாரம் செய்யப்பட வேண்டும்.

மடாலயங்களின் ஆதிக்கத்தில் வேலை செய்யும் பல்லாயிரக்கணக்கான உழவர்களிடையே 'கம்யூனிஸ்ட்' பிரசாரமும் நாஸ்திகப் பிரசாரமும் நடைபெற விட்டு விட்டுச் சென்னைமா நகரில் வந்து சமயப் பிரசாரம் செய்வது அவ்வளவு விவேகமென்று சொல்ல முடியாது.

மடாலயங்களின் ஆதிக்கத்திலுள்ள கிராமங்களில் சமயப் பிரசாரம் செய்வதற்கேற்ற சூழ்நிலை இப்போது இல்லை.

அதற்குக் காரணம் உழவுத் தொழிலாளரிடையே தங்கள் உரிமைகள் சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் அதிருப்தி தான்.

மடாலயங்களுக்கும் அவற்றுக்குச் சொந்தமான நிலங்களில் பயிரிடுவோருக்கும் நடுவில் குத்தகைதார்கள் சிலர் ஏற்பட்டிருக்கிறார்கள்.

குத்தகைதார்களினால் உழவர்களின் அதிருப்தி வளர்ந்து வருகிறது.


குத்தகை எடுத்தவர்கள் முடிந்த வரையில் தங்களுடைய லாபத்தைப் பெருக்கிக் கொள்ளப்

## பள்ளத்தில் விழ முடியாது




காஷ்மீரும் இந்தியாவும் தங்கள் நல்லுறவு சம்பந்தமாக ஒரு சுமுகமான முடிவுக்கு வந்திருக்கின்றன. இதன் பலனாக, காஷ்மீர் அத்துமீறிச் சென்று படுகுழியில் விழாமல் காப்பாற்றப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## இன்றைக்கு ஜலம்: நாளைக்குப் பழம்




பார்ப்பது இயல்புதான். அவர்களைக் குற்றம் சொல்வதிலும் ஒன்றும் பயன் இல்லை.

ஆனால் நிலங்களில் பாடுபட்டு உழைக்கிறவர்கள், தங்கள் உழைப்பின் பலனை நடுவில் உள்ளவர்கள் கொண்டு போகிறார்களே என்று ஆத்திரப்படுவதும் இயல்பே அல்லவா!

நிலங்களில் உழுது பயிரிடுகிறவர்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்குவதில் தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்களைக் காட்டிலும் மடாதிபதிகள் முதன்மையாக நிற்க வேண்டியது அவசியம்.

அப்படி அவர்கள் முன்னால் நின்று உழவர்களுடைய நியாயமான கோரிக்கைகளைப் பூர்த்தி செய்தால், அவர்களுடைய சமயப் பிரசாரத் தொண்டும் அந்தக் கிராமங்களில் வெற்றி அடையும். அதுவே இந்த நாளில் மடாதிபதிகள் செய்ய வேண்டிய சமயப் பிரசாரமும் ஆகும்.

# பத்திரத்துக்குப் பத்திரம்! லாபத்துக்கு லாபம்!

நேயர்களில் யாரிடமாவது ஐந்து கோடி ரூபாய் இருக்கிறதா! இருந்தால் சொல்லுங்கள். அதைப் பத்திரமாகவும் லாபகரமாகவும் போட்டு வைப்பதற்கு வழி சொல்லுகிறோம்.

ஐந்து கோடி இல்லாவிட்டால் போகட்டும்; நூறு ரூபாயாவது இருக்கிறதா! அதையும் பத்திரமாகவும் லாபகரமாகவும் வைத்திருக்க உபாயம் சொல்லுகிறோம்.

சென்னை அரசாங்கத்தார் நம்மிடமிருந்து கடன் கேட்கிறார்கள். மிக மிக உத்தமமான காரியத்துக்காகக் கேட்கிறார்கள். வருஷம் ஒன்றுக்கு நாலு ரூபாய் விகிதம் வட்டி தருவதாகவும் சொல்கிறார்கள். தலைமுறை தலைமுறையாக இந்த நாட்டில் வரப்போகும் நம் சந்ததிகள் வாழ்த்தக் கூடிய காரியங்களுக்காகக் கேட்கிறார்கள்.

மொத்தம் ஐந்து கோடி ரூபாய்தான் இப்போது கேட்கிறார்கள். லட்சக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலும் கொடுக்கக் கூடியவர்கள் கொடுக்கலாம். குறைந்த பட்சமாக நூறு ரூபாய் உள்ளவர்களும் கொடுக்கலாம்.


நாம் கடன் கொடுக்கும் பணத்தைக் கொண்டு சர்க்கார் மின்சாரத் திட்டங்களையும் அணைக்கட்டுத் திட்டங்களையும் நிறைவேற்றப் போகிறார்கள். அவை நாட்டுக்கும் நம் சந்ததிக்கும் நிரந்தரமான பலனை அளிக்கப் போகின்றன.

பல வருஷங்களுக்கு முன்னால் தீர்க்க தரிசனமுள்ள சிலர் மேட்டூர் அணைக்கட்டுத் திட்டத்தையும், பைக்காரா மின்சாரத் திட்டத்தையும் அமைத்தார்கள். அவற்றின் பலனை இன்று நாம் அனுபவிக்கிறோம். மேட்டூர் அணைக்கட்டின் காரணமாகவே, மழை பெய்யாத வறட்சியான காலங்களிலும் காவேரி நதியில் ஓரளவு தண்ணீர் நிரந்தரமாக வருகிறது. அதனாலேயே தமிழ் நாடு சென்ற ஐந்து வருஷத்தில் கொடிய பஞ்சத்தில் கஷ்டப்படாமல் காப்பாற்றப் பட்டு வருகிறது.

அதைப் போல் நாட்டுக்கு உபயோகமான பல திட்டங்கள் இருக்கின்றன. அவற்றை நிறைவேற்ற இந்திய சர்க்கார் பணம் கொடுத்து உதவத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் இந்த மாகாண வாசிகளும் சுய உதவி செய்து கொள்ள முன்வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

சென்னை அரசாங்கத்தின் பொருளாதார நிலை மிகத் திருப்திகரமானது என்பது பிரசித்தம். ஆகையால், கடன் கொடுக்கும் தொகையைப் பற்றி யாதொரு கவலையும் இல்லை.

இதைக் காட்டிலும் உபயோகமான, பத்திரமான முறையில் பணத்தைப் போட்டு வைக்க முடியாது. நூறு ரூபாயும் அதற்கு மேலும் பணம் உள்ள நேயர்கள் எல்லாரும் "ராஜாஜி சர்க்காருக்குக் கடன் கொடுத்து உதவினோம்" என்ற பெருமையை அடையுமாறு கோருகிறோம்.




## அத்தியாயம் 41

# மதுராந்தகன் நன்றி

முதன் மந்திரியின் கரம் மதுராந்தகன் மேல் பட்டதும் அவன் அலறினான்.

"ஐயோ! அப்பா! செத்தேன்! என்னைத் தொட வேண்டாம். என் கால்கள்! போச்சு! போச்சு!" என்று கூவினான்.

அநிருத்தர் அவனைத் தூக்குவதை நிறுத்தி விட்டு, "இளவரசே! தங்களுக்கு என்ன நேர்ந்தது? தங்கள் கால்களுக்கு என்ன நேரிட்டது?" என்று கவலையுடன் கேட்டார்.

"என் கால்கள் முறிந்தே போய் விட்டன. நடக்க முடியவில்லை; நிற்கவும் முடியவில்லை!"

முதன் மந்திரி திரும்பிப் பார்த்து, "அடே! பல்லக்கை இவ்விடம் கொண்டு வாருங்கள்!" என்று தம் ஆள்களுக்குக் கட்டளையிட்டார்.

பின்னர், "ஐயா! இந்த விபத்து எப்படி நேர்ந்தது? தாங்கள் மழையில் தனியாய்க் கிடக்கும் காரணம் என்ன? தங்களோடு வந்த பரிவாரங்கள் எங்கே? தங்களை இவ்விதம் விட்டுவிட்டு அவர்கள் எப்படிப் போகத் துணிந்தார்கள்? அவர்களுக்கு என்ன தண்டனை விதித்தாலும் போதாதே!" என்றார்.

"முதன் மந்திரி! யாரையும் தண்டிக்க வேண்டாம்! யார் பேரிலும் குற்றம் இல்லை. மாலை நேரத்தில் குதிரை மேல் ஏறிக் கொண்டு நான்தான் தனியாகக் கிளம்பினேன். நதிக்கரை யோரமாகப் போய்க்கொண்டிருந்தேன். திடீரென்று மழை பிடித்துக் கொண்டது. ஒரு பெரிய இடி இடித்து மின்னல் மின்னியது. குதிரை மிரண்டு ஓடியது. நான் இந்த மரத்தின் கிளையில் சிக்கிக் கொண்டு கீழே விழுந்து விட்டேன். குதிரை எங்கேயோ போய் விட்டது. விழுந்த வேகத்தில் கால் முறிந்து விட்டதோ அல்லது சுளுக்கிக் கொண்டு விட்டதோ தெரியவில்லை. எழுந்து நிற்கவும் முடியவில்லை. நல்ல வேளையாகத் தாங்கள் இச்சமயம் இங்கு வந்தீர்கள்!"

"ஏதோ தங்களுடைய தந்தை, மகானாகிய கண்டராதித்த தேவர் செய்த புண்ணியந்தான், இந்த மட்டும் நான் இங்கே வரும்படி நேர்ந்தது! கொஞ்சம் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்திருங்கள். பல்லக்கில் தங்களை ஏற்றி விடுகிறேன். மற்ற விவரங்கள் எல்லாம் நாதன் கோவிலில் அடியேனின் இல்லத்துக்குப் போன பிறகு கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்" என்றார் அநிருத்தர்.

பல்லக்கு அருகில் கொண்டு வந்து இறக்கப் பட்டதும் முதன் மந்திரி இளவரசரை மெதுவாகப் பிடித்துத் தூக்கிப் பல்லக்கினுள் கிடத்தினார்.

ஆட்களிடம், பல்லக்கைத் தூக்கிக் கொண்டு மெள்ள மெள்ள அசங்காமல் போக வேண்டும் என்று கட்டளையிட்டார். தாமும் பல்லக்கின் அருகிலேயே தொடர்ந்தாற்போல் நடந்து சென்றார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் நாதன் கோவில் என்று வழங்கிய சுந்தர சோழ விண்ணகரத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அந்த ஊர்ப் பெருமாள் கோயிலுக்கு அருகில் முதன் மந்திரி அநிருத்தரின் மாளிகை ஒன்று இருந்தது. அதற்குள் இளவரசர் மதுராந்தகரைத் தூக்கிச் சென்று அங்கிருந்த கட்டிலில் கிடத்தினார்கள்.

விளக்கு வெளிச்சம் கொண்டு வரச் சொல்லிப் பார்த்ததில் கால் முறியவில்லை யென்றும் வெறும் சுளுக்குத்தான் என்றும் தெரிந்தது.

இளவரசர் கொண்டிருந்த பீதியும் சிறிது தெளிந்தது.

பெருமாள் கோவிலிலிருந்து வந்த பிரசாதங்களை இருவரும் அருந்தினார்கள்.

பின்னர் முதன் மந்திரி, "இளவரசே! இனி இரவு நிம்மதியாகத் தூங்குங்கள்! பொழுது விடிந்ததும் தங்கள் உசிதம் எப்படியோ அப்படிச் செய்யலாம். நான் தஞ்சைக்குத்தான் போகிறேன். என்னுடன் வருவதாயிருந்தால், தங்களைப் பத்திரமாய்க் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கிறேன்" என்றார்.

"ஐயா! தாங்கள் எனக்கு எவ்வளவோ தீங்கு செய்திருக்கிறீர்கள். அதற்கெல்லாம் பரிகாரம் இன்று செய்து விட்டீர்கள். இன்று எனக்குச் செய்த உதவியை என்றும் மறக்க மாட்டேன். அதற்கு எப்போதும் நன்றி செலுத்துவேன். ஒருவேளை இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் நான் அமரும்படி நேர்ந்தால் தங்களையே முதன் மந்திரியாக வைத்துக் கொள்வேன்!" என்றான் மதுராந்தகன்.

அநிருத்தர் அதிசயக் கடலில் முழுகிப் போனதாகப் பாவனை செய்து, "இளவரசே! சோழ குலத்துக்கு நான் கடமைப் பட்டவன். இந்தக் குலத்தைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் ஆலோசனை சொல்வதும் இயன்ற உதவி செய்வதும் என் கடமை. ஆகையால் தாங்கள் தனிப்பட எனக்கு நன்றி செலுத்த அவசியமில்லை. ஆனால் தங்களுக்கு நான் ஏதோ தீங்கு செய்திருப்பதாகச் சொன்னீர்களே! அதுதான் எனக்கு விளங்கவில்லை. நான் தங்களுக்கு மனமறிந்து எந்தத் தீங்கும் செய்ததாக ஞாபகமில்லை. தாங்கள் சற்றுப் பெரிய மனது செய்து தெரியப்படுத்தினால் அதற்குப் பிராயச் சித்தம் என்ன உண்டோ அதைச் செய்து விடலாம்!" என்றார்.

"ஐயா! அநிருத்தரே! தாங்கள் மகா கெட்டிக்காரர், அறிவாளி, இராஜதந்திர நிபுணர் என்பதெல்லாம் உலகமறிந்த விஷயம். ஆனால் தங்கள் கெட்டிக்காரத்தனத்தை என்னிடம் காட்ட வேண்டாம். தாங்கள் எனக்குச் செய்திருக்கும் தீங்கு எவ்வளவு கொடுமையானது என்பது எனக்குத் தெரியாது என்றும் எண்ண வேண்டாம். ஆனாலும் இன்று தாங்கள் எனக்குச் செய்த உதவியை முன்னிட்டு அதையெல்லாம் மறந்து விடப் போகிறேன். என்னுடைய நன்றியைத் தங்களுக்கு எந்த விதத்தில் தெரியப்படுத்தலாம் என்று சொல்லுங்கள். ஏதாவது பிரதி உபகாரம் செய்யக்கூடியது இருந்தால் கூறுங்கள்!"

அநிருத்தர் புன்னகை புரிந்து, "ஆம், இளவரசே! தங்கள் நன்றியைச் செலுத்த வழி ஒன்று இருக்கிறது. தங்களிடம் இந்தக் கிழவன் கோரவேண்டிய வரம் ஒன்றும் இருக்கிறது. இனி இம்மாதிரி குதிரை ஏறித் தனி வழியே கிளம்ப வேண்டாம். முன்னும் பின்னும் பரிவாரங்கள் சூழ ரதத்தில் பிரயாணம் செய்யுங்கள். அதை விடப் பல்லக்கில் பிரயாணம் செய்வது நலம். காலம் கெட்டிருக்கிறது. பல காரணங்களினால் மக்கள் மனக் கொதிப்பு அடைந்திருக்கிறார்கள். இன்றைக்குப் பழையாறையில் பார்த்தீர்களே! ஆகையால் திறந்த பல்லக்கில் பிரயாணம் செய்வதைக் காட்டிலும் மூடு பல்லக்கில் பிரயாணம் செய்வது இன்னும் நல்லது. பழுவூர் இளைய ராணியின் பல்லக்காக இருந்தால் ரொம்ப விசேஷமாயிருக்கும். யாரும் சந்தேகிக்கவே மாட்டார்கள்!" என்றார்.

மதுராந்தகன் அசந்து போனான். அவன் முகத்தில் மறுபடியும் பயத்தின் அறிகுறி காணப் பட்டது. சற்றுப் பொறுத்துச் சமாளித்துக் கொண்டு, "முதன் மந்திரி! என்ன வார்த்தை சொன்னீர்! பழுவூர் இளைய ராணியின் மூடு பல்லக்கில் என்னைப் பிரயாணம் செய்யச் சொல்வதின் கருத்து என்ன? என்னை அவமானப் படுத்துவது உமது நோக்கமா?......" என்றான்.


"இளவரசே! பழுவூர் ராணியின் பல்லக்கில் பிரயாணம் செய்வதைத் தாங்கள் அவமானமாகக் கருதுவதை நான் அறியேன். எப்போதிருந்து இந்த எண்ணம் தங்களுக்கு உண்டாயிற்று? முன்னே யெல்லாம் அடிக்கடி தாங்கள் அவ்விதம் போய்க் கொண்டிருப்பது வழக்கமா

யிருந்ததே? கடைசியாக, கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்குப் போய்த் திரும்பிய பிறகு இந்த நல்ல முடிவுக்குத் தாங்கள் வந்திருக்க வேண்டும்......''

மதுராந்தகன் மேலும் திகில் கொண்டான். அவன் முகத்தில் பயப் பிராந்தியின் சாயல் பரவிற்று.

''முதன் மந்திரி! கடம்பூர் மாளிகைக்கு நான்...... நான்......'' என்று தடுமாற்றத்துடன் ஏதோ சொல்லுவதற்கு ஆரம்பித்தான்.

''இளவரசே! கடம்பூர் மாளிகைக்குத் தாங்கள் ஆடி மாதம் பதினெட்டாம் பெருக்கு அன்று தனாதிகாரி பெரிய பழுவேட்டரையருடன் போயிருந்தீர்கள் அல்லவா? அதைத்தான் சொல்கிறேன். அப்போது தாங்கள் இளைய ராணியின் பல்லக்கிலே போய் விட்டுத் திரும்பினீர்கள். அது எனக்கு அவ்வளவாகப் பிடிக்க வில்லைதான். பல்லக்குப் பிரயாணம் என்னைப் போன்ற கிழவர்களுக்கு உகந்தது. தங்களைப் போன்ற இளைஞர்கள் யானை மீதோ குதிரை மீதோ பிரயாணம் செய்வதுதான் உசிதம். ஆனால் குதிரைப் பிரயாணத்துக்குத் தகுந்த பயிற்சி வேண்டும். தங்களுக்கு உடம்பு சரியானதும் நானே அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன்......''





"அன்பில் அநிருத்தரே! ஜாக்கிரதை! மேலும் மேலும் என்னை அவமானப் படுத்தும் வார்த்தைகளைச் சொல்லுகிறீர். இன்றைக்கு ஏதோ இந்த அசந்தர்ப்பம் நேரிட்டு விட்டபடியால் எனக்குக் குதிரை ஏற்றமே தெரியாது என்று முடிவு கட்டி விட்டீர். ஏதோ ஒரு சமயம் பல்லக்கில் சென்றபடியால் எப்போதும் பழுவூர் ராணியின் மூடு பல்லக்கில் நான் போவதாகச் சொல்லுகிறீர். உம்முடைய பிராயத்தையும் இன்றைக்கு நீர் எனக்குச் செய்த உதவியையும் நினைத்துப் பொறுத்தேன்......"

"இளவரசே! தங்களுடைய பொறுமை எனக்கு மிக்க மகிழ்ச்சி தருகிறது. 'பொறுத்தார் பூமி ஆள்வார்' என்பது முதுமொழி. தமிழகத்தின் மாபெரும் புலவர் என்ன கூறுகிறார்?

**'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை'**

நிலம் தன்னைத் தோண்டுகிறவர்களைப் பொறுத்துக் கொண்டிருக்கிறது. பொறுத்துக் கொள்வது மட்டுமா? தோண்டுகிறவர்களுக்குத் தூய தண்ணீரையும் அளித்து உதவுகிறது. பூமிக்கு உள்ள இந்த குணம் பூமியை ஆள நினைப்பவர்களுக்கும் இருக்க வேண்டும். என்னைப் போன்ற கிழவன் ஏதாவது அநுசிதமாகச் சொன்னாலும் பூமி ஆள விரும்பும் தாங்கள் பொறுத்துக் கொள்ளுவது தான் உசிதம்."

"ஐயா! என்ன சொல்கிறீர்? நான் இந்தச் சோழசாம்ராஜ்யத்தை ஆள விரும்புவதாகக் குற்றம் சாட்டுகிறீரா?" என்று கேட்டான் மதுராந்தகன். அவனுடைய உதடுகள் துடித்தன. புருவங்கள் நெரிந்தன. பயம் கோபமாகவும் ஆத்திரமாகவும் மாறிவந்ததென்பதற்கு அறிகுறிகள் தென்பட்டன.

ஆனால் முதன் மந்திரியோ சிறிதும் பதட்டமில்லாமல், "இளவரசே! குற்றம் சாட்டுகிறேன் என்று ஏன் சொல்கிறீர்கள்? தாங்கள் இந்தச் சோழ சாம்ராஜ்யத்தை ஆள விரும்பினால், அது எப்படிக் குற்றமாகும்? வீராதி வீரரான விஜயாலய சோழரின் குலத்தில் உதித்தவர் தாங்கள். மகானாகிய சிவஞான கண்டராதித்தரின் திருப்புதல்வர். இந்தச் சோழ சிம்மாசனம் ஏறுவதற்குத் தங்களுக்குப் பூரண உரிமை உண்டு. அதைத் தாங்கள் விரும்புவது குற்றம் எப்படி ஆகும்? அது குற்றம் என்றும், ஆகையால் அதற்காக இரகசியமான சதி முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்றும் யாராவது தங்களுக்கு யோசனை சொன்னால் அதைத் தாங்கள் நம்ப வேண்டாம். இளவரசே! இந்தக்

கிழவனுடைய வார்த்தையைக் கொஞ்சம் செவி சாய்த்துக் கேளுங்கள். தங்களுடைய பெற்றோர்களின் விருப்பம் ஒரு விதமாயிருந்தது. தாங்களும் அதற்கு இணங்கிச் சிவபக்தியில் ஈடுபட்டிருந்தீர்கள். இப்போது தங்கள் மனம் மாறியிருக்கிறது. அதைப் பற்றிக் குற்றம் கூற யாருக்கும் பாத்தியதை இல்லை. தங்களுடைய உரிமையைத் தாங்கள் பகிரங்கமாகக் கோரலாம். சக்கரவர்த்தியிடமே தங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்தலாம். அதை விடுத்து, கேவலம் காளாமுகக் கூட்டத்தாரின் ஆதரவைக் கோருவதற்காக அமாவாசை இருட்டில் தன்னந்தனியாகக் கொள்ளிடக் கரைக்குப் போக வேண்டிய அவசியமில்லை. அல்லது சம்புவரையர் மாளிகையில் அர்த்த ராத்திரியில் திருடர் கூட்டத்தைப் போல் கூட்டம் போட்டுச் சதிப் பேச்சுப் பேச வேண்டிய அவசியமும் இல்லை. இந்தமாதிரியெல்லாம் தங்களுக்கு யோசனை கூறுகிறவர்கள் தங்களுடைய பரம 'விரோதிகள் என்று வைத்துக் கொள்ளுங்கள்!"

**ம**துராந்தகன் பெருங் குழப்பத்துக்கு உள்ளானான். முதன் மந்திரிக்கு இவ்வளவு விஷயங்களும் தெரிந்திருக்கின்றன என்று எண்ணியபோது அவனுக்கு உண்டான வியப்புக்கு அளவில்லை. அதே சமயத்தில் பீதி ஒரு பக்கமும், பீதி காரணமான ஆத்திரம் ஒரு பக்கமும் பெருகிக் கொண்டிருந்தன.

"ஐயா! தங்களுக்கு இவையெல்லாம் எப்படித் தெரிந்தது? எந்தத் துரோகி என்னுடனும் சிநேகமாயிருப்பது போல் நடித்துக் கொண்டு தங்களிடமும் வந்து சொல்லிக் கொண்டிருக்கிறான்?" என்று கேட்டான்.

"தாங்கள் அதை அறிய முயல்வதில் பயனில்லை. இந்தப் பரந்த இராஜ்யமெங்கும் எனக்குக் கண்கள் இருக்கின்றன; காதுகளுமிருக்கின்றன. நான் அறியாமல் எதுவும் இந்த நாட்டில் நடைபெற முடியாது......"

"அப்படியானால், சக்கரவர்த்திக்கும் இவையெல்லாம் தெரியுமா?" என்று மதுராந்தகன் கேட்டான்.

"இல்லை; அவருக்குத் தெரியாது. என் கண்களும் காதுகளும் தெரிவிக்கும் எத்தனையோ இரகசியங்கள் என் நெஞ்சகத்தில் பதிந்து கிடக்கின்றன. அவசியமும் அவசரமும் நேர்ந்தால் ஒழிய அவை வெளியில் வரவே வரா......"

"ஆம், ஆம்; தங்களுடைய நெஞ்சகத்தில் எவ்வளவோ பயங்கரமான இரகசியங்கள் புதைந்து கிடக்கின்றன. அவை மட்டும் வெளியில் வந்தால், இந்தச் சோழ சாம்ராஜ்யமே நடுநடுங்கிப் போகாதா?" என்றான் மதுராந்தகன். அவனுடைய குரலில் இப்போது இதற்குமுன் இல்லாத கபடமும் வஞ்சமும் தொனித்தன.

முதன் மந்திரி அதைக் கவனித்தும் கவனியாதவர்போல் கூறினார்:—"சக்கரவர்த்தி என்னுடைய ஆப்த நண்பர். ஆனால் அவர் அறியாத இரகசியங்களும் என் நெஞ்சில் இருக்கின்றன. சுந்தர சோழர் கொடிய நோய் வாய்ப்பட்டிருக்கிறார். பல காரணங்களினால் அவர் மனம் ஏற்கெனவே புண்ணாகியிருக்கிறது. சிற்றரசர்களின் சதிச் செயலைப் பற்றி அவரிடம் சொல்லி மேலும் அவர் நெஞ்சைப் புண்படுத்த நான் விரும்பவில்லை. அதற்கு அவசியமும் ஏற்படவில்லை. இளவரசே! தங்களுடைய காரியங்களைப் பற்றிய வரையில், நான் சக்கரவர்த்தியிடம் ஒருநாளும் சொல்ல மாட்டேன் என்று தாங்கள் நம்பியிருக்கலாம்."

"ஐயா! அன்பில் அநிருத்தரே! இந்தப் பேதை மதுராந்தகன் பேரில் தங்களுக்குத் திடீரென்று இவ்வளவு அபிமானம் தோன்றக் காரணம் என்ன?" என்று மதுராந்தகன் கேட்டு விட்டு ஏளனச் சிரிப்புச் சிரித்தான்.

"இளவரசே! தங்களிடம் திடீரென்று எனக்கு அபிமானம் பிறந்து விடவில்லை. சுந்தர சோழரின் புதல்வர்களைப் போலவே தான் தங்களிடமும் நான் எப்போதும் அபிமானம் வைத்து வந்திருக்கிறேன். அதைக் காட்டிக் கொள்வதற்கு இதற்கு முன்னால் சந்தர்ப்பம் ஏற்படவில்லை......"

"இன்றைக்கு அச் சந்தர்ப்பம் கிடைத்தது; நான் குதிரைமேலிருந்து விழுந்து காலை ஒடித்துக் கொண்டதால் ஏற்பட்டது. ஆனாலும் சில நாளைக்கு முன்னாலேயென்றால், என்னை அந்த மரத்தடியிலேயே கழுத்தை நெரித்துக் கொன்று விட்டு வந்திருப்பீர்......"

"நாராயணா! நாராயணா! இது என்ன வார்த்தை, இளவரசே!"

"ஐயா! எனக்கு ஒன்றும் தெரியாது என்று எண்ண வேண்டாம். எதைச் சொன்னாலும் நம்பக் கூடிய அப்பாவி என்று நினைக்க வேண்டாம். நான் என் தாயாரின் கர்ப்பத்தில் இருந்தபோதே எனக்கு எதிராக நீர் சதி செய்யத்

தொடங்கினீர். நான் இந்தப் பூமியில் பிறந்ததும் என்னைக் கொன்று விடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தீர்......அதோ உம்முடைய முகத்தில் ஆச்சரியத்தின் அறிகுறியைக் காண்கிறேன். அதெல்லாம் எனக்கு எப்படித் தெரிந்தது என்று வியப்படைகிறீர். இல்லையா? இந்தச் சோழ நாட்டில் பயங்கர இரகசியங்கள் பலவற்றை அறிந்தவர் நீர் ஒருவர்தான் என்று எண்ண வேண்டாம்!"

அநிருத்தரின் முகம் இப்போது உண்மையாகவே அதிசயமான காட்சி அளித்தது. அதில் கணத்துக்கு ஒரு சாயல் தோன்றி மறைந்தது. கடைசியில் வருந்தி வருவித்துக் கொண்ட புன்னகையுடன் முதன் மந்திரி, "ஆம், இளவரசே! நான் அவ்விதம் இறுமாந்திருந்தது உண்மைதான். இன்றைக்குக் கர்வ பங்கமாயிற்று. தாங்கள் பிறந்தவுடனே சிசுஹத்தி செய்ய ஏற்பாடு நடந்திருக்கும் பட்சத்தில் தாங்கள் எப்படிப் பிழைத்தீர்கள்? அந்த இரகசியத்தையும் கூறிவிட்டால் கிருதார்த்தனாவேன்!" என்றார்.

"எனக்கு எவ்வளவுதான் தெரியும் என்று சோதிக்கிறீர் போலும்! நல்லது; சொல்கிறேன். சிசுஹத்தி செய்வதற்குத் தாங்கள் ஏற்பாடு செய்திருந்தவர்கள் குழந்தை பிறந்ததும் ஆணா, பெண்ணா என்று கூடப் பாராமல் அவசரப்பட்டு எடுத்துக் கொண்டு போனார்கள். பெண் குழந்தை என்று தெரிந்ததும் தங்களிடம் வந்து சொன்னார்கள். பிழைத்துப் போகட்டும் என்று அக்குழந்தையைக் கோயில் பட்டர் ஒருவரிடம் ஒப்புவித்து வளர்க்கச் சொன்னீர்கள். பெண் குழந்தை பிறந்த அரை நாழிகை நேரத்தில் நான் பிறந்தேன். அதை நீங்கள் எதிர் பார்க்கவே யில்லை. என்னுடைய ஜாதக பலமும் சரியா யிருந்தது. அதனால் நான் உயிர் பிழைத்தேன். தங்களுடைய திட்டம் தவறிப் போனதுபற்றி அறிந்த பிறகும், என்னைச் சிம்மாசனம் ஏற விடாமல் தடுப்பதற்குப் பல சூழ்ச்சிகள் செய்தீர்கள். என்னைச் சிவபக்தனாக அதாவது பைத்தியக்காரனாக வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்தீர்கள். அதிலும் தவறிப் போனீர்கள். நான் தாங்கள் விரும்பியது போல் அவ்வளவு முழுப் பைத்தியக் காரனாகி விடவில்லை! — ஐயா! முதன் மந்திரியே! ஏன் இப்படி ஸ்தம்பித்துப்போய் உட்கார்ந்திருக்கிறீர்? இவையெல்லாம் உண்மையில்லையென்று ஒரே யடியாகச் சாதிப்பதுதானே?"

முதன் மந்திரி உண்மையில் ஸ்தம்பித்துப் போய்த்தான் உட்கார்ந்திருந்தார். ஒருவாறு பேசும் சக்தியை வருவித்துக் கொண்டு, "இளவரசே! தங்களுக்கு இவ்வளவெல்லாம் விவரங்கள் தெரிந்திருக்கும் போது நான் இல்லையென்று சாதிக்கப் பார்ப்பதில் என்ன பயன்?" என்றார்.

"ஆமாம்; பயனில்லைதான்! என்னிடம் திடீரென்று நீர் பரிவு கொண்டதன் காரணமும் எனக்குத் தெரியும். ஆதித்த கரிகாலனை உமக்குப் பிடிக்காது. அருள்மொழிவர்மனைச் சோழ நாட்டின் சிம்மாசனத்தில் ஏற்றிவைக்க எண்ணியிருந்தீர். அவனைக் கடல்கொண்டு விட்டதனால் இப்போது என்னிடம் பரிவு கொண்டிருக்கிறீர்! ஆனாலும் ஒன்று சொல்லுகிறேன். முன்னர் எனக்கு நீர் செய்த தீங்குகளை யெல்லாம் மறந்து விடப் போகிறேன். இன்று நீர் எனக்குச் செய்த உதவிக்கு நன்றியும் செலுத்துவேன். இன்றுமுதல் நீர் என் கட்சியில் இருப்பதாகச் சொல்லும் பட்சத்தில், நான் சிம்மாசனம் ஏறியதும் உம்மையே முதன் மந்திரியாக வைத்துக்கொள்ளவும் விரும்புகிறேன்!" என்றான் மதுராந்தகன்.

"இளவரசே! தங்களுடைய வார்த்தைகள் என்னைப் புளகாங்கிதம் அடையச் செய்கின்றன!" என்றார் அன்பில் அநிருத்தப் பிரம்மராயர்.

## அத்தியாயம் 42

# சுரம் தெளிந்தது

நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் ஆச்சாரிய பிக்ஷுவின் அறைக்குப் பக்கத்து அறையில் பொன்னியின் செல்வன் மரக் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தான். மூன்று நாள் அவனுக்குக் கடும் சுரம் அடித்துக் கொண்டிருந்தது; பெரும்பாலும், சுயப் பிரக்ஞையே இல்லாமலிருந்தது. இந்த நாட்களில் பிக்ஷுக்கள் அவனைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டு வந்தார்கள். வேளைக்கு வேளை மருந்து கொடுத்து வந்தார்கள். அடிக்கடி

வாயில் தண்ணீர் ஊற்றிக் கொண்டு ஜாக்கிரதையாகப் பார்த்து வந்தார்கள்.

இடையிடையே எப்போதாவது சுய நினைவு தோன்றியபோது, தான் இருக்குமிடத்தைப் பற்றி அவன் எண்ணிப் பார்க்க முயன்றான். அவனுக்கு எதிரில் சுவரில் எழுதியிருந்த சித்திரக் காட்சி அவனுடைய கவனத்தைக் கவர்ந்தது. அந்தச் சித்திரத்தில் தேவர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள் காணப்பட்டார்கள். அவர்களில் சிலர் பலவித இன்னிசைக் கருவிகளை வைத்துக் கொண்டிருந்தார்கள். சிலர் வெண்சாமரங்களையும், வெண்கொற்றக் குடைகளையும் ஏந்திக் கொண்டிருந்தார்கள். மற்றும் சிலர் கரங்களில் பல வர்ண மலர்கள் உள்ள தட்டுக்களை ஏந்திக்கொண்டிருந்தார்கள். இந்தக் காட்சி தத்ரூபமாக இருந்தது. தேவர்களின் உருவங்கள் எல்லாம் உயிர் உள்ள உருவங்களாகத் தோன்றின. அடிக்கடி அக் காட்சிகளைப் பார்த்த பிறகு பொன்னியின் செல்வன் வானவரின் நாட்டுக்குத் தான் வந்து விட்டதாகவே எண்ணினான். அந்தத் தேவ யட்ச கின்னரர்கள் எல்லாரும் தன்னை வரவேற்க வருவதாகவும் எண்ணினான். சொர்க்க லோகத்துக்குத் தான் வந்து சேர்ந்தது எப்படி என்று யோசித்தான். அடர்த்தியான தாழைப் புதர்களும், அத்தாழைப் புதர்களில் பூத்திருந்த தங்க நிறத் தாழம்பூக்களும் இருபுறமும் நிறைந்திருந்த ஓடையின் வழியாக வான நாட்டுக்குத் தான் வந்திருக்க வேண்டும் என்று தோன்றியது. அந்த ஓடை வழி நினைவு வந்தபோது தாழம்பூக்களிலிருந்து வந்த நறுமணத்தையும் அவன் நுகர்வதாகத் தோன்றியது. ஓடையில் ஒரு படகில் ஏற்றித் தன்னை ஒரு தேவகுமாரனும் தேவகுமாரியும் அழைத்து வந்ததும் இலேசாக நினைவு வந்தது. தேவகுமாரன் சிவபக்தன் போலிருக்கிறது. இனிமையான தேவாரப் பாடல்களை அவன் அடிக்கடி பாடினான். தேவகுமாரி என்ன செய்தாள்? அவள் பாடவில்லை. அவள் அவ்வப்போது இரண்டொரு வார்த்தைகள் மட்டுமே கூறினாள். அதுவே தேவகானம் போலிருந்தது. ஆர்வமும் அன்பும் நிறைந்த கண்களால் தன்னை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாள். அவ்விருவரும் இப்போது எங்கே?

வானவர் நாட்டில் தேவர்கள், யக்ஷர்கள், கின்னரர்களைத் தவிர, புத்த பிக்ஷுக்களுக்கும் முக்கியமாக இடம் உண்டு போலும்! அவர்கள்தான் தேவலோகத்து அமுத கலசத்தைப் பாதுகாக்கிறவர்கள் போலும்! அடிக்கடி புத்த பிக்ஷு ஒருவர் அவனை நெருங்கி வருகிறார். அவனுடைய வாயில் சிறிது அமுதத்தை ஊற்றிவிட்டுப் போகிறார். தேவலோகத்தில் மற்ற வசதிகள் எவ்வளவு இருந்தாலும், தாகம் மட்டும் அதிகமாகவே இருக்கிறது. இன்னும் கொஞ்சம் அதிகமாகவே இந்தப் புத்த பிக்ஷு தன் வாயில் அமுதத்தை ஊற்றிவிட்டுப் போகக் கூடாதோ? தேவலோகத்தில்கூட ஏன் இந்த தரித்திர புத்தி!

ஒரு வேளை அமுதத்தை ஒரேயடியாக அதிகமாய் அருந்தக் கூடாது போலும்! இது அமுதமா? அல்லது ஒரு வேளை ஏதேனும் மதுபானமா? — சீச்சீ! பிக்ஷுக்கள் கேவலம் மதுவைக் கையினாலும் தொடுவார்களா? தன் வாயிலே தான் கொண்டு வந்து ஊற்றுவார்களா? இல்லையென்றால், ஏன் இப்படித் தனக்கு மயக்கம் வருகிறது? அமுத பானம் செய்த சிறிது நேரத்துக்கெல்லாம் ஏன் நினைவு குன்றுகிறது?......

மூன்று தினங்கள் இவ்வாறு பொன்னியின் செல்வன் வானவர் உலகத்திலும் நினைவே யில்லாத சூனிய உலகத்திலும் மாறி மாறிக் காலம் கழித்த பிறகு, நாலாம் நாள் காலையில் தூக்கத்திலிருந்து விழித்தெழுவதுபோல் எழுந்து, பூரண சுய நினைவு பெற்றான். உடம்பு பலவீனமாய்த்தா னிருந்தது; ஆனால் உள்ளம் தெளிவாக இருந்தது. எதிரே சுவரில் இருந்த உருவங்கள் சித்திர உருவங்கள் என்பதை அறிந்தான். அந்தத் தேவ யக்ஷ கின்னரர்கள் தன்னை வரவேற்பதற்காக அங்கே நிற்கவில்லை யென்றும், தேவலோகத்துக்கு விஜயம் செய்த பகவான் புத்தரை வரவேற்கிறார்கள் என்றும் அறிந்தான். மற்றொரு சுவரில் மேகங்கள் சூழ்ந்த வான வெளியில் புத்த பகவான் ஏறி வருவது போன்ற சித்திரம் எழுதியிருந்ததையும் கண்டான். புத்த விஹாரம் ஒன்றில் தான் படுத்திருக்கிறதை அறிந்து கொண்டான். எங்கே, எந்தப் புத்த விஹாரத்தில் என்று சிந்தித்தபோது, இலங்கையிலிருந்து தான் பிரயாணம் தொடங்கியதிலிருந்து நிகழ்ந்த சம்பவங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக நினைவு வந்தன. வந்தியத்தேவனும் தானும் அலைமோதிய கடலில் அலைப்புண்டு அலைப்புண்டு கை சளைத்துப் போனது வரையில் ஞாபகம் வந்தது. அப்புறம் ஒரே குழப்பமாக இருந்தது.

அச்சமயம் புத்த பிக்ஷு ஒருவர் அந்த அறைக்குள் வந்தார். வழக்கம்போல் கையில் அமிர்த கிண்ணத்துடன் வந்தார்! இளவரசன் அருகில் வந்ததும் பிக்ஷு அவனை உற்றுப் பார்த்தார். இளவரசன் கையை நீட்டிக் கிண்ணத்தை வாங்கி அதில் இருப்பது என்ன வென்று பார்த்தான். அது தேவலோகத்து அமுதம் இல்லை யென்று உறுதிப் படுத்திக் கொண்டான். மருந்து அல்லது மருந்து கலந்த பால் என்று தெரிந்து கொண்டான். பிக்ஷுவை நோக்கி, "சுவாமி! இது என்ன இடம்? தாங்கள் யார்? எத்தனை நாளாக நான் இங்கே இப்படிப் படுத்திருக்கிறேன்?" என்று கேட்டான்.

பிக்ஷு அதற்கு ஒன்றும் மறுமொழி சொல்லாமல் திரும்பிச் சென்றார். அடுத்த அறைக்கு அவர் சென்று "ஆச்சாரியரே! சுரம் நன்றாய்த் தெளிந்து விட்டது. நினைவு பூரணமாக வந்து விட்டது!" என்று கூறியது இளவரசன் காதில் விழுந்தது.

சிறிது நேரத்துக்கெல்லாம் வயது முதிர்ந்த பிக்ஷு ஒருவர் பொன்னியின் செல்வன் இருந்த அறைக்குள் வந்தார். கட்டிலின் அருகில் வந்து அவரும் இளவரசனை உற்றுப் பார்த்தார். பிறகு மலர்ந்த முகத்துடன், "பொன்னியின் செல்வ! தாங்கள் இருக்குமிடம் நாகைப் பட்டினம் சூடாமணி விஹாரம். கடுமையான தாபஜ் ஜுரத்துடன் தாங்கள் இங்கே வந்து மூன்று தினங்கள் ஆயின. தங்களுக்கு இந்த சேவை செய்வதற்குக் கொடுத்து வைத்திருந்தோம். நாங்கள் பாக்கியசாலிகள்!" என்றார்.

"நானும் பாக்கியசாலிதான். இந்தச் சூடாமணி விஹாரத்துக்கு வந்து பார்க்க வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தேன். எப்போதோ ஒரு சமயம் இந்த நகரின் துறைமுகத்துக்குப் போகும் போது வெளியிலிருந்து பார்த்திருக்கிறேன். தெய்வாதீனமாக இங்கேயே நான் வந்து தங்கி யிருக்கும்படி நேர்ந்தது. சுவாமி! எப்படி நான் இங்கு வந்து சேர்ந்தேன்? சொல்ல முடியுமா?" என்று அருள்மொழிவர்மன் கேட்டான்.

"இளவரசே! முதலில் தங்களுடைய கையில் உள்ள மருந்தைச் சாப்பிடுங்கள். எனக்குத் தெரிந்த விவரங்களைச் சொல்கிறேன்!" என்றார் பிக்ஷு.

இளவரசன் மருந்தைச் சாப்பிட்டு விட்டு, "ஐயா! இது மருந்து அல்ல; தேவாமிர்தம். என் விஷயத்தில் தாங்கள் எவ்வளவோ சிரத்தையுடன் கவலை எடுத்துச் சிகிச்சை செய்வித்திருக்கிறீர்கள். ஆனால் இதற்காகத் தங்களுக்கு நான் நன்றி செலுத்தப் போவதில்லை!" என்றான்.

ஆச்சாரிய பிக்ஷு புன்னகை புரிந்து, "இளவரசே! தாங்கள் நன்றி செலுத்த வேண்டிய அவசியமும் இல்லை. நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்வது பரமோத்தம தர்மம் என்று புத்த பகவான் அருளி யிருக்கிறார். நோய்ப் பட்ட பிராணிகளுக்குக் கூடச் சிகிச்சை செய்யும்படி புத்த தர்மம் கட்டளையிடுகிறது. தங்களுக்குச் சிகிச்சை செய்ததில் அதிக விசேஷம் ஒன்றுமில்லை. சோழ குலத்துக்கு நாங்கள் மிகவும் கடமைப் பட்டவர்கள். தங்கள் தந்தையார் சுந்தர சோழ சக்கரவர்த்தியும் தங்கள் திருத்


**புதுமைப் பித்தன் குடும்ப உதவி நிதிக்காக**

டி. கே. எஸ். சகோதரர்கள் நடிக்கும்

# ரத்த பாசம்

3-8-52 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு

சென்னை, ஒற்றைவாடைத் தியேட்டரில்

நன்கொடையாளர்கள்: ரூ. 25-0-0

கட்டணம்: ரூ. 10, 5, 3, ரூ. 1-8-0, 0-12-0

தமக்கையார் இளைய பிராட்டியும் புத்த தர்மத்துக்கு எவ்வளவோ ஆதரவு அளித்திருக்கிறார்கள். தாங்கள் இலங்கை அநுராதபுரத்தில் புத்த விஹாரங்களைப் புதுப்பித்துக் கட்ட ஏற்பாடு செய்ததும் எங்களுக்குத் தெரிந்ததே! அப்படியிருக்கும் போது, நாங்கள் செய்த இந்தச் சிறிய உதவிக்காகத் தங்களிடம் நன்றி எதிர்பார்க்கவில்லை....''

''ஆச்சாரியரே! நன்றி செலுத்துவது பற்றி அந்த முறையில் நான் கூறவில்லை. எனக்கு எப்பேர்ப்பட்ட கடும் ஜுரம் வந்திருக்க வேண்டும் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். இலங்கையில் இந்த ஜுரத்தினால் பீடிக்கப் பட்டவர்களின் கதியை நான் பார்த்திருக்கிறேன். நியாயமாக இதற்குள் நான் வானவர் உலகத்துக்குப் போயிருக்க வேண்டும். அங்கே தேவர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள் என்னை வரவேற்று உபசரித்திருக்கக் கூடும் அல்லவா? இன்று தேவர்-தேவியர்களுக்கு மத்தியில் உண்மையாகவே அமிர்தபானம் செய்து கொண்டு ஆனந்த மயமாய் இருப்பேன் அல்லவா? அதைத் தாங்கள் கெடுத்து விட்டீர்கள்! வானுலகத்தின் வாசல்வரையில் சென்ற என்னைத் திரும்ப இந்தத் துன்பம் நிறைந்த மண்ணுலகத்துக்குக் கொண்டு வந்து விட்டீர்கள். ஆதலின் எனக்குத் தாங்கள் நன்மை செய்ததாகவே நான் எண்ணவில்லை. ஆகையால்தான் தங்களுக்கு நன்றி செலுத்தப் போவதில்லை என்று கூறினேன்!''

ஆச்சாரிய பிக்ஷுவின் முகம் ஆனந்த பூரிப்பினால் மலர்ந்தது.

''பொன்னியின் செல்வ! தாங்கள் வானுலகத்துக்குப் போக வேண்டிய காலம் வரும்போது தேவேந்திரனும் பிற தேவர்களும் விமானங்களில் வந்து தேவ துந்துபிகள் முழங்கி மலர்மாரி பொழிந்து தங்களை அழைத்துச் செல்வார்கள். ஆனால் அந்தக் காலம் இன்னும் நெடுந் தூரத்தில் இருக்கிறது. இந்த மண்ணுலகில் தாங்கள் செய்ய வேண்டிய அரும்பெரும் காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன! அவற்றை முடித்து விட்டல்லவா வானுலகம் செல்வது பற்றி யோசிக்க வேண்டும்?'' என்றார்.

இதுகாறும் சாய்ந்து படுத்திருந்த பொன்னியின் செல்வன் நிமிர்ந்து உட்கார்ந்தான். அவனுடைய திருமுகத்தில் அபூர்வமான களை பொலிந்தது. அவனுடைய விசாலமான நயனங்களிலிருந்து மின் வெட்டுப் போன்ற ஒளிக் கிரணங்கள் அலை அலையாகக் கிளம்பி அந்த அறையையே ஜோதி மயமாகச் செய்தது.


''ஆச்சாரியரே! தாங்கள் கூறுவது உண்மை. இந்த மண்ணுலகில் நான் சில காரியங்களைச் சாதிக்க விரும்புகிறேன். அரும்பெரும் பணிகள் பல செய்து முடிக்க விரும்புகிறேன். இந்தச் சூடாமணி விஹாரத்தை ஒரு சமயம் வெளியிலிருந்து பார்த்தேன். அநுராதபுரத்திலுள்ள ஸ்தூபங்களையும் விஹாரங்களையும் பார்த்தேன். அங்கேயுள்ள அபயகிரி விஹாரத்தைப்போல் பெரிதாக இந்தச் சூடாமணி விஹாரத்தைப் புனர் நிர்மாணம் செய்யப் போகிறேன். அநுராதபுரத்தில் உள்ள பெரிய பெரிய புத்தர் சிலைகளைப் போன்ற சிலைகளை இந்த விஹாரத்திலும் அமைத்துப் பார்க்கப் போகிறேன். இன்னும், இந்தச் சோழ நாட்டிலுள்ள சிவாலயங்களை அம்மாதிரி புதுப்பித்துக் கட்டப் போகிறேன். இலங்கையிலுள்ள ஸ்தூபங்களையும் விஹாரங்களையும் பார்த்துவிட்டு இச்சோழ நாட்டிலுள்ள ஆலயங்களையும் நினைத்துப் பார்த்தால், எனக்கு உடலும் உள்ளமும் குன்றுகின்றன. வானளாவும் கோபுரத்தை உடைய மாபெரும் ஆலயத்தைத் தஞ்சாவூரில் நிர்மாணிக்கப் போகிறேன். அதற்குத் தகுந்த அளவில் மகாதேவருடைய சிலையைச் செய்து நிர்மாணிக்கப் போகிறேன். ஆச்சாரியரே! இந்தச் சோழ நன்னாட்டில் புத்த ஸ்தூபங்களும் சிவாலயங்களின் கோபுரங்களும் ஒன்றோடொன்று போட்டியிட்டு மேகமண்டலத்தை எட்டப் போகின்றன. ஆயிரமாயிரம் வருஷங்களுக்குப் பிறகு இந்தத் தெய்வத் தமிழ் நாட்டில் பிறக்கும் சந்ததிகள் அவற்றைக் கண்டு பிரமித்து நிற்கப் போகிறார்கள்!......''

இவ்வாறு ஆவேசம் கொண்டவன் போல் பேசி வந்த இளவரசன் உடலில் போதிய பலமில்லாமையால் கட்டிலில் சாய்ந்தான். உடனே ஆச்சாரிய பிக்ஷு அவனுடைய தோள்களைப் பிடித்துக் கொண்டு, கட்டிலில் தலை அடிபடாமல் மெள்ள மெள்ள அவனைப் படுக்க வைத்தார். நெற்றியில் கையினால் தடவிக் கொடுத்து, ''இளவரசே! தாங்கள் உத்தேசித்த அரும் பெரும் காரியங்களையெல்லாம் காலா காலத்தில் செய்து முடிப்பீர்கள். முதலில், உடம்பு பூரணமாய்க் குணமடைய வேண்டும். சற்று அமைதியா யிருங்கள்!'' என்றார்.



சோப்புகளுக்கு ராஜா
கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக கோத்ரெஜ் நெ. 1 சோப் அரசனாயிருந்து வருகிறது. தலைமுறை தலைமுறையாக உபயோகிக்கும் பலவித ஜனங்களே அதற்கு இப்பெருமையுள்ள பட்டத்தை அளித்திருக்கின்றனர். ஏனெனில் அது கிடைக்கக்கூடிய சிறந்த பொருள்களிலிருந்து வெகு சாமர்த்தியமாகத் தயாரிக்கப்படுகிறது. அதன் புதிய இனிய வாசனை, ஏராளமான நுரை, பெரிய சைஸ் (மார்கெட்டில் மிகப் பெரிய சோப்) அதையே எல்லோரும் விரும்பச் செய்கின்றன.
VEGETABLE TOILET SOAP
No. 1
SOAPS · OINTMENT · HAIR OIL · EAU DE COLOGNE
சுதேசி
மூலதனம்
நிர்வாகம்
தொழில்
முற்றிலும் சுத்தமானது - மிருகக் கொழுப்பற்ற தென்பதற்கு உத்தரவாதம்.
கோத்ரெஜ் சோப்ஸ், லிட்.
லிமிட்டெட்
மதராஸ்: 164, பிராட்வே: கொச்சி: 6/36, கல்வத்தி.
தாவர எண்ணெய்களினால் சோப்பு தயாரிப்பதில் முதன்மையானவர்கள்.


ஆகஸ்ட் வெளியீடு
தெவிட்டாத நகைச்சுவை!
உள்ளத்தை உருக்கும் உணர்ச்சிகள்
ததும்பிய படம்....
விஜயாவின்
கல்யாணம் பண்ணிப்பார்
டைரக்ஷன்...பிரசாத்
தயாரிப்பு...
நாகிரெட்டி...சக்ரபாணி




**பா**ல நாடக சபா என்ற எங்கள் நாடகக் கம்பெனி நாவலூர் என்ற நகரத்துக்கு வந்து சேர்ந்தது. புதுப் புது சமூக நாடகங்களை நடத்தி நாங்கள் சென்ற ஒவ்வொரு இடத்திலும் வெற்றிக் கொடி நாட்டிப் புகழ் மாலை சூடினோம். ஒவ்வொரு இடத்திலும் பொது மக்கள் அபிமானத்தைப் பெற்று நாலு மாதம் ஆறு மாதம் என்று முகாம்போட்டோம். பால நாடக சபாவின் சொந்தக்காரன் என்ற முறையில் கிடைத்த வெள்ளிக் கோப்பைகளும் மெடல்களும் பாராட்டுகளும் என் திறமைக்காக மட்டும் கொடுக்கப்பட வில்லை என்று எனக்குத் தெரியும். எனக்குக் கிடைத்த நடிக ரத்தினங்களுக்கும் பால நட்சத்திரங்களுக்கும் அந்தப் பெருமையில் பெரும் பாகம் சேரும்.

பத்து வயதுக்குட்பட்ட புத்திசாலிக் குழந்தைகளையே என் கம்பெனியில் சேர்த்துக் கொண்டேன். பெரியவர்களுக்கு நடிப்போ பாட்டோ சொல்லிக் கொடுப்பதைவிட இவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது சுலபம் என்பதை அனுபவத்தில் அறிந்தேன். இவர்களில் பலரும் வாலிபப் பருவத்தை அடைந்து நடிப்புக் கலைச் சுடர்களாகவும் கலாமணிகளாகவும் எங்கள் கம்பெனியில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தன் குழந்தைகள் எல்லாரையும் தகப்பன் சமமாகப் பாவிக்க வேண்டும் என்றாலும்கூட ஒரு குழந்தையிடம் அவனுக்கு விசேஷப் பிரியம் ஏற்படுகிறதல்லவா? அவ்விதமே பத்மாஸனியிடம் எனக்கு உயிர். அவள் எப்படி என் கம்பெனியில் சேர்ந்தாள் என்பது ஞாபகமில்லை. சுமார் பத்து வருஷங்களுக்கு முன் மழலைச் சொல் மாறாமல், பேசும் பொற் சித்திரமாக ஒரு தூர பந்துவால் என்னிடம் கொண்டு வந்து விடப்பட்ட அநாதைப் பெண் பத்மாவை என் சொந்த மகளைப் போலவே இன்றும் பாவித்து வருகிறேன். அவள் 'அப்பா!' என்று அமுதம் போன்ற குரலில் என்னைக் கூப்பிடும்போது குழந்தையில்லாக் குறையையும் நான் மறந்து விடுவேன். 'அப்பா!' என்று நாற்பது குழந்தைகள் என்னைப் பேரன்புடன் கூப்பிடும்போது பத்மா மீது விசேஷ அன்பு ஏற்படக் காரணம் அவள் சூடிகைதான். பாட்டோ கூத்தோ எதைச் சொல்லிக் கொடுத்தாலும் அது அப்படியே அவள் மனத்தில் பதிந்து விடும். மறு கணம் சொல்லிக் கொடுத்தபடியே பாடிக் காண்பிப்பாள்; ஆடிக் காண்பிப்பாள். அழகுத் தேவன் அவளுடைய நன்கமைந்த நாசியிலும், நீண்ட கரிய கண்களிலும், ரோஜா இதழ்களிலும், தளிர் மேனியிலும் கொலு வீற்றிருந்து ஆனந்தத் தாண்டவம் செய்து கொண்டிருந்தான்.

இழைந்த குரலில் பத்மா பாடும்போது உலகத்திலுள்ள சோகத்தையெல்லாம் அள்ளிக் கொட்டுவது போலிருக்கும். கன்னங்கள் குழிய அவள் கொஞ்சிப் பேசும் பொழுது சபையோர் உள்ளம் 'ஜிவ்' வென்று இறக்கை முளைத்துப் பறந்து இன்ப உலகம் செல்லும். எந்த பாகத்தில் பத்மா நடித்தாலும் அதில் கரகோஷம் வாங்காம லிருப்பதில்லை. அவளுடன் போட்டி போட்டுக் கொண்டு நடித்துக் கரகோஷம் பெறுவதில் இன்னும் சில முக்கிய நடிகர்களுக்கும் பரம குஷி.

பத்மாவுக்குப் பதினாறு வயது அப்போது. பிரும்மதேவனது கலைத் திறமைக்குக் காலதேவன் சோபை அளிக்கத் தொடங்கி விட்டான். அவள் அழகைக் காணவே கொட்டகையில் கூட்டம் தாங்காது. பத்மா புகழின் சிகரத்தைத் தொட ஆரம்பித்ததும் என் பொறுப்பும் கவலையும் அதிகமாயின.

நாங்கள் நாவலூருக்கு வந்து சேர்ந்ததும் எங்கள் வாழ்வில் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது. கொட்டகை தேடிப் பிடித்து மற்ற ஏற்பாடுகளும் முடிந்து விட்டன. நடிகர்களுக்குத் தேவையான சில ஆடைகள் வாங்க வேண்டியிருந்தது. அந்த ஊரில் பிரபல நெசவாளர் ஒருவர் கடையிலிருந்து வரவழைக்கப்பட்ட சில சரிகைப் புடவைகளைப் பத்மாஸனி பார்த்துக் கொண்டிருந்தாள். பல புடவைகளைப் பிரித்துப் பிரித்துப் பார்த்துத் தள்ளிக் கொண்டிருந்தாள். "எந்தப் புடவையும் பெண் பிள்ளை

களுக்குப் பூரண திருப்தி யளிக்காது. அதுவும் டிராமாக்காரப் பெண் பிள்ளைகளுக்கா திருப்தி யளிக்கப்போகிறது!'' என்று புடவை கொண்டு வந்த பிள்ளையாண்டான் சொன்னானாம்! குறும்புக்காரன் போலும்! பத்மாமணிக்கு வந்துவிட்டதாம் கோபம்! எல்லாப் புடவைகளையும் எடுத்துத் தூர எறிந்து விட்டாளாம். இந்தச் சம்பவம் எனக்குப் பிற்பாடுதான் தெரிய வந்தது. இது எவ்வளவு துரதிருஷ்டமான சம்பவம் என்பது எனக்குப் பின்னாலல்லவா தெரிந்தது?

கடைக்காரப் பையன் போன கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அந்தக் கடையின் எஜமானர் நாகரத்தினம் என்ற வாலிபனை பிரமாண்டமான புடவை மூட்டையுடன் எங்கள் ஜாகைக்கு வந்துவிட்டான். பையன் தான் மரியாதைக்குறைவாக நடந்துகொண்டதற்காகப் பத்மாவிடம் மன்னிப்புக் கேட்டான். அவள் நடிப்பைப் பல தடவை பார்த்து பரவசப் பட்டிருக்கிறானாம். அவள் நடிப்பைப் பார்ப்பதற்கென்றே பல நூறு மைல் தூரம் பிரயாணம் செய்வது உண்டாம். பத்மாவுக்குத் தன் கையினாலே நெய்த ஒரு சேலையைப் பரிசாகக் கொடுக்க வேண்டுமென்று பல வருஷங்களாகக் கனவு கண்டு கொண்டிருந்தானாம். நாங்கள் இந்த ஊருக்கு வந்திருப்பதை அறிந்து கொண்டதும் அவன் அடைந்த குதூகலத்துக்கு அளவில்லையாம்— இப்படியெல்லாம் சொல்லிவிட்டுக் கண்ணைப் பறிக்கும் நீலப் பட்டுப் புடவையைப் பத்மா பக்கம் நீட்டினான். பத்மாவும் வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். "இது உங்கள் கலைக்கு என் அன்பார்ந்த காணிக்கை. ஏற்றுக் கொள்ள வேண்டும்!'' என்றான். பத்மாவும் என்னைப் பார்த்தாள். என் கண்களில் மென்மையைக் கண்டாளோ என்னவோ எனக்குத் தெரியாது. பத்மாவும் புன்னகையுடன் அதை வாங்கிக் கொண்டு, "புடவை நன்றாக இருக்கிறது. பச்சைத் தலைப்புக்குப் பதில் அரக்குத் தலைப்பு நன்றா யிருக்குமே!'' என்றான். "கட்டாயம் அதுமாதிரிப் புடவை நாளைக்குக் கொண்டு வரேன்'' என்றான் நாகரத்தினம்.

நாகரத்தினம் அழகும் ஆரோக்கியமும் கம்பீரமும் கவர்ச்சியும் உள்ள இளைஞன் என்பதை முன்னாலேயே கூறி விடுகிறேன். இவ்வளவு யோக்கியதாம்சங்களுடன் இன்பமாகப் பேசும் வன்மையும் இருக்கும்போது அவன் பத்மாவின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதில் என்ன ஆச்சரியம்? அவன் கம்பீரம், முகத்திலுள்ள சாந்தம், அன்பு ததும்பும் பேச்சு எல்லாம் அவன் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதையும் படித்தவன் என்பதையும் உணர்த்தின. அவனை முதலில் பார்த்ததுமே "பத்மாவுக்கு ஏற்றவன்!'' என்ற எண்ணம் என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து விட்டது.

இதற்குப் பிறகு அவன் புடவை மூட்டையுடன் எங்கள் ஜாகைக்குத் தினமும் வருவான். வெகு நேரம் பத்மாவுடன் பேசிக் கொண்டிருப்பான். இருவரது காதலுக்கும் குறுக்கே நான் நிற்க விரும்பவில்லை. தன் வாழ்க்கைத் துணைவனைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் பத்மாவுக்குப் பூரண சுதந்திரம் கொடுக்க விரும்பினேன். சில வருஷங்களாகவே எனக்கு இந்தப் பெண்ணைப் பாதுகாக்கும் பொறுப்பு அதிகமாகி வந்தது. யாராவது தகுதியான பையன் கையில் அவளை ஒப்புவித்து விட்டால் என் கவலை நீங்குமல்லவா? இதை உத்தேசித்தே நான் சந்திக்கும் வாலிபர்கள் ஒவ்வொருவரையும் கண்ணோட்டம் விட்டு வந்தேன். என் கம்பெனியிலே வேலை செய்யும் இளைஞர்கள் ஒவ்வொருவரையும் அலசிப் பார்த்து, "இன்னும் நல்ல ஆசாமி கிடைக்க மாட்டானா?'' என்று காத்திருந்தேன்.

நாகரத்தினத்தைப் பற்றி அவ்வூரில் விசாரித்ததில் நல்ல குடும்பத்தில் பிறந்த பையன் என்பதும், ஐவேஜுக்காரன் என்பதும் தெரிந்தது. நான் கேள்விப்பட்ட வரையில் அவனை யோக்கியமான பையன் என்றே எல்லோரும் சொன்னார்கள். தாய் தந்தையர் சில வருஷங்களுக்கு முன் காலமாகி விட்டபடியால் அவனுக்கு அவனே ராஜா! நான் ஊர்ஜிதம் செய்துகொள்ள வேண்டிய முக்கிய விஷயங்கள் இரண்டு இருந்தன. நாகரத்தினத்துக்கும் பத்மாவுக்கும் இடையில் தோன்றியுள்ளது உண்மையான அந்தரங்கமான நட்புத்தானா? இருவருக்கும் ஏற்படும் உறவினால் பத்மாவின் கலைத் தொண்டுக்குப் பாதகம் ஏற்படாமலிருக்குமா? நாளைக்குக் கல்யாணம் நடந்த பிறகு, நடிப்புக்குப் பத்மா ஒரு முழுக்குப் போட்டுவிட்டு, குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவதில் எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் பத்மா நடிக்க ஆசைப்பட்டால் நாகரத்தினம், "ஐயா! என் மனைவியை நடிக்க அனுமதிக்க மாட்டேன்!'' என்று கூறிவிட்டால் என்ன செய்வது? பத்மாவின் மூச்சுக் காற்றே கலைதானே? அதில் இவ்வளவு ஆர்வமுள்ள பத்மா "நடிக்கக் கூடாது!'' என்ற கட்டளையைக் கேட்டு எவ்வளவு வேதனை யடைவாள்? என் கம்பெனியில் ஒரு நடிகை போனால் இன்னொரு நடிகை வந்துவிடுகிறாள். ஆனால் பத்மாவின் சந்தோஷமே என் லட்சியம் அல்லவா?

ஒரு நாள் நாகரத்தினத்தைத் தனியே கூப்பிட்டு, "தம்பி! பத்மாவை என் சொந்த மகளாகவே பாவித்து வருகிறேன். அவள் சந்தோஷமே என் சந்தோஷம். நாங்களும் இந்த ஊரை விட்டுப் போக வேண்டியிருப்பதால் சீக்கிரத்தில் கல்யாணத்தை வைத்துக் கொள்வதே நல்லது'' என்றேன். அவனும் சரியென்று ஒப்புக் கொண்டான். "தம்பி! பத்மாவின் நடிப்பினால் நான் மேலும் லாபமடைய நினைப்பதாகத் தவறாக எண்ணக் கூடாது. ஆனால் அவளுக்கு நடிப்பில் உள்ள ஆர்வம் உனக்கு நன்றாகத் தெரியும். அவள் நாடகங்களில்



டிப்பதைப் பற்றி உன் அபிப்பிராயம் ன்ன?" என்று கேட்டு விட்டேன். "அவன் ஆசைக்கு நான் குறுக்கே நிற்கமாட்டேன். ன் வியாபாரத்தைக் கவனித்துக் கொள்ளத் குந்த ஆசாமிகளை நியமிக்கப் போகிறேன். ங்கள் கோஷ்டியில் நானும் ஒருவனாக உங்க ளுடன் இக் விஜயம் செய்வேன்" என்றான். அவன் சொல்வதை நிஜம்என்றே நம்பினேன்.

கல்யாணத்துக்கான ஏற்பாட்டை நாங்கள் செய்து கொண்டிருந்த போதுதான் எதிர் பாராத சம்பவம் ஒன்று நடந்தது. "மானே ஜர் மகள்" என்ற நாடகம் அப்பொழுது டந்து கொண்டிருந்தது. ஒருநாள் மேடை யில் மானேஜர் மகளாக நடித்த பத்மாவை வில்லன் கீழே தள்ளிக் கத்தியால் குத்த வரும் கட்டத்தில் திடீரென்று திரை கீழே விழுந்து விட்டது. வில்லனால் தள்ளப்பட்டு மல்லாந்து விழுந்திருந்த பத்மாவின் முகத் தில் திரைக்கம்பு விழுந்து விட்டது. நெற்றி யில் பெருகிய ரத்தத்தைப் பார்த்து வெல வெலத்துப் போன நாங்கள் அவளை டாக்டர் வீட்டுக்குக் கொண்டு போனோம்! அன்று நாடகம் அத்துடன் முடிந்தது.

பத்மாவுக்கு ஏற்பட்ட விபத்தைக் கண்டு ங்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை விவரிக்க முடியுமா? அவளைப் பரிசோதித்த டாக்டர் நெற்றியில் மட்டுமின்றிக் கண்களிலும் அடி பட்டிருப்பதாகவும் ஒரு மாதம் மருந்துக் கட்டுக்களுடன் படுத்த படுக்கையாக இருக்க வேண்டும் என்றும் சொல்லி விட்டார். பல மணி நேரங்களுக்குப் பிறகு பத்மாவுக்குச் ய நினைவு வந்தது.

மறுநாள் காலை நாகரத்தினம் எங்கள் வீட்டுக்கு வந்தான். உடல் பதறித் துடி துடித்துத் துக்கமே உருவாக வந்தான். "இப் பொழுதுதான் ஊரிலிருந்து வந்தேன். பத்தைக் கேள்விப்பட்டு ஓடி வந்தேன்" என்றான். அவன் வந்துவிட்டான் என்று அறிந்ததுமே பத்மாவின் இதழ்களில் புன்னகை அரும்பியது. "வந்து விட்டீர்களா?" என்று உற்சாகத்துடன் கேட்டாள். அப்பொழுது அங்கே வந்த டாக்டரைப் பார்த்த நாகரத்தினம் பரபரப்புடன் அவர் அருகில் சென்றான். "டாக்டர் ஸார்! ஒரு விஷயம் உங்களைத் தனியாகக் கேட்க வேண்டும்" என்று கூறி டாக்டரை வராந்தாவுக்கு அழைத்துப் போனான். நானும் அவனைப் பின் தொடர்ந்தேன். "டாக்டர்! பத்மாவுக்கு ஆபத்து ஒன்றும் நேராதே!" என்று தாங்க முடியாத பரபரப்புடன் கேட்டான். டாக்டர் என்னைப் பரிதாபமாகப் பார்த்துவிட்டு, "உங்களிடம் உண்மையைச் சொல்ல வேண்டியிருக்கிறது, இந்தப் பெண்ணின் உயிருக்கு ஆபத்து ஏற்படாது என்று எனக்கு நிச்சயமாகச் சொல்ல முடியும். ஆனால் கண் பார்வையைப் பற்றி மட்டும் சொல்ல முடியாது. பார்க்கும் சக்தி மீண்டும் கிடைக்குமா என்பது மட்டும் எனக்குச் சந்தேகம்" என்றார். அதைக் கேட்டு நான் பேரிடி விழுந்தவன் போலானேன். நாகரத்தினத்தின் முகம் பேயறைந்தது போல் காணப்பட்டது. "இந்தத் தகவலைத் தயவு செய்து எக்காரணத்தைக் கொண்டும் நோயாளிக்குத் தெரிவிக்கக் கூடாது" என்று சொல்லிவிட்டு டாக்டர் போய் விட்டார்.

நாகரத்தினம் பத்மாவின் அருகில் சென்று 'பாண்டேஜ்' போட்டிருந்த அவள் கண்களையும் நெற்றியையும் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தான். "உட்காருங்கள்! டாக்டர் என்ன சொன்னார்?" என்று அவன் உள்ளே வந்ததை ஊகித்துக் கொண்ட பத்மா கேட்டாள். "ஒன்றுமில்லை. உனக்குச் சீக்கிரத்தில் குணமாகிவிடும் என்றுதான் சொன்னார்" என்று தடுமாற்றத்துடன் கூறினான்.

சிறிது நேரம் கழித்து நாகரத்தினம் வெளியே போவதைக் கவனித்தேன். அவன் முகத்தில் பரபரப்பும் வேதனையும் போட்டி விட்டன. வழக்கம் போல் 'போய் வருகிறேன்' என்று கூடச் சொல்லிக் கொள்ளவில்லை.

மறுநாள் காலை கட்டாயம் அவன் பத்மாவைப் பார்க்க வருவான் என்று எதிர் பார்த்தேன். வரவில்லை. இது எனக்குத் திகைப்பை அளித்தது. அடுத்த நாளும் அதற்கு மறு நாளும் அவன் வராதது எனக்குக் கோபத்தை அளித்தது. ஆயிரம் சந்தேகங்கள் என் மனசில் முற்றுகை யிட்டன. அவன் ஏன் வரவில்லை? "அவர் வந்து விட்டாரா?" என்று பத்மா அடிக்கடி கேட்டது என் நெஞ்சைப் பிளப்பது போல் இருந்தது. அவளுக்கு ஏற்பட்ட விபத்து அவனை அதிரச் செய்து படுக்கையில் தள்ளி விட்டதோ?

அன்று மாலை நானே நாகரத்தினத்தின் வீட்டுக்குப் போனேன். என்னைக் கண்ட அவன் திருதிருவென்று விழித்தான். எங்கள் வீட்டுக்கு மூன்று தினங்களாக வராததற்கு ஏதோ நொண்டிச் சாக்கும் சொன்னான். அவன் பேச்சும் பார்வையும் அவனைக் காட்டிக் கொடுத்து விட்டன. அவன் துரோகி என்ற எண்ணம் என் மனசில் பளிச்சிட்டது. பத்மாவின் அழகைப் பார்த்து மயங்கி அவளைக் காதலித்தான். அவள் கண்ணை இழந்து விட்டாள் என்றதும் காதலுக்குச் சமாதி கட்டி விட்டான். இது தான் உண்மைக் காதலா?

யோக்கியமான பையன் என்று நினைத்த நாகரத்தினத்தின் வேஷம் இப்பொழுது வெளியாகி விட்டது. எனக்கு வந்த கோபத்தில் அவனை என்ன செய்வதென்றே தெரியவில்லை. பத்மாவை இந்த நெருக்கடியான நிலையில் எப்படிக் காப்பாற்றுவது என்ற கவலையினால் என் கோபத்தை அடக்கிக் கொண்டேன், சிறிது யோசனை செய்துவிட்டு "தம்பி நாகரத்தினம்! நீ அவளை வெறுத்ததைப் பற்றி நான் கவலைப்படவில்லை. இது உலகில் எதிர்பார்க்கக் கூடியதுதான். ஆனால் ஒரு சமயம் பத்மாவைக் காதலித்தாய் என்பதற்காக நான் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். நீ அவளுக்கு உயிர்ப் பிச்சை அளிக்க வேண்டும்" என்றேன். "அது என் கையிலா இருக்கிறது?" என்று இரக்கமில்லாமல் கேட்டான் நாகரத்தினம்.

"தம்பி! கண் போன பிறகு நீ கைவிட்டு விட்டாய் என்றால் அவள் மனசே வெடித்துப் போகும். தயவு செய்து அவள் உடம்பு குணமாகி எழுந்திருக்கும் வரையிலாவது நீ தினம் அடிக்கடி வந்து கொண்டிரு! அது வரை நீ எப்பொழுதும் போல் அவளை நேசிப்பதாகப் பாவனையாவது செய்து கொண்டிரு! நீ இப்படிச் செய்தால் கண் போன பத்மாவுக்கு உயிராவது போகாமலிருக்கும்" என்று அவனைக் கெஞ்சினேன். கடைசியில் அவனும் வேண்டா வெறுப்பாக ஒப்புக் கொண்டான்.

தினமும் நாகரத்தினம் எங்கள் வீட்டுக்கு வந்தான். மூன்று நாளாக உற்சாகமின்றி இருந்த பத்மா அவன் வந்ததும் கலகலப்பாக அவனுடன் பேசினாள்; சிரித்தாள். நாகரத்தினமும் தன் வெறுப்பை வெளிக் காட்டாமல் சாமர்த்தியமாகப் பேசினான். பத்மாவின் உடம்பு கொஞ்சம் கொஞ்சமாகக் குணமாகி வந்தது. பத்மா எழுந்து நடமாடும் நிலைக்கு வந்தாள். அவள் உயிர் பிழைத்ததில் எனக்கு ஆனந்தம். ஆனால் நாகரத்தினத்தைப் பற்றி உண்மை வெளியாகும்போது அவள் மனம் என்ன பாடுபடும் என்பதை நினைத்துப் பார்த்தபொழுது நடுங்கினேன்.

பத்மாவின் கட்டுக்களை அவிழ்த்து விடலாமென்று டாக்டர் கூறியபோது எனக்கு ஓரளவு ஆறுதலாக இருந்தது; அன்று காலை பத்மாவின் கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டன.

உள்ளே நாகரத்தினம் வந்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் "ஐயா! பத்மா உயிர் தப்பிப் பிழைத்ததில் எனக்குச் சந்தோஷம் தான். ஆனால் தினமும் இங்கே வருவதிலிருந்து என் காதல் பரிசுத்தமானது என்று தவறாக எண்ணுகிறாள். உங்கள் வற்புறுத்தலின் பேரில் நான் இங்கே வருகிறேன் என்பது அவளுக்குத் தெரிந்தால் ?..."

இவ்வாறு கூறிக் கொண்டிருக்கும் போதே கறுப்பு மூக்குக் கண்ணாடி யணிந்து மெதுவாக எங்களை நோக்கி வந்த பத்மா, "அப்பாவின் தொந்தரவு பொறுக்க முடியாமல்தான் நீங்கள் வந்தீர்கள் என்பது அன்றே எனக்குத் தெரியும். உங்கள் குரலில் இருந்த தயக்கத்தையும் உற்சாகக் குறைவையும் என்னால் புரிந்து கொள்ளாமலிருக்க முடியுமா? அப்பா மனம் நோகாமல் இருக்கட்டும் என்றுதான் நீங்கள் என்னைப் பார்க்க வருவதை அனுமதித்தேன்" என்று கூறிய பத்மா என் பக்கம் திரும்பி, "ஏன் அப்பா கண் கலங்குகிறீர்கள்?" என்றாள் பளிச்சென்று. கண்களைத் துடைத்துக் கொள்ளப்போன நான் "பத்மா! உனக்குக் கண் தெரிகிறதா?" என்று திடுக்கிட்டு அலறினேன்!

"பேஷாகத் தெரிகிறது! கண் பார்வைக்கு ஒருநாளும் ஆபத்து உண்டாகாது என்று டாக்டர் நான் மூர்ச்சை தெளிந்து எழுந்ததுமே சொல்லி விட்டார். ஆனாலும் கண் பார்வைக்கு ஆபத்து ஏற்படலாம் என்று வேண்டுமென்றே டாக்டரைப் பொய் சொல்லச் சொன்னேன்" என்றாள்.

"ஏன் அம்மா, அப்படிப் பொய் சொல்லச் சொன்னாய்?" என்றேன் ஆச்சரியத்துடன்.

"ஏன் என்று தெரியவில்லையா? எனக்காக உயிரையும் கொடுப்பதாகச் சொன்ன இந்த மகானுபாவரைச் சோதிக்கத்தான். நான் யாரையுமே கல்யாணம் செய்துகொள்ளப் போகிறதில்லை!" என்று கூறிவிட்டு 'விர்' என்று திரும்பி உள்ளே சென்றாள் பத்மா.

நான் கற்சிலையானேன். சுய நினைவு வந்த போது நாகரத்தினம் அங்கிருந்தால்தானே! பெண்களின் மனம் எவ்வளவு விசித்திரமானது? எவ்வளவு மர்மமானது?

- செடி, கொடி, மரங்கள் வளர்ச்சி பெருமல் நின்ருல் மடிவு காலம்.
- அதேபோல் வியாபாரம் வளர்ச்சி யின்றேல் மடிவுதான்.
- எங்கள் வியாபாரம் வருஷா வருஷம் வளர்ச்சி பெற்றுக்கொண்டே வந்திருக்கிறது.
- நியாயமான வர்த்தக முறை இன்றேல் வளர்ச்சி யிருக்க முடியாது.
- நாங்கள் சொல்வதும் எங்கள் வாடிக்கைக் காரர்கள் நினைப்பதும் சரிதானுவென்று, தங்களுக்கு பட்டு, நூல், கம்பளித் துணிகள் தேவையுள்ள பொழுது எங்களை விசாரியுங்கள்.
- **6, 8, 9 கஜம் உயர்ந்த பங்களூர், பனரீஸ், காஞ்சீவரம், பங்கால்,** பட்டுப் புடவைகளுக்கு எங்கள் கடைகள் பெயர் போனவை.
- ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் எங்களிடம் கிடைக்கும்.

o●o

*Branch :*

"FANCY HALL"

சைனு பஜார்

திருச்சிராப்பள்ளி

P. R. நாராயணசாமி அய்யர்

ஜவுளி வியாபாரம்

பெரிய கடை வீதி,

திருச்செரப்பள்ளி

Telegrams : "BONTEX"

Telephones : 26. 26-A

# பாரதி காட்டிய பாதை




மாலை மயங்கும் நேரம். அந்தப் பெரிய மாளிகையில் இடப்புறமாக இருந்த சின்னஞ் சிறு அறையில் மங்கலான வெளிச்சமே தெரிந்தது. கவ்வும் இருளையும் லட்சியம் செய்யாது கிழவர் ஒருவர் மும்முரமாக ஏதோ வேலை செய்து கொண்டிருந்தார். தளர்ந்து மெலிந்த அவர் உடலைப் பார்த்தாலே கிழவருக்கு வயது எண்பது, எண்பத்தைந்து இருக்கலாம் என்று ஊகிக்க முடிந்தது.

"என்னய்யா இது! இன்னுமா வேலை செய்து கொண்டிருக்கிறீர்கள்?"

"யார் இது பேசுகிறது?" என்று கேட்டுக் கொண்டே கிழவர் திரும்பினார். தம்முடைய ஆப்த நண்பர்களிலொருவர் நிற்பதைக் கண்ட அவர் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

"நானும்தான் பார்க்கிறேன், இத்தனை வயதுக்குமேல் நீங்கள் ஏன் 'வேலை! வேலை!' என்று வேலையைக் கட்டிக் கொண்டு அழுகிறீர்கள்? உங்களுக்குப் பிறகு உங்கள் ஸ்தாபனம் எப்படி எப்படி நடக்க வேண்டும் என்பதை முடிவு செய்துவிட்டு நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டிய பருவமல்லவா இது! நீங்களென்ன சிரஞ்சீவி என்று நினைத்துக் கொண்டீர்களா?"

நண்பரின் பேச்சைக் கேட்ட கிழவர் இலேசாகச் சிரித்தார். பிறகு மெல்லிய குரலில் தம் சிநேகிதரைப் பார்த்துச் சொன்னார்: "நண்பரே! மரணத்தைப் பற்றி நினைக்கவே எனக்கு நேரமில்லையே!"

கீழே விழாம லிருப்பதற்காகப் பக்கத்திலிருந்த தூணைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார் வந்த மனிதர்!

இப்படித் தம் நண்பரைத் திகைக்க வைத்தவர் யாரென்று நினைக்கிறீர்கள்? உலகப் பிரசித்திபெற்ற போர்டு மோட்டார் கம்பெனியின் ஸ்தாபகரான காலஞ் சென்ற ஹென்றி போர்டு அவர்கள்தான்.

ஆமாம், இது அமெரிக்காவிலே நடந்த அதிசயம்

"என்ன ஸார் இது! உங்களைக் கொஞ்ச நாளாகக் கம்பெனிப் பக்கமே காணுமே! உடம்பு கிடம்பு ஏதாவது......?"

"ஹூம்! அதெல்லாம் ஒன்றுமில்லை! சும்மா இப்படி வீட்டிலேயே இருக்கலாமேன்னு இருந்து விட்டேன்! நமக்கும் வயசாயிடுத்து......இன்னமும் 'கம்பெனி கம்பெனி'ன்னு மாரடிப்பானேன், பின்னை யாண்டானே பார்த்துக் கொள்ளட்டுமே என்று இருந்து விட்டேன்......"

"வாஸ்தவம் ஸார்! இந்த ஐம்பது வயதுக்கு மேலே உழைத்து யாருக்குச் சேர்க்கணும்? பேசாமல் 'ஹாய்'யா 'கிருஷ்ணா ராமா'ன்னு ஏதோ பகவத் கைங்கர்யத்திலே ஈடுபட்டு......"

"நன்னாச் சொன்னேள்! ஏதோ போகிற வழிக்காவது புண்ணியம் கிடைக்குமே!"

"கட்டாயமா! மனுஷனுக்கு அதைவிட வேறு என்ன ஸார் வேணும்?"

இது நம்முடைய பாரத நாட்டிலே நடக்கும் அதிசயம்!

* * *

எண்பது வயதுக்கு மேற்பட்ட அந்த அமெரிக்கப் பிரமுகருக்கு மரணத்தைப் பற்றி நினைக்கவே நேரமில்லை!

ஐம்பது வயதைக் கடந்த நம்முடைய பேர் வழிக்கோ மரணத்துக்குப் பின் சொர்க்கத்தில் எப்படி ஒரு 'ஸீட் ரிஸர்வ்' பண்ணலாம் என்று கவலை!

"ஹூம்! இரண்டு விசித்திரமான உலகங்கள்!" என்று சிரிக்கிறீர்களல்லவா?

ஆமாம்! சிரிப்புத்தான் வரும் உங்களுக்கும் எனக்கும்!

ஆனால் அதோ பாருங்கள் ஒரு மனிதர்! அவருக்குச் சிரிப்பே வரவில்லையே! சிந்தை நொந்த முகத்தோடு நம்மைப் பார்த்து ஏதோ சொல்லுகிறாரே! என்னவென்று கேட்டுப் பார்ப்போம்.

"செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலாமென்றே எண்ணி யிருப்பார்
பித்த மனிதர் அவர் சொலுஞ் சாத்திரம்
பேயுரையா மென்றிங் கூதேடா சங்கம்!"

ஆமாம்! கவியரசர் பாரதியார்தான் பாடுகிறார்! உங்களுக்கும் நமக்கும் சேர்த்து ஒரு சொட்டுக் கொடுத்து விட்டார்! முதலில் இந்த உலகத்திலே மனிதனாக வாழ்ந்து உயர்வதற்கு வழி தெரியாமல் அடுத்த உலக ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறோமல்லவா?

இந்த உலகில் மனிதன் உயர வழியா? அடே! அதென்ன அது?

ஆ! அப்படி வாருங்கள் வழிக்கு! இந்த உலகத்திலேயே மனிதன் உயருவதற்கு வழி யிருக்கிறது, ஸார்! என்ன வழி தெரியுமா? முதலில் தன்னம்பிக்கை வேண்டும்; அதனுடன் உழைப்பும்



வேண்டும்! பாரதியார் சொல்லுவதைப் பாருங்கள்!

"நம்புவ தேவழி என்ற மறைதன்னை
நாம் இன்று நம்பி விட்டோம்."

இந்த நம்பிக்கையை வைத்துக்கொண்டு நாம் என்ன செய்ய வேண்டும், தெரியுமா? கேளுங்கள்:

"உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம் — வீணில்
உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்வோம்!"

ஆமாம்! தன்னம்பிக்கை, உழைப்பு என்ற இரண்டும்தான் உயர்ந்த வாழ்வுக்கு அடிப்படை. ஆனால் இந்த இரண்டும்தானே நம்மிடம் கிடையாது!

"நம்மாலே என்ன இருக்கு ஸார்! எல்லாம் அவன் செயல்!"

"மனுஷன் நினைத்து என்ன ஸார் முடியும்? எல்லாம் விதிப்படித்தான் நடக்கும்!"

இதுதான் நம்முடைய தினசரிப்பேச்சு!

மனிதனால் ஒன்றும் ஆகாமலா அவன் மின்சார விளக்கையும் வானொலிப் பெட்டியையும் ரயிலையும் ஆகாய விமானத்தையும் கண்டு பிடித்தான்? அச்சடிக்கும் வித்தையை விதியா கண்டு பிடித்தது?

தன்னம்பிக்கைதான் பூஜ்யம் என்றால் 'உழைப்பு' இருக்கிறதே, அற்புதம்! "கிரிக்கெட் மாட்சுக்கு ஏன் ஸார் 'லீவ்' விடலே?" என்று கேட்கக் கூடியவர்களாயிற்றே நாம்!

உழைப்புக்கு நாம் எத்தகைய மதிப்பளிக்கிறோம் என்பதை வாழ்வில் உயர்ந்தவர்களுக்கு நாம் கொடுக்கும் மதிப்பிலிருந்து அறியலாம். 'மூன்னுக்கு வந்த புள்ளி'யைப் பற்றி நாம் சாதாரணமாகப் பேசும் பேச்சு இந்த விதத்திலிருக்கும்:—

"இவனென்ன ஸார்! இன்றைக்குப் பெரியவனானவன்! இவன் பூர்வீகம் தெரியுமோ இல்லையோ? முப்பது வருஷங்களுக்கு முன் இவன் தகப்பனார் இட்டிலிக் கடை வைத்திருந்தார்! அடேயப்பா! அப்போ இவன் சோற்றுக்கும் படிப்புக்கும் பட்ட கஷ்டம் கொஞ்சமா நஞ்சமா! ஹூம்...... அப்புறம் எப்படியோ அவன் காலைப் பிடித்து இவன் காலைப் பிடித்து ஏதோ அரைப் படிப்புப் படித்தான்!......அப்படியும் இப்படியுமாகக் கொஞ்சம் பணத்தைப் பெரட்டி இந்தத் தொழிலில் இறங்கினான். அதிர்ஷ்டம் அடிச்சுது! இன்றைக்குப் பெரியவனாகி விட்டான்!......"

கடவுளே! இப்படிப்பட்ட மக்களுக்கு என்றாவது கதிமோட்சம் உண்டா? பாரதியார் வாக்கு மக்கள் நாவில் ஏறுமா?

ஏறுமாவா? ஏறித்தானாக வேண்டும்! ஆம்! நாம் உயர்ந்துதானாக வேண்டும்! என்றென்றைக்கும் இந்த அதல பாதாள நிலையிலிருக்க முடியாது. ஆம்! உழைத்துத்தானாக வேண்டும்!

எரிமலை போன்ற இயற்கை உத்பாதங்களுக்கும் அணுகுண்டு போன்ற செயற்கைக் கொடுமைகளுக்கும் ஆளான ஜப்பான் தேசமே இன்று உயர்ந்து வரும் போது இந்த வகைத் துன்பங்களேதற்குமே ஆளாகாத இந்தியா உயரவில்லை என்றால் என்ன அர்த்தம்? ஜப்பானியருக்குள்ள உழைப்பு நமக்கில்லை என்று தானே அர்த்தம்? நாம் சோம்பேறிகள் என்றுதானே பொருள்?

இந்தக் குறையை நீடிக்க விடலாமா? கூடாது. இதற்கொரு முடிவு கட்டியே தீரவேண்டும்! **பாரதி காட்டிய பாதையைப்** பின்பற்றி நாம் வெற்றி பெற்றே தீர வேண்டும்!


## "ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"



**1 மண்டலம் (48 நாள்) பூஜை செய்தும்**

ஆயுள் பூராவும் பலன் தரும் வெள்ளி ரக்ஷை

**ரூ. 43—12—0**

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள், தங்கள் கோரிக்கையை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். அதி. தொகை, வெள்ளி, விளம்பரம் தபால் செலவிற்குமாக தேவை. மீதி ரூ. 38ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N. B. (1) ஆர்டர் கிடைத்த 9ம் நாள் ரக்ஷை பிரமாணத்துடன் அனுப்பப்படும். (2) வெளி நாட்டு வேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்மூலம் அனுப்பவும். (3) V. P. கிடையாது. (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

★

கோட்டமருதூர்,

**ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்,**

அரகண்டநல்லூர் P. O. (S. A. Dt.)

# தி பாவுஸோரி பெனிபிட் சிட் பண்டு லிட்.

(இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டது)

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி

தபால் பெட்டி நெ. 414 · மதராஸ்-5

தந்தி 'EVERMENS'.... போன்: 85834





## மாதாந்திர சீட்டுகள்

ஜூலை மாத சீட்டு வரிசையில் இடம் பெறாத விண்ணப்பதாரர்களுக்கு இடமளிக்க ஆரம்பிக்கும் எங்கள் ஆகஸ்டு மாத சீட்டு வரிசை (3-வது வெள்ளிக்கிழமை, ஏல வரிசை)

**சந்தா செலுத்தும் கடைசி தேதி 11-8-52 முதல் ஏலத் தேதி 14-8-52**

| | மாதச் சந்தா | சீட்டின் மதிப்பு |
|---|---|---|
| B கிளாஸ் | ரூ. 100/- | ரூ. 2,500/- |
| C ,, | ரூ. 50/- | ரூ. 1,250/- |
| D ,, | ரூ. 25/- | ரூ. 625/- |
| E ,, | ரூ. 20/- | ரூ. 500/- |
| F ,, | ரூ. 15/- | ரூ. 375/- |
| G ,, | ரூ. 10/- | ரூ. 250/- |
| | 25 மாதங்கள் | 25 மெம்பர்கள் |


ரூ. 25க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பாங்குகளின் செக் பெற்றுக் கொள்ளப்படும். அதற்குக் குறைந்த தொகையை மணியார்டர் அல்லது இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பலாம். வேண்டுவோருக்கு இலவசமாக நிபந்தனைகளும் விண்ணப்ப பாரங்களும் அனுப்பப்படும்.


**சீராகச் சேமிப்பதற்கு உங்களுக்குப் பயிற்சி அளிக்கிறோம்.**

(போர்டார் உத்திரவுப்படி.)

எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

தாய்மார்கள் விரும்பி வாங்கும் அழகிய ஸ்டீல் தொட்டில், கொசுவலை ஸ்டாண்டுடன் கூடியது மலிவான விலை - நீடித்த உழைப்பு!




ஸ்டீல் மாஸ்டர் மடக்கும் நாற்காலி. வீடு, ஆபீஸ், ஹோட்டல், சினிமாக் கொட்டகை, ஆஸ்பத்திரி, கான்டீன் முதலியவைகளுக்கு இன்றியமையாதவை. மிகக் குறைந்த விலை. உறுதியான ஸ்டீல் நாற்காலி. ஒன்றின் விலை ரூ. 16—0—0

விவரங்களுக்கு:

**ஸாம்ஸன் & கம்பெனி லிமிடெட்**

151, பிராட்வே :: மதராஸ்-1

போன்: 4521 தந்தி: BARAPASH




"நெடுநாட்களாக யிருந்த முதுகு வலியினால் அவஸ்தைப்பட்டேன். சில நிமிஷங்களே உட்கார்ந்திருந்தபோதிலும், மறுபடி எழுந்து நிற்பதே மிகவும் சிரமமாயிருந்தது. "க்ருஷன்" உபயோகித்துக் குணம் அடையும் வரை, உபயோகித்த வேறு மருந்துகள் ஒன்றிலும் குணம் கிடைக்கவில்லை. எனது ஆரோக்யத்துக்கு ஏற்ற சாதனம் பெற்று இப்பொழுது நான் முற்றிலும் ஒரு புதிய ஸ்திரீயாகிவிட்டது பற்றி சந்தோஷமும் நன்றியறிதலுமுள்ளவளாயிருக்கிறேன்." —E. J. B.

இடைவிடாத முதுகு வலிக்கு ஒரு பொதுக் காரணம்—மூத்திரக் காய்கள் உடலிலுள்ள அசுத்தத்தை வெளியேற்றாமைதான். இவ்வாறு தொல்லையுறும்பொழுது "க்ருஷன்" உட்கொள்ளுங்கள். களைத்துப்போன மூத்திரக் காய்கள் அவைகளுக்கு வேண்டிய உதவியை அதனால் பெறுகின்றன. அவை கழிவு பதார்த்தங்களை ஒழுங்காகவும் இயற்கையாகவும் வெளியேற்றும்பொழுது வலியும் கூடவே வெளியேறி விடுகிறது. தினந்தோறும் உட்கொள்ளும் ஒரு சிறு அளவு க்ருஷன் உங்களது வலிகள் திரும்பவும் வராதென்பதை உறுதிப் படுத்துகின்றது.

**"க்ருஷன்"** உங்களை ஆரோக்யத்துடனும் சந்தோஷத்துடனும் இருக்க உதவுகிறது

KSM: 3

# மூன்று ராஜகுமாரர்கள்

சீதா

## 6. ஒரு வேண்டுகோள் !

சூரியகுமாரன், சாந்தகுமாரி சென்ற திசையையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். குதிரைமீது அமர்ந்து அவள் கம்பீரமாகச் சென்ற காட்சி சூரிய குமாரனைப் பரவசப் படுத்திவிட்டது. அப்படிப் பார்த்துக் கொண்டிருந்த போதே, அவள் கண் பார்வையிலிருந்து மெல்ல மெல்ல மறைந்தாள். அவள் முழுதும் மறைந்தவுடன் சூரிய குமாரன் தன் குதிரைமீது ஏறி அமர்ந்து தான் வந்த வழியிலேயே திரும்பிச் சென்றான்.

தன் நாட்டுக்கு விரைவில் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற ஆர்வமும் துடிப்பு மிருந்ததால், ஏழு நாள் பிரயாணத்தை நான்கு நாட்களிலேயே முடித்துக் கொண்டு மந்திரவாதிக் கிழவன் இருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தான்.

"தாத்தா, உன் ஆசியினால் நான் போன காரியம் வெற்றிகரமாக முடித்துக் கொண்டு அங்கு வந்து சேர்ந்து விட்டேன்" என்றான் சூரியகுமாரன்.

"ரொம்ப சந்தோஷம் !" என்றான் மந்திரவாதிக் கிழவன்.

"எல்லாம் உன் மந்திரக் கோலின் சக்தியே சக்தி ! அங்கே ஒரு ராஜகுமாரியின் கற்சிலையிருந்தது. அதன்மீது உன் மந்திரக்கோல் பட்டது தாத்தா. அவ்வளவுதான். அந்தச் சிலை உயிர் பெற்றெழுந்து விட்டது ! ஆச்சரியமாக இல்லையா !"

இதைக் கேட்டவுடனேயே மந்திரவாதிக் கிழவன் முகம் எல்லாம் சந்தோஷத்தால் மலர்ந்தது. கண்களில் ஒளி வீசியது! "பேஷ்! கற்சிலையாக இருந்த ராஜகுமாரியை நீ உயிர்ப்பித்துவிட்டாயா ? இப்போதுதான் எனக்கு உயிர் வந்தது. நீ நீடூழி வாழ வேண்டும்" என்று உணர்ச்சி பரவசத்தில் கூறினான் கிழவன்.

"உனக்கு அந்த ராஜகுமாரியைத் தெரியுமா, தாத்தா ?" என்றான் சூரியகுமாரன்.

"தெரியுமாவா ? நன்றாகக் கேட்டாய் போ ! நான்தானே, அந்த ராஜகுமாரியை அவளுடைய சிற்றன்னையின் வார்த்தையைக் கேட்டு, கற்சிலையாக மாற்றி அந்தப் பாழும் மாளிகையில் வைத்தது. அந்தப் பாவம், என் நெஞ்சை இத்தனை நாளும் உறுத்திக் கொண்டிருந்தது. அதை நீ துடைத்து விட்டாய் ! இப்பொழுதுதான் என் மனசு சஞ்சலம் நீங்கி நிம்மதி யடைந்தது" என்றான்.

"அவ்வளவு வருத்தப்படுகிறாயே, நீயே அவளை உயிர்ப்பித்து விடுகிறதுதானே ? ஏன் கற்சிலையாகச் செய்தாய்!" என்று கேட்டான் சூரியகுமாரன்.

"அந்த ராஜகுமாரியின் சிற்றன்னையிடம் ஏராளமான பணம் வாங்கிக் கொண்டிருந்தேன். அதனால் என்னால் துரோகம் செய்ய முடியவில்லை. மேலும், அவளை உயிர்ப்பித்திருந்தால் அவள் சிற்றன்னையினிடம் இன்னும் அதிகக் கொடுமைக்குத்தானே ஆளாகியிருக்க வேண்டும். அவளை உயிர்ப்பிக்காததே நல்லதாக இருந்தது !"

"ஐயோ, இப்போது அவளை உயிர்ப்பித்து அவள் நாட்டுக்கு அனுப்பிவிட்டேனே ! மறுபடியும் தன் சிற்றன்னையினிடம் அகப்பட்டுக் கொள்வாளே, பாவம் ! இதைப்பற்றி முதலிலேயே நான் தீரச் சிந்திக்காமற் போய் விட்டேனே !" என்று வருத்தப்பட்டான் சூரிய குமாரன் !

"இளவரசே ! இப்போது நீ வருத்தப்பட வேண்டிய அவசியமே ·யில்லை. அவளுடைய சிற்றன்னை காலமாகி விட்டாள் ; அவளுடைய தந்தையும், புதல்வியின் பிரிவாற்றாமை தாங்க முடியாமல் இறந்து விட்டார். ஆகவே, அந்நாட்டில், மக்கள் ராஜகுமாரியின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஆகவே, ராஜகுமாரி அந்நாட்டின் எல்லையை மிதித்ததுமே அவளுக்கு மக்கள் ஆனந்த வரவேற்பு அளிப்பார்கள். மக்களின் குதூகலம் எல்லை கடந்து போய் விடும். அவளைச் சிங்காதனத்தில் அமர்த்திப் பட்டாபிஷேகம் செய்து அவள் ஆட்சியில் மக்கள் வாழக் காத்திருக்கின்றனர். ஆகவே, அவளை உயிர்ப்பித்ததில் ஒரு தவறுமில்லை" என்றான் மந்திரவாதி. இதைக் கேட்டதும் சூரிய குமாரன் இன்னதென்று சொல்லத் தெரியாத ஆனந்தத்தில் மூழ்கினான் !

சற்று நேரம் பொறுத்து, "தாத்தா, உன் மந்திரக் கோலின் உதவியினால் என் தந்தைக்குத் தேவையான ஜீவரசம் பெற்று வந்தேன். இனி எனக்கு மந்திரக் கோலின் அவசியமில்லை. உன் மந்திரக்கோலை நீயே வைத்துக் கொள்" என்று சொல்லிக் கொடுத்தான்.

மந்திரவாதி மிக்க மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டான். ஆம், சொன்ன சொல் தவறாமல் திருப்பிக் கொண்டுவந்து கொடுத்து விட்டானல்லவா ? மந்திரக்கோலைப் போன்ற

அபூர்வ வஸ்துக்கள் பெற்றுக் கொண்டவர், திருப்பித்தர மனமில்லாமல் ஏமாற்றுகிறவர்கள் எத்தனையோ பேர் உலகிலிருக்கிறார்கள் என்பது மந்திரவாதிக்குத் தெரிந்தது தானே! அப்படிப்பட்டவர்களின் கும்பலில் சேராமல் சத்தியசந்தனாக விளங்கும் சூரியகுமாரனைக் கண்டு அவன் பெரு வியப்புற்றதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?



"தாத்தா, இன்னொரு விஷயம் உன்னைக் கேட்கவேண்டும் என்று நினைத்தேன். என் சகோதரர்கள் இருவர் இந்த ஜீவ ரசத்தைத் தேடிக் கொண்டு புறப்பட்டார்கள். அவர்கள் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை. உனக்குத் தெரிந்தால் சொல்லேன்" என்று கேட்டான்.

"அவர்களைப் பற்றி நீ கவலைப்படாதே! அவர்கள் ஒருநாள் வந்து சேருவார்கள். உன் வழியைப் பார்த்துக் கொண்டு நீ போய்ச் சேர்" என்றான் மந்திரவாதி.

"இல்லை, அவர்களை நிச்சயம் பார்க்க வேண்டும். அவர்கள் எங்கிருக்கிறார்கள், சொல்!" என்று வற்புறுத்தினான் சூரிய குமாரன்.

"உன் அண்ணன்மார்களை இப்பொழுது அழைத்துப் போக வேண்டாம். அதனால் உனக்கு நன்மை விளையாது என்று பயப்படுகிறேன். வேண்டாம். உன் அண்ணன் மார்களைப் பற்றி என்னிடம் கேட்காதே!" என்றான் கிழவன்.

"அவர்களால் எல்லாம் எனக்குத் தீங்கு விளைந்து விடுமா?" என்று சூரியகுமாரன் சொல்லி விட்டுச் சிரித்து "நன்றாய்ச்சொன்னாய் போ! அவர்கள் என்மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார்கள் தெரியுமா? அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது. அவர்கள் இருக்குமிடத்தைச் சொல். நான், அவர்களையும் அழைத்துக் கொண்டு எங்கள் அரண்மனைக்குப் போகிறேன்" என்றான்.

"சூரிய குமாரனுடைய பிடிவாதத்தைக் கண்டு மந்திரவாதிக் கிழவன் மிக்க வெறுப்புக் கொண்டான். இருந்தாலும் சூரியகுமாரன் வேண்டுகோளுக்கு இணங்கவில்லையென்றால் சூரியகுமாரன் என்ன செய்வானோ என்று பயந்தான். ஆகவே, வேண்டா வெறுப்புடன் ஏதோ மந்திரத்தை முணு முணுத்து மந்திர கோலைச் சுழற்றினான். அவன் எதிரிலிருந்து மூன்று திசை மலைகளும் ஒரு நொடியில் மாயமாய் மறைந்தன. சூரியகுமாரன் எதிரில் அவனுடைய அண்ணன்மார் இருவரும் இருந்தார்கள். அவர்கள், தங்களைச் சிறைப் படுத்திய மலைகள் இருந்திருந்தாற் போல் மறைந்ததையும், தங்கள் எதிரில் சூரியகுமாரன் இருப்பதையும் கண்டு, "தம்பி" என்று இருவரும் ஆச்சரியப் பெருக்கில் சேர்ந்தாற் போல் கூவினார்கள்! (தொடரும்)

---

## என்ன நடந்தது!

●

கான்ஸ்டேபிள்:—என்ன ஸார்? நீங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து, இங்கே நடந்ததற் கெல்லாம் சாட்சி சொல்கிறீர்களா?

ஒருவர்:—ஓ, பேஷாய்ச் சொல்கிறேன். ஆனால் இங்கே என்ன நடந்தது?







இந்த
விதம்
துவைப்
பாய்

தினம் வெண்மையாய் உடுப்பாய்

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், வடாலா, பம்பாய்


# குஞ்சு மாமா



குஞ்சு மாமா ஒரு குச்சி நாய் வளர்த்து வந்தார். அதற்கு வேளா வேளையில் குளிப்பாட்டி ஆகாரம் வைத்து மிகவும் அருமையாக வளர்த்து வந்தார். குச்சி நாய்க்குக் குறும்பு ரொம்பவும் அதிகம். வீட்டுக்கு யார் வந்தாலும் அவர்கள் மேல் தாவி அவர்களை நாக்கினால் ருசி பார்ப்பது வழக்கம். அதைத் தடுத்துப் பிடிக்க ஓடினால் அகப்படுவதில்லை. குஞ்சு மாமாவுக்குச் சீனு என்று ஒரு மருமான் உண்டு.

ஒரு நாள் மாமா வழக்கம் போல் நாய்க்கு உடம்பு வளர மருந்து கொடுப்பதற்காக நாயைத் துரத்திப் பிடிக்க ஆரம்பித்தார். அவர் கையில் நாய்க்குக் கொடுக்கும் பவுடரும் ஒரு புட்டி நிறையத் தேனும் வைத்துக் கொண்டிருந்தார். வழியில் வந்த சீனுவினிடம் ''தேன் பாட்டிலைத் திறக்க 'கார்க் திறப்பான்' கொண்டு வா என்று சொல்லிக்கொண்டே நாயைப் பல இடங்களிலும் ஓடித் துரத்தினார். அந்த நாய் மாடிப் படியில் ஏறித் தாவி மாடிக்கு ஓடியது. மீண்டும் மாடியிலிருந்து கீழே இறங்கிப் பாய்ந்தது. அத்துடன் பாய்ந்த மாமா மாடிப் படியில் உருண்டு, தட. தட, தட, தட் என்று தரைக்கு ஒரு மாதிரி வந்து விழுந்தார். தேன் பாட்டிலும் உடைந்து மாமா உடம்பெல்லாம் தேனாகி விட்டது. இதைப் பார்த்த நாய் கீழே கொட்டியிருந்த தேனையும் மாமா முகத்தில் இருந்த தேனையும் ருசிக்க ஆரம்பித்தது. மாமாவுக்குக் கோபம் தாங்க முடியவில்லை. நாயைத் துரத்திக் கொண்டு தோட்டப் பக்கம் ஓடினார். அங்கு மரத்தில் கட்டியிருந்த தேன் கூட்டிலிருந்த தேனீக்கள் மாமாவின் மேலிருந்த தேனுக்காகத் தங்கள் சேனைகளைத் திரட்டிக் கொண்டு மாமாவைச் சூழ்ந்து கொண்டன.

சீனு ஓடி வந்து ''மாமா, கார்க் திறப்பான் அகப்பட்டு விட்டது. எங்கே மாமா இருக்கிறீர்கள்!'' என்று கேட்டான். நாயும் அவனுடன் சாதுவாக நின்றது.




"மாமா, இந்த வரன் மிகவும் நல்ல வரன். ஒரு ரிடையர்டு ஜட்ஜியின் பிள்ளை. ஐ. ஏ. எஸ் பரிக்ஷை கொடுத்திருக்கிறான் நம் சுகுணாவுக்கு ஏற்ற வரனாயிருப்பான். இதோ, போட்டோ கூட அனுப்பியிருக்கிறான், பாருங்கள்!" என்று சொல்லிக் கொண்டே, ராமநாதன் வாசுதேவ சர்மாவின் கையில் ஒரு போட்டோவைக் கொடுத்தான். சர்மா அதைக் கையில் வாங்கிக் கொண்டு, "ஹும், அப்புறம்?" என்றார்.

"இது திருவனந்தபுரத்தில் பெரிய வக்கீலா யிருக்கும் ஒருவருடைய குமாரன் ஜாதகம். 'பி. காம்' பாஸ் செய்து விட்டு ஒரு பெரிய கம்பெனியில் மானேஜராக இருக்கிறான். ஒரே பிள்ளை. இதோ இன்னொரு ஜாதகம் இருக்கிறது. ஜில்லா முனிசிப்பின் பிள்ளையின் ஜாதகம். சொந்தமாக 'பிஸினஸ்' செய்கிறான். நல்ல வருவாயும் சொத்தும் இருக்கிறது. இன்னும்......!" என்று ராமநாதன் அடுக்கிக் கொண்டே போவதைப் பார்த்த சர்மா, "போதும், போதும்! நிறைய ஜாதகங்கள் சேகரித்து விட்டாயே! எல்லாம் நம் அந்தஸ்துக்கு ஏற்றாற் போல் பெரிய இடங்களாகப் பார்த்துத்தான் தேடிப் பிடித்திருக்கிறாய்!" என்று ஆனந்தம் பொங்கக் கூறினார்.

உடனே ராமநாதன், "இதில் என் சாமர்த்தியம் என்ன இருக்கிறது, மாமா? உங்கள் பெண் சுகுணாவைக் கல்யாணம் செய்து கொள்ள வலிக்குமா என்ன? அவள் போட்டோவைப் பார்த்ததும், யாராயிருந்தாலும் ஜாதகம் கொடுக்கச் சம்மதிக்காமல் இருக்க மாட்டார்கள். 'பிரபல வக்கீல் வாசுதேவ சர்மாவின் மருமான்' என்று சொன்னால் எனக்கு எவ்வளவு மரியாதை செய்கிறார்கள் தெரியுமா? உங்கள் பெரும் புகழும் செய்யும் வேலை இவைகளெல்லாம்!" என்று சொன்னதும் சர்மா சந்தோஷத்தினால் பூரித்துப் போனார். அந்தப் பக்கமாக வந்த சுகுணா கூட இதைக் கேட்டு விட்டுக் 'களுக்' என்று சிரித்து விட்டாள்.

அப்பொழுது சர்மா, "சுகுணா, சுகுணா!" என்று கூப்பிட்டார்.

"என் அப்பா? இதோ வந்து விட்டேன்!" என்று சொல்லிக் கொண்டே ஒரு பூங்கொடி அசைந்து வருவது போல் வந்து நின்றாள்.

"பார்த்தாயா, அம்மா, உன் அத்தான் உனக்காக எடுத்துக் கொண்டிருக்கும் சிரமங்களையெல்லாம்? எங்கே யிருந்தெல்லாமோ ஜாதகங்களும் போட்டோக்களும் வரவழைத்துக் குவித்து விட்டானே!" என்றார் சர்மா.

"போங்கள் அப்பா! உங்களுக்கும் வேலையில்லை, இந்த அத்தானுக்கும் வேலையில்லை!" என்று நாணத்தினால் தலை கவிழ்ந்து கொண்டு சொன்னாள். அப்போது அவள் முகத்தில் குப்பென்று சிவப்பு ஏறி அவளுடைய ரோஜாக் கன்னங்களுக்கு இன்னும் அழகேற்றியது.

"என்ன சுகுணா, அவ்வளவு அலட்சியமாகச் சொல்லிவிட்டாய்! இது உன் கல்யாண விஷயம். அதாவது உன் வாழ்க்கையையே பொறுத்த விஷயம். நீ இதில் முழுப் பொறுப்பும் எடுத்துக் கொண்டு உனக்குப் பிடித்த வரன் யார் என்பதைச் சொல்ல வேண்டும்! உன் கல்யாண விஷயத்தில் தலையிட யாருக்கும் உரிமை கிடையாது. வரன் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் உனக்குப் பூரண சுதந்திரம் உண்டு!" என்று சர்மா உணர்ச்சி பொங்கக் கூறினார்.

சுகுணா தகப்பனார் சொன்னதற்குப் பதில் ஒன்றும் சொல்லாமல், சரேலென்று அவ்விடத்தை விட்டுப் போய் விட்டாள்.

சுகுணா தாயில்லாப் பெண். சின்ன வய திலேயே தாயை இழந்த அவளுக்குத் தாயும் தந்தையுமாயிருந்து வாசுதேவ சர்மா தான் வளர்த்து வந்தார். சுகுணாவை உத்தேசித்தே அவர் மறு விவாகம் செய்து கொள்ளவில்லை.

வக்கீல் வாசுதேவ சர்மா என்றால் பட்ட ணத்தில் தெரியாதவர்களே கிடையாது. வக்கீல் தொழிலில் அவ்வளவு பிரசித்தி பெற் றிருந்தார். அவரது ஏக புத்திரியான சுகுணா அப்பொழுது பி. ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள்.

சர்மாவுக்கு அவளது கல்யாணத்தைச் சீக்கிரம் முடித்து விட வேண்டும் என்னும் எண்ணம் சில நாட்களாகத் தீவிரமாக இருந் தது. அதற்குக் காரணம் சுகுணாதான். அவ்வளவு அழகாக வளர்ந்திருந்தாள் அவள். பருவம் தன் முழுத் திறமையையும் அவள் வடிவத்தில் காட்டியிருந்தது.

சுகுணா எந்தப் புடவையை எந்த மாதிரி உடுத்திக் கொண்டாலும் அந்த மாதிரியில் அவள் இணையற்ற அழகோடு விளங்குவாள். நாகுக்கான பெங்கால் ஸில்க் புடவை, தாய மல் ஜாக்கெட், அகலமும் நீளமும் கொண்ட அழகான பின்னல், தலையில் கதம்பம், பேச் சில் ஒரு இனிமை, பார்வையில் ஒரு குறு குறுப்பு இவ்வளவும் கொண்டவள்தான் சுகுணா.

'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தாள்' என்று கதை களில் வர்ணிப்பார்கள். உண்மையாகவே சுகுணாவின் வனப்பிலும் வளர்ச்சியிலும் நாளுக்கொரு விசேஷமும் பொழுதுக்கு ஒரு கவர்ச்சியுமாகத்தான் இருந்தது.

சீதா தேவி குழந்தையாயிருந்த போது அவளைப் பார்த்தவர்களெல்லாம் ஒரே குதூ கலமாயிருந்தார்கள். ஆனால் அவள் தகப்ப னார் ஜனக மகாராஜாவுக்கு மாத்திரம் சந் தோஷத்தோடு மன வேதனையும் சேர்ந்து கொண்டது. உண்மையில் சந்தோஷத்தை விட வேதனைதான் அதிகமாயிருந்தது. அவள் வயது வளர வளர அந்த வேதனையும் வளரத் தொடங்கியது. காரணம், 'ஜகன் மோகன ரூபத்துடன் விளங்கும் இந்தப் பெண்ணரசிக் குத் தகுந்த மாப்பிள்ளையைக் கண்டு பிடிக்க வேண்டுமே!' என்னும் கவலைதான்.

ஜனகமகாராஜனை வாட்டிய கவலை சர்மா வையும் வாட்டியது. சுகுணா நல்ல அழகிமாத் திரம் அல்ல; புத்திசாலியும் கூட. அத்துடன் கலாசாலை மாணவி. சங்கீதத்திலும் பரீட்சை கொடுத்துத் தேறி யிருந்தாள். தையல், எம்பிராய்டரி முதலிய நுணுக்கமான வேலை களில் எல்லாம் நல்ல தேர்ச்சி பெற்று விளங் கினாள்; கட்டுரை — கதைப் போட்டி, பாட் டுப் போட்டி, தையல் வேலைப் போட்டி முதலிய போட்டிகளிலெல்லாம் கலந்து கொண்டு ஏராளமாகப் பரிசுகள் பெற்றுக் கண்ணாடி பீரோ முழுவதும் வெள்ளிக் கோப்பைகளாக வைத்திருந்தாள்.



"என் பெண் சுகுணாவின் கல்யாணத்துக்கு வெள்ளிப் பாத்திரங்களைப் பொறுத்த வரை யில் எனக்குக் கவலை கொஞ்சம்கூட இல்லை. சுகுணாவிடம் இருக்கும் வெள்ளிக்கோப்பை களையும் கிண்ணங்களையும் வைத்துக்கொண்டு நாலு கல்யாணம் நடத்தலாம்!" என்று தமாஷாகச் சொல்லுவார் சர்மா.

அழகு, புத்திசாலித்தனம், பாட்டு, படிப்பு, பணம்—இவ்வளவும் நிறைந்த ஒரு பெண் ணுக்கு வரன் கிடைப்பது சிரமமான காரியம் தானே! அதிலும் எல்லாவற்றையும் விடச் சிரமமான காரியம் ஒன்றையும் அவர் செய்ய வேண்டியிருந்தது. சுகுணாவின் மனசுக்கு ஏற்ற இலட்சியக் கணவன் ஒருவனைத் தேடு வதுதான் அந்தச் சிரமம்.

சுகுணாவுக்கு ஏற்ற வரன் தேடுவதில் ராம நாதன் எடுத்துக் கொண்ட சிரமம் இவ்வளவு அவ்வளவு அல்ல. பத்திரிகைகளில் விளம் பரம் செய்து கட்டுக் கட்டாக ஜாதகங்களும் போட்டோக்களும் வரவழைத்துக் கொண்டே இருந்தார்.

சுகுணா கூட, "என்ன அத்தான் இது! சீக்கிரத்தில் 'விவாக பீரோ' வைத்து விடு வீர்கள் போலிருக்கிறதே! அலுப்பு சலிப்பு இல்லாமல் இப்படி ஜாதகங்களைத் திரட்டிக் கொண்டு வந்து சேர்க்கிறீர்களே! அத்துடன் இருந்தாலும் பாதகம் இல்லை. பிரதி ஞாயிற் றுக்கிழமைகளிலும் காலை வேளைகளில் என்னை ஒரு காட்சிப் பொருளாக்கி, பெண் பார்க்கும் படலத்துக்கு ஏற்பாடு செய்து விடு கிறீர்கள்! எனக்கு வர வர வெட்கம் பிடுங் கித் தின்கிறது. தயவு செய்து இந்தத் திரு விளையாடல்களை நிறுத்த மாட்டீர்களா?" என்று கெஞ்சிக் கேட்டாள்.



ராமநாதன், "சுகுணா, நீ படித்த பெண்; அதுவும் இன்னும் படிக்கும் பெண். உன் அழகு, புத்திசாலித்தனம், படிப்பு, அந்தஸ்து இவைகளுக் கெல்லாம் ஏற்றாற் போல் ஒரு வரன் கிடைக்க வேண்டும் என்றால் சிரமமாய்த்தானே இருக்கிறது? உனக்கு நல்ல வரனாக ஒருவன் கிடைத்துவிட்டால் அப்புறம் ஏன் எனக்கு இந்த வேலை? சரி, சுகுணா! நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை யல்லவா? காலையில்......!" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே சுகுணா இடை மறித்து, "......என்னைப்பார்க்க வரப் போகிறார்கள்! அப்படித் தானே?" என்று கேட்டாள்.

"ஆமாம், சுகுணா! எம். பி. பி. எஸ். பாஸ் செய்து விட்டு டாக்டர் தொழிலை ஆரம்பித் திருக்கும் ஒரு வரன் வருகிறான். மாமாவுக் குக் கூடத் தெரியும். அவரே உன்னிடம் சொல்லுவார். நீ ஜோராக 'டிரஸ்' செய்து கொண்டு அவர்களை வரவேற்க வேண்டும். என்ன?" என்றான் ராமநாதன்.

சுகுணா பதில் ஒன்றும் சொல்லாமல் தன் அறைக்குப் போய்க் கட்டிலில் சாய்ந்தாள். அவள் சிந்தனை ராமநாதனைத் தொடர்ந்தது.

ராமநாதன் வாசுதேவ சர்மாவின் சகோதரியின் பிள்ளை. இளம் வயதிலேயே பெற்றோரை இழந்து, சர்மாவின் ஆதரவில் வளர்ந்து, படித்து, பி. ஏ. பாஸ் செய்து ஒரு பிரசித்தி பெற்ற பாங்கியில் குமாஸ்தாவானான்.

ராமநாதனுக்கே சுகுணாவைக் கொடுத்து விட்டால் என்ன என்று சர்மா எத்தனையோ தடவை யோசனை செய்திருக்கிறார். அதில் ஒரு பெரிய சங்கடம் இருந்தது. ராமநாதனுக் கும் அவருக்கும் இடையே இருந்த அந்தஸ் துப் பிரச்னை இந்த விவாக விஷயத்துக்குப் பெரிய முட்டுக்கட்டையாக நின்றது.

'நமக்குத்தான் ஏராளமான சொத்து இருக்கிறதே! பிள்ளை யில்லாத சொத்துத் தானே! ராமநாதனை விட, இந்தச் சொத்துக் களையும் சுகுணாவையும் நம்பி ஒப்புவிக்க, ஒரு தகுந்த வரன் கிடைப்பானா' என்று அவர் மனச் சாட்சி அவரை இடிக்கும். வெகு நாட் களாக இப்படிச் சிரமப்பட்டார் சர்மா.

கடைசியில், தம் மனச்சாட்சியை ஒருவாறு திருப்தி செய்வதற்குச் சர்மா தமக்குள் ஒரு தீர்மானத்துக்கு வந்தார். சுகுணா ராமநாதனை மணக்க விரும்பினால், அவள் விருப்பத்துக்குக் குறுக்கே தாம் நிற்பதில்லை என்பதுதான் அந் தீர்மானம். இந்த நிலையில்தான் வரன் தேடும் படலத்தில் ராமநாதன் ஒரே மூச்சாக இறங்கித் தினம் ஒரு ஜாதகம், போட்டோ வரவழைத்த வண்ணமாயிருந்தான்.

வாசுதேவ சர்மா சுகுணாவுக்கு ஏற்ற வரனைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் கடுமையா யிருந்தார். ஏதாவது ஒரு சின்னக் குறை யிருந்தால் கூட, அவர் 'செலக்‌ஷன்' செய்ய மாட்டார். ராமநாதன் கொஞ்சங்கூட அலுக் காமல் எங்கிருந்தெல்லாமோ ஜாதகங்கள் வரவழைத்துக் கொண்டிருந்தான்.

சுகுணாவுக்கு வரவர இது வேதனையாகத் தோன்ற ஆரம்பித்தது. அன்று இரவு, சுகுணாவுக்குத் தன்னைப் பார்க்க வரும் வரன் களைப் பற்றி யெல்லாம் நினைவு படர ஆரம் பித்தது. வெகு நேரம் அந்தச் சிந்தனையில் ஆழ்ந்திருந்து பிறகு தூங்கி விட்டாள்.

கடைசியில், சுகுணாவுக்கு அவள் தகப் பனார் ஒரு வரனை நிச்சயம் செய்து விட்டார். அவன் எம். பி. பி. எஸ். பாஸ் செய்து விட்டு சொந்தமாகத் தொழில் ஆரம்பித்திருந்தான். சர்க்கார் ஆஸ்பத்திரியில் கௌரவ சர்ஜனாக இருந்து கொண்டு தன் தொழிலையும் கவனித்து வந்தான்.

ஏராளமான சீர் செனத்திகளுடன் அவனைச் சுகுணாவுக்கு நிச்சயம் செய்தார் அவள் தகப்பனார். மிகவும் தடபுடலாக விவாகத்தை நடத்தினார். சுகுணாவின் விவாகத்தின்போது ராமநாதன் எல்லா விவகாரங்களையும் தான் ஒருவனே இருந்து கவனித்துக் கொண்டான்.

விவாகத்தின் போது வந்திருந்த பெரிய மனிதர்களை வரவேற்பதற்கு ராமநாதன், காப்பி டிபன் கொடுத்து அவர்களை உபசரிப் பதற்கு ராமநாதன், அவர்களுக்கு விருந்தளிப் பதற்கு ராமநாதன், சம்பந்திப் பேர்களின் முகங்கோணாமல் அவர்களைக் கவனிப்பதற்கு ராமநாதன், முகூர்த்தத் தேங்காய் கொடுத்து உபசாரம் செய்து வந்தவர்களை அனுப்புவ தற்கு ராமநாதன்—இப்படி 'அங்கிங்கெனாத படி எங்கும் பிரகாசமாய்' விளங்கினான் ராம நாதன். சர்மா ஒரு நொடிக்கு நூறு தடவை ராமநாதனைக் கூப்பிட்ட வண்ணமா யிருந் தார். ராமநாதன் இல்லாவிட்டால் சுகுணா வின் கல்யாணம் நடக்காது என்று சொல் லும்படி இருந்தது. இத்தனைக்கும் மத்தியில் ராமநாதனுக்கு, சுகுணாவை அடிக்கடி பாரி

காசம் பண்ணுவதற்கு அவகாசம் இருந்ததை நினைக்கக் கருணாவுக்கே ஆச்சரியமாயிருந்தது.

கருணா தன் கணவனுடன் தனிக் குடித்தனம் செய்ய ஆரம்பித்தாள். அவள் கணவன் முதலில் இரண்டொரு மாதங்கள் மிகவும் அன்பாக நடந்து கொண்டான். பிறகு, எடுத்ததற்கெல்லாம் மாமனாரைப் பணத்துக்கு நச்சரிக்க ஆரம்பித்தான். கருணாவின் மேலுள்ள அன்பு காரணமாக, அவள் கண்ணீர் விடக் கூடாது என்பதற்காக, சர்மா மாப்பிள்ளை பணம் கேட்டபோதெல்லாம் இல்லையென்னாமல் வழங்கினார். எவ்வளவு கொடுத்தும் அவனுக்குத் திருப்தி யென்பது ஒரு சிறிதும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

“கருணா, உன் அப்பாவிடம் ஏராளமாகப் பணம் இருக்கிறது. அவருக்கு நீ ஒரே பெண். உனக்குக் கொடுக்காமல் வேறு யாருக்குக் கொடுக்கப் போகிறார்? வர வர, பணம் கேட்டால் முகத்தைச் சுளித்துக் கொள்கிறார். நம் தொழில் இங்கேயே இருந்தால் அபிவிருத்தி யடைவதாகத் தெரியவில்லை. நான் அமெரிக்கா போய் இன்னும் ஒரு விசேஷப் பரீக்ஷைக்குப் படிக்கலாம் என்று தீர்மானித்திருக்கிறேன். அதற்கு நாற்பதாயிரம் ரூபாய் வேண்டும். உன் அப்பாவிட மிருந்து வாங்கிக் கொடு!” என்று ஒரு நாள் கருணாவின் கணவன் ரௌத்ராகாரமாய்க் கத்தினான்.

“உங்களுக்கு அப்பா எவ்வளவோ செய்து விட்டார். இன்னும் கேட்பது நியாயமன்று. அவருக்கு நான் ஒரே பெண் என்றால் அதற்காக எனக்கே எல்லாவற்றையும் செய்துவிட முடியுமா?” என்றாள் கருணா.

அவள் கணவன் அவளைக் கடுங் கோபத்துடன் சுட்டெரித்து விடுபவன் மாதிரி பார்த்தான்.

“கருணா, எனக்கு என்னவோ அதெல்லாம் தெரியாது. இன்னும் ஒரு வாரத்தில் ரூபாய் நாற்பதாயிரம் என் கைக்கு வந்து சேரவேண்டும். இல்லாவிட்டால் நீ உன் தகப்பனாரிடமே இருந்து கொள்ளலாம்!” என்று சொல்லி விட்டு அவன் வெளியே போய்விட்டான்.

கருணாவின் கண்களில் குபுகுபு வென்று நீர் பெருகியது. கல்யாணத்தின் போது அவள் அத்தான் ராமநாதன், “கருணா, இனிமேல் நீ ஒரு டாக்டரின் மனைவி. மாப்பிள்ளை அமோகமாகச் சம்பாதித்துக் குவிக்கப் போகிறார். அவ்வளவுக்கும் நீதான் எஜமானி. அப்பொழுது உனக்கு இந்த ஏழை அநாதை அத்தான் நினைவு இருக்க வேண்டுமே! என்னை மறந்து விடுவாயா, கருணா?” என்று குரல் தழுதழுக்க, கண்களில் நீர் பெருக ராமநாதன் கேட்டது அவள் கண் முன் இப்பொழுது நடப்பதுபோல் தோன்றியது.

“ஐயோ, என் அன்பான அத்தானை மணந்து கொண்டிருந்தால் என் வாழ்க்கை எவ்வளவு இன்பமா யிருந்திருக்கும்! அவர் எப்படித் துணிந்து என்னை மணந்து கொள்வதாக அப்பாவைக் கேட்பார்! நான்தான் பாவி, என் தலையில் நானே மண்ணை வாரிப் போட்டுக் கொண்டேன்! அத்தானைத்தான் மணந்து கொள்வேன் என்று ஒரு வார்த்தை சொல்லாமற் போனேனே! அப்பா என் விருப்பத்துக்கு மாறாக ஒருநாளும் நடந்திருக்க மாட்டார்!” என்று சொல்லிக் கொண்டே கண்ணீர் விட்டாள்.

அப்பொழுது அத்தான் ராமநாதன் மீண்டும் அவள் எதிரில் தோன்றி, “கருணா, இந்த ஏழை அத்தானை உனக்கு நினைவு இருக்குமா?” என்று கேட்டான்.

கருணாவினால் பொறுத்துக் கொண்டிருக்கவே முடியவில்லை. “ஐயோ, அத்தான்! நான் உங்களை எப்படி மறக்க முடியும்? இந்தப் பாவியை நீங்கள் நினைவு வைத்துக் கொள்வீர்களா?” என்று கத்திவிட்டாள்.

அடுத்த நிமிஷம் ‘டக்’கென்று ‘ஸ்விச்’ போடப்பட்டது. ராமநாதன் வேகமாக உள்ளே வந்து பரபரப்புடன், “கருணா, கூப்பிட்டாயா?” என்றான்.

கருணா எழுந்து உட்கார்ந்து, “அத்தான், எனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லையா? நான் கண்டது கனவுதானா?” என்று கேட்டாள். அப்பொழுது அவளைப் பார்க்கப் பரிதாபமா யிருந்தது.

“கல்யாணமா? அது எப்படி எனக்குத் தெரியாமல் உனக்குக் கல்யாணமாகிவிடும்? நீ கனவுதான் கண்டிருக்கிறாய்?”

“அத்தான், தயவுசெய்து நீங்கள் மாப்பிள்ளை வேட்டையை நிறுத்துங்கள். உங்களுக்குப் புண்ணியமாய்ப் போகட்டும். நான் என் கல்யாணத்தைப் பற்றித் தீர்மானித்து விட்டேன். எனக்குப் பூரண சம்மதம் தான்......! உங்களுக்கு?” என்று கேட்டுக் கொண்டே அத்தானை ஓரக் கண்களால் பார்த்தாள். அவன் இந்த உலகத்தையே மறந்து ஒரு புன்னகை புரிந்தான்.

“இந்தப் பெண்பிள்ளைகள் மனசை யாரும் அறிய முடியாது!” என்றான் ராமநாதன்.

“ஆண் பிள்ளைகள் மட்டும் ஒன்றும் அறியாதவர்களோ? உங்கள் மனசைத் திறந்து ஒரு வார்த்தை சொல்லியிருந்தால்......?” என்று தயங்கினாள் கருணா.

“படித்த பெண்ணாகிய உன்னை வற்புறுத்திக் கட்டிக் கொடுக்க விரும்பவில்லை, உன் அப்பா. நீயோ உன் விருப்பத்தைச் சொல்லுகிற வழியாயில்லை. ஏழை அத்தான் நான் என்ன செய்ய முடியும், கருணா?”

அப்பொழுது அங்கு வந்த சர்மா, “இரண்டு பேரும் சமர்த்து. எதற்காக இப்படிப் பிடித்துச் சண்டை போட்டுக் கொள்கிறீர்கள்? ராமநாதா, உனக்குத்தான் அநுபவம் இருக்கிறதே! உன் கல்யாண ஏற்பாடெல்லாம் நீயே கவனித்துக் கொள்ள வேண்டியதுதான். இப்பொழுது நேரமாகி விட்டது. காலையில் பேசலாம்!” என்றார்.

கருணாவும் ராமநாதனும் நாணத்துடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். கருணாவின் கண்களை நீர் மறைத்தது.

**மூன்று கடிகார ஆர்டருக்கு ஒன்று இனாம்!**

உயர் ரக லீவர் வாட்சுகள், ஸ்விஸ் தயாரிப்பு. 5 வருஷ உத்தரவாதம். இதுவரை இக் குறைந்த விலைக்குக் கொடுத்த தில்லை. ஸ்டாக்குகள் கொஞ்சமே உள்ளன.

**இலவசம்** மூன்று வாட்சுகள் ஆர்டருக்கு ஒரு கைக்கெடிகாரமும் இரண்டுக்கு ஒரு கோல்டு கேப் பவுண்டன் பேனாவும் ஒரு கடிகாரத்துக்கு ஒரு வீப்பர் பவுண்டன் பேனாவும் இனாம். மேலும் ஒரு வெல்வெட் பெட்டியும் அழகான ஸ்ட்ராப்பும் இனாம்.

நெ.1.  சைஸ் 6½''

15 ஜுவல்ஸ் ஸ்டீல்பேக் கேஸ் ரூ. 38/-
15 ஜுவல்ஸ் ரோல்டுகோல்டு ரூ. 40/-

நெ.2.  சைஸ் 6½''

15 ஜுவல்ஸ் ஸ்டீல்பேக் ரூ. 38/-
15 ஜுவல்ஸ் ரோல்டுகோல்டு ரூ. 40/-

நெ.3.  சைஸ் 10½''

வாட்டர் ப்ரூப்
15 ஜுவல்ஸ் க்ரோம் ஸ்டீல்பேக் ரூ. 48/-
15 ஜுவல்ஸ் க்ரோம் உயர் ரகம் ரூ. 52/-
17 ஜுவல்ஸ் க்ரோம் ஸ்டீல்பேக் ரூ. 55/-

நெ.4.  சைஸ் 8½''

5 ஜுவல்ஸ் ரோல்டுகோல்டு ரூ. 32/-
15 ஜுவல்ஸ் க்ரோம் ஸ்டீல்பேக் ரூ. 38/-
15 ஜுவல்ஸ் ரோல்டுகோல்டு ரூ. 40/-

நெ.5.  சைஸ் 10½''

13 சைஸ் க்ரோம் கேஸ் ரூ. 19/-
5 ஜுவல்ஸ் பிராஞ் ரோல்டுகோல்டு ரூ. 25/-
15 ஜுவல்ஸ் க்ரோம் ஸ்டீல்பேக் ரூ. 38/-
15 ஜுவல்ஸ் ரோல்டுகோல்டு ரூ. 40/-



இங்கிலீஷ் அலாரம் டைம்பீஸ் ரூ. 19/-
இங்கிலீஷ் அலாரம் உயர் ரகம் ரூ. 21/-
ரயில்வே ரெகுலேட்டர் பாக்கெட்வாட்ச் ரூ. 13/-

**PIONEER WATCH COMPANY**
Post Box No. 11428, CALCUTTA-6

# தக்ஷிண ரயில்வே


## "விலக்கப்பட்ட" சாமான்கள் என்றால் என்ன என்பதை நீங்கள் அறிவீர்களா?

பொன், வெள்ளி, முத்துக்கள், ரத்னங்கள், ஆபரணங்கள், கடிகாரங்கள், கிளாக்குகள், பட்டுகள், சால்வைகள், சங்கீதக் கருவிகள், ரேடியோ செட்டுகள் மற்றும் அனேக சாமான்கள் "விலக்கப்பட்ட" பொருள்கள் என்று இந்த ரயில்வேயின் டைம் டேபிள்ஸ் & கைடு புத்தகத்திலும் இந்திய ரயில்வே கான்பரன்ஸ் அசோஸியேஷன் கோச்சிங் டாரிப் நெ. 15-லும் கூட்ஸ் டாரிப் நெ. 28-லும் தொகுக்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த மதிப்பு வாய்ந்த பொருள்களடங்கிய எந்த ஒரு பாக்கேஜ் ரயில் மூலம் அனுப்பப் பட்டாலும், அந்த பாக்கேஜிலிருக்கும் சரக்குகளின் மதிப்பு ரூ. 300 க்கு அதிகமாக இருப்பின், அனுப்புபவர் சரக்குகளின் மதிப்பை முன்னதாகத் தெரிவித்து வழக்கமான கட்டணத்துடன் குறிப்பிட்ட சதவிகிதம் அதிகக் கட்டணம் செலுத்தினாலொழிய ரயில்வே நிர்வாகஸ்தர்கள், பாக்கேஜிற்கு ஏற்படும் நஷ்டம், சேதம் குறைபாடு முதலியவை பற்றி எவ்விதப் பொறுப்பும் எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.

இது விஷயமான பூரா விவரமறிய உங்களருகிலுள்ள ஸ்டேஷன் மாஸ்டரிடம் விசாரிக்கலாம். அல்லது மேற்குறித்த புத்தகங்களைப் பார்க்கலாம்.

**சீப் கமர்ஷியல் சூபரின்டென்டெண்ட்**




அறிவாளி! ஸெவன் ஓ'கிளாக் ஸ்லாட்டெட் பிளேடுகளினல் தினசரி முகத்தை க்ஷவரம் செய்து கொள்கிறார்.



# ஸெவன் ஓ' கிளாக்
## ஸ்லாட்டெட் பிளேடுகள்

முகத்தைச் சுத்தமாக க்ஷவரம் செய்திருப்பது முன்னேற்றத்தின் அறிகுறியாகும். ஆனால் தினசரி க்ஷவரம் செய்து வருதல் அவசியம். நாவிதனைக் கொண்டு க்ஷவரம் செய்வதால் அதிகச் செலவு நேரிடும்.

ஆனால், தினமும் சிக்கனமான முறையில், சுத்தமாக க்ஷவரம் செய்து கொள்வதற்கு ஸெவன் ஓ' கிளாக் பிளேடுகள் கிடைத்திருப்பது ஓர் அதிர்ஷ்டமே. ஸெவன் ஓ' கிளாக் பிளேடுகள் அதி கூர்மையானவை, சுத்தமாக க்ஷவரம் செய்பவை, நெடுநாள் உழைப்பவை, உண்மையான சிக்கனம் வாய்ந்தவை.

வெற்றி[illegible]தந்த, வசீகரத் தோற்றமுடைய, மனிதர்களோடு சேர்ந்து கொ[illegible]கள்! தினசரி ஸெவன் ஓ' கிளாக் பிளேடுகளினால் க்ஷவரம் செய்யுங்கள்.

# 7 o'clock

ஸெவன் ஓ' கிளாக் ஸ்லாட்டெட் பிளேடுகள்




10 பிளேடுகள் கொண்ட பாக்கெட் ரூ. 1

53(1) TAM.

# பாதாள உலகம்!



ஆசிரியர் : ஹான்ஸ் பீட்டர்ஸன் (ஸ்விடன்)

மொழி பெயர்ப்பு: வாஞ்சி

நான் தூங்கி எழுந்த போது ஜடா வெளியே போய் விட்டான். லாசி மாத்திரம் தலையை வாரிக் கொண்டு வெளியே போவதற்குத் தயாராக இருந்தான். எல்லோரும் தினசரி வேலைக்குச் செல்லுவது போல நாங்களும் தவறாமல் எங்கள் வேலைக்குச் சென்று திரும்புவது வழக்கமாக இருந்தது.

பூலோகம் என்றும் சொர்க்கலோகம் என்றும் சொல்லுகிறார்கள் அல்லவா! நாங்கள் இந்த இரண்டில் எந்த உலகத்தையும் சேர்ந்தவர்கள் அல்ல. எங்கள் உலகம் ஒரு தனி உலகம் ஆகும். அதுதான் பாதாள உலகம்!

எங்கள் உலகத்தில் உள்ள சுதந்திரம் வேறு எங்கும் கிடையாது. நாங்கள் எங்கும் செல்லுவோம், என்ன வேண்டுமானாலும் செய்வோம். படிப்பு, ஒழுக்கம், சட்டம் முதலிய எத்தகைய கட்டுப்பாட்டுக்கும் நாங்கள் உட்பட்டவர்கள் அல்ல. போலீஸாரைத் தவிர வேறு யாருக்கும், —கடவுளுக்கோ, பெற்றோருக்கோ, பெரியவர்களுக்கோ நாங்கள் பயப்பட வேண்டியதில்லை.

ஏனெனில் எங்களுக்குத் தாயார் யார், தகப்பனார் யார் என்பது யாருக்கும் தெரியாது. நாங்கள் அனாதைக் குழந்தைகள்; தெருவிலே பிறந்து, தெருவிலே வளர்ந்து, தெருவிலே இறப்பவர்கள்!

பூமிதான் எங்களுடைய படுக்கையும் வீடும்; வானம் தான் எங்கள் வீட்டின் கூரை. சிற்சில சமயங்களில் மனித சஞ்சாரமற்ற இடிந்த பாழ் வீடுகளில் நாங்கள் ஒருவருக்கும் தெரியாமல் தங்குவது உண்டு. அது தான் எங்களுடைய மாளிகை!

நாங்கள் எங்களுக்கு அன்றாடம் அத்தியாவசியமாய்த் தேவையாக இருக்கும் சாதனங்களைத் தவிர வேறு எதையும் திருடுவதில்லை. சீப்பு, சோப்பு, ரொட்டி, சட்டை, சிகரெட் இவை போன்ற சில்லறைச் சாமான்களை மாத்திரமே நாங்கள் ஒருவருக்கும் தெரியாமல் எடுத்துக் கொண்டு வருவது வழக்கம். பேராசை கொண்டு பெரிய வேலைகளில் ஈடுபட்டால் போலீசாரின் கவனத்துக்கு இலக்காகும்படி நேர்ந்து விடும் அல்லவா!

எங்கள் நால்வரில் ஆலியைத் தவிர வேறு யாரும் ஒரு தடவை கூடப் போலீஸ் வலையில் விழுந்ததில்லை. ஆலி எப்போதுமே துணிந்து பெரிய வேலைகளில் ஈடுபடுவான். அதனால் தான் இப்போது அவன் எங்களிடையே இல்லை. பாவம்! அவன் இப்போது சிறையில் என்ன செய்து கொண்டிருக்கிறானோ!

எங்களில் ஒருவருக்காவது இன்னும் இருபது வயதுக்கு மேல் ஆகவில்லை.

அன்று என்னிடம் ஒரு சிகரெட் கூட இல்லை. உணவுப் பஞ்சத்தைக் கூட நான் சகித்துக் கொண்டு விடுவேன். ஆனால் சிகரெட் பஞ்சத்தை என்னால் சகிக்க முடியாது.

ஹோட்டலுக்குப் போனால் எனக்குத் தேவையான சிகரெட்டையோ, சில்லறையையோ நான் சம்பாதித்துக் கொண்டு விடுவேன். எப்படிச் சம்பாதிப்பேன் என்று கேட்கிறீர்களா! அதைச் சொல்ல முடியாது. அதுதான் எங்களுடைய தொழில் இரகசியம்!

குறிப்பாக, ஹோட்டலிலோ மற்ற இடங்களிலோ பத்திரிகை படிப்பதில் தன் முழு கவனத்



தையும் செலுத்துவோரிடம் தான் நாங்கள் எங்களுடைய தொழிலைச் சுலபமாக நடத்த முடியும்.

*　　　*　　　*

நான் ஹோட்டலுக்குச் சென்று ஓரிடத்தில் நின்று கொண்டிருந்தேன். என் கண் நாலா புறமும் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அப்போது ஓர் இளைஞனும், இரண்டு யுவதிகளும் ஹோட்டலுக்குள் வந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் எனக்குப் பகீர் என்றது. அவர்கள் எனக்கு மிகவும் பழக்கமானவர்கள் போல் தோன்றினர். ஆனால் எங்கே எப்போது பழக்கமானவர்கள் என்பது ஞாபகத்துக்கு வரவில்லை. இருந்தாலும் அவர்களுடைய கண்களுக்குத் தென்படாமல் வெளியே போய் விடுவது தான் நல்லது என்று எனக்குத் தோன்றியது.

உடனே நான் ஹோட்டலிலிருந்து வெளியே செல்லுவதற்காகத் திரும்பினேன்.

அந்த இளைஞன் என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டான். எனக்குத் திரும்பிப் பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை.

அவனது குரலிலிருந்து அவன் என் நண்பனான பர்ட் என்பதைத் தெரிந்துகொண்டேன். நானும் பர்ட்டும், இங்கர், ஆன் என்ற பெயர் உள்ள அந்த இரண்டு பெண்களும் இரண்டு வருஷங்களுக்கு முன் வரையில் சேர்ந்துதான் இருந்தோம். அவர்களும் பாதாள உலகத்தைச் சேர்ந்தவர்களே!

ஆனால் இப்போது அவர்களை என்னால் அடையாளமே கண்டுபிடிக்க முடியவில்லை. மூவரும் நாகரிகமாக உடை உடுத்தியிருந்தார்கள். அவர்கள் ஆரோக்கியத்துடனும் குதூகலமாகவும் உற்சாகத்துடனும் இருந்தார்கள்.

நான் அவர்களுக்கு அருகில் சென்று உட்கார்ந்தேன். பர்ட்டும் ஆனும் சேர்ந்தாற்போல் உட்கார்ந்திருந்தார்கள். இங்கர் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கண்களில் நீர் ததும்பி வழிந்தது.

இங்கருக்கு எப்போதுமே என்னிடம் தனி அன்பு உண்டு. நான் அப்போது இருந்த அலங்கோல நிலையைக் கண்டு அவள் மனம் நெகிழ்ந்திருக்க வேண்டும் என்பதை ஊகித்துக் கொண்டேன்.

"ஏன் இப்படி இளைத்து விட்டாய்!" என்று கேட்டான் பர்ட்.

எனக்குக் கோபம் பொங்கியது. "உன்னைப் போல் எங்கேயாவது பெரிய கொள்ளை அடித்திருந்தால் நானும் உன்னைப் போலவே நாகரிகமாக உடுத்திக் கொண்டு, பெண்களுடன் உல்லாசமாகக் காலம் கழிக்க முடியும்" என்று குத்திக் காட்ட வேண்டும் போல் இருந்தது எனக்கு.

ஆனால் நான் என் கோபத்தை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. கோபித்துக் கொள்வதால் என்ன லாபம் ஏற்பட முடியும்!

"நான் இளைத்திருக்கிறேனா!" என்று பதிலுக்குக் கேட்டு வைத்தேன்.

நான் என்னை ஒரு தடவை பார்த்துக் கொண்டேன். அப்போது என் மனம் பர்ட்டையும் என்னையும் ஒப்பிட்டுப் பார்த்தது.

என் உடைகள் பல இடங்களில் கிழிந்திருந்தன. நான் அன்று முழுதும் சாப்பிடவில்லை என்பதை என் முகம் காட்டாமல் இருக்குமா!

பர்ட் நாகரிகமான ஒரு கனவானைப் போல் காட்சி அளித்தான். என் நிலைமையைக் கண்டு நான் வெட்கம் அடைந்தேன். அதே சமயம் பர்ட்டின்மீது எனக்கு எல்லை கடந்த பொறாமை உண்டாயிற்று.

நான் ஏதோ சொல்ல வாயெடுத்தேன். பர்ட் என்னைப் பேச விடவில்லை. அவன் ஏதோ சொல்லத் தொடங்கினான்.

"ஹாரி! நான் சொல்லுவதைச் சிரத்தையோடு கேள். சிறு வயதில் நம்மைப்போல் சில்லறைத் திருட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்தான் இப்போது இந்நகரில் உள்ள பெரிய கண்ணாடித் தொழிற்சாலையில் மானேஜராக இருக்கிறார். அவரது சட்டைப் பையிலிருந்து நான் ஒரு சமயம் திருடியபோது அவர் என்னைக் கையும் களவுமாகப் பிடித்துக் கொண்டார்" என்று ஆரம்பித்தான் பர்ட்.

"அப்படியா! நானாக இருந்தால் உன்னைப் போல் மடத்தனமாக அகப்பட்டுக்கொண்டிருக்க மாட்டேன்" என்றேன் நான்.

நான் இவ்விதம் கூறியதை பர்ட் பொருட்படுத்தவேயில்லை. அவன் தொடர்ந்து பேசலானான்.

"அவர் என்னை அடிக்கவில்லை; போலீசாரிடம் ஒப்புவிக்கவும் இல்லை. என்னுடைய வரலாற்றைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். நான் பெற்றோரற்ற அநாதை என்று தெரிந்து புத்திமதி கூறினார். தமது தொழிற்சாலையில் வேலையில் வைத்துக் கொண்டார். அதிலிருந்து எங்க

ளுக்கு நல்ல காலம் ஆரம்பமாயிற்று. ஆனையும் இங்கரையும் நான் தான் அவருடைய தொழிற்சாலையில் சேர்த்தேன். எங்கள் ஒவ்வொருவருக்கும் தனி அறை கொடுக்கப்பட் டிருக்கிறது. இப்போது எங்கள் வாழ்க்கை அமைதியாகவும் ஆனந்தமாகவும் நடந்து வருகிறது'' என்றான்.

இச் சந்தர்ப்பத்தில் இங்கர் இடை மறித்து, ''பர்ட்டும் ஆனும் அடுத்த மாதம் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறார்கள்'' என்றான்.

''ஆம், அடுத்த மாதம் நாங்கள் இருவரும் கணவனும் மனைவியும் ஆகிவிடுவோம்!''

பர்ட் இவ்வாறு கூறி ஆனை அன்புடன் பார்த்தான்.

''இங்கர் உன்னையே நினைத்து நினைத்து உருகிக் கொண்டிருக்கிறான்'' என்றான் ஆன் இச் சந்தர்ப்பத்தில்.



ஆன் கூறியது முற்றிலும் உண்மை என்பது இங்கர் விம்மத் தொடங்கியதிலிருந்து வெளியாயிற்று.

''நான் முன்பு ஏன் இங்கரைக் கைவிட்டேன் என்பது பற்றி அவன் ஏதாவது சொன்னானா?'' என்று ஆவலுடன் கேட்டேன்.

''அவன் ஒன்றுமே சொல்லவில்லை. அது அவனையும் உன்னையும் பொறுத்த விஷயம். இருந்தாலும் திடீரென்று அவனை நீ அவ்விதம் கைவிட்டிருக்கக் கூடாது!'' என்றாள் ஆன்.

''வேறு என்ன செய்வது! நான் என்னைச் சம்ரட்சித்துக் கொள்வதற்கே திண்டாடிக்கொண்டிருக்கும்போது, இங்கரை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது!'' என்றேன்.

''நீ அவனைக் கைவிட்டதற்கு வேறு காரணம் எதுவும் இல்லையா!'' என்றாள் ஆன்.

''இல்லை'' என்று நான் பதில் கூறியது இங்கருக்குத் திருப்தியைக் கொடுத்திருக்க வேண்டும். ஏனெனில் அழுது கொண்டிருந்த இங்கரின் முகத்தில் அப்போது லேசாகப் புன்முறுவலின் சாயை தென்பட்டது.

''எனக்கு வசதி இருந்திருந்தால் நான் இங்கரைக் கைவிட்டிருக்கவே மாட்டேன்'' என்று நான் சொன்னதாக இங்கர் தன் மனதுக்குள் வியாக்கியானம் செய்து கொண்டிருக்க வேண்டும்.

யாதொரு விசேஷ அம்சமும் இல்லாத என்னிடத்தில் இந்தப் பெண்ணுக்கு ஏன் இவ்வளவு பாசமோ, தெரியவில்லை!

''நீயும் எங்களுடன் வந்து விடு. எங்கள் மானேஜர் நிச்சயமாக உன்னை வேலைக்கு எடுத்துக் கொள்வார். போலீசாருக்கும் பொது ஜனங்களுக்கும் பயந்து கொண்டு சோம்பேறி வாழ்க்கை நடத்துவதைக் காட்டிலும் நரக வேதனை வேறு என்ன இருக்க முடியும்!''

இவ்விதம் பர்ட் கூறியதும் இங்கர் எழுந்து என் கையைப் பிடித்துக் கொண்டாள். அவளால் பேசவே முடியவில்லை. பர்ட் கூறியதற்கு இணங்க நான் மறுத்து விட்டால் என்ன செய்வது என்பது அவளுடைய கவலை.

நான் வேலைக்குச் சென்றால் அவர்களைப் போல் என்னுடைய தோற்றத்திலும் உடைகளிலும் அபிவிருத்தி ஏற்படும் அல்லவா! இந்த எண்ணம் எனக்கு ஓரளவு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

இங்கர் வேலைக்குச் செல்லுமிடத்தில் நாகரிகமான எத்தனையோ இளைஞர்களைச் சந்தித்திருக்கலாம். அப்படியிருந்தும் அவளுக்கு என்மீது உள்ள அன்பு குன்றவில்லை. இதை நினைத்த போது என் மனம் பூரித்தது.

ஏற்கெனவே நான் அவளைக் கை விட்டுங்கூட அவள் என்னைக் கைவிடவில்லை. எனவே, இனி எக்காலத்திலும் இங்கரைக் கைவிடுவதில்லை என்று என் மனதில் உறுதி செய்து கொண்டேன்.

அதே சமயம் என் நண்பர்களான ஜடாவையும் லாசியையும் என்னால் மறக்க முடியவில்லை.—பாதாள உலகத்திலிருந்து அவர்களையும் கரையேற்ற வேண்டாமா! அவர்களையும் அழைத்துக் கொண்டு வருவதாகக் கூறிவிட்டு, பர்ட்டிடம் விடைபெற்றுக் கொண்டேன்.

பர்ட்டும் ஆனும் ஹோட்டலிலிருந்து புறப்பட்டனர். இங்கரும் அவர்களுடன் செல்லுவாள் என்று எண்ணினேன். ஆனால் அவள் என்னைத் தொடர்ந்து வந்தாள்.

நான் மறுபடியும் பழைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவிட்டால் என்ன செய்வது என்று அவள் நினைத்துக் கொண்டாள் போலும். என்னைக் கையோடு தான் இருக்கும் இடத்துக்கு அழைத்துக் கொண்டு போய்விடவேண்டும் என்பது அவளுடைய எண்ணம். அவளிடம் என் மனத்தைப் பறிகொடுத்த பின், நான் அவளுடைய அபிப்பிராயத்துக்கு விரோதமாக நடப்பேனா!

இங்கர் இல்லாவிட்டால் நான் பர்ட் கூறிய யோசனைக்கு இணங்கத் தயங்கியிருப்பேன். என் விஷயத்தில் இங்கர் காட்டிய அன்பும் பரிவும் என்னுடைய மனதை மாத்திரமல்ல, என் வாழ்க்கையையே மாற்றி விட்டது!



# அழகிற்கான அரிய சாதனம் 'ஓடின்'

***"Of all the toilet creams that I have used, I unhesitatingly prefer Oatine Cream as being the pleasantest and most satisfactory for improving the complexion."***

Kanan Devi

# OATINE

SNOW AND CREAM




Make sure seal is unbroken




# அருவிக்கரை ஆசிரமம்

'சுதர்சன்'

மொழிபெயர்ப்பு ரா.வீ.

## 18 பிரிந்தவர் கூடினர்!

நான் ஒரு நாள் இரவு வெகு நேரங் கழித்து ஹோட்டலை அடைந்தேன். எல்லோரும் தங்கள் தங்கள் அறைக்குச் சென்று தூங்கிவிட்டார்கள். நானும் என் அறைக்குச் சென்று உடை மாற்றிக் கொண்டு படுத்தேன். ஆனல் தூக்கம் வந்தால்தானே? என் கண்கள் நல்ல தூக்கத்தைக் கண்டு எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டன. 'உண்மையிலேயே தேவகி தூக்கில் ஏறித்தான் ஆக வேண்டுமா?' என்ற எண்ணம் என் உள்ளத்திலே அடிக்கடி எழுந்து ஊசியாகக் குத்தியது. தூக்குத் தண்டனை என்ற அந்தச் சொல்லை நினைத்த மாத்திரத்திலேயே எனக்கு மயிர்க் கூச்சல் எடுத்தது; நிலைக் குத்தல் இட்டது. கண்களிலே நீர் கசிந்தது.

இப்படி நான் சிந்தனையில் ஈடுபட்டிருந்த பொழுதுதான் பக்கத்து அறையிலிருந்து யாரோ பேசும் குரல் கேட்டது. இந்த அவேளையில் யார் பேசப் போகிருர்கள்? என்ன பேசப் போகிருர்கள்? ஏதாவது மிக மிக முக்கியமான விஷயமாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் எல்லோரும் அயர்ந்து தூங்கும் இந்த வேளையில் இவர்களுக்கு என்ன பேச்சு வேண்டியிருக்கிறது?

இவர்கள் என்னதான் பேசுகிருர்கள் என்பதைக் கேட்க வேண்டும் என்ற ஆர்வத்தில் நான் சுவரோடு சுவராக ஒட்டிக் கொண்டு ஒட்டுக் கேட்கலானேன். பேசுவது ஆணும் பெண்ணும் என்று தோன்றவே, நான் இன்னும் காதைத் நீட்டிக் கொண்டு கேட்க முற்பட்டேன்.

"உனக்குச் சம்மதமா, இல்லையா? சொல்வதை, 'வெட்டு ஒன்று, துண்டு இரண்டு' என்று தெளிவாகச் சொல்லிவிடு. இப்படியே நாட்களை ஒத்திப் போட்டுக் கொண்டும் தவணை சொல்லிக் கொண்டும் இராதே! என் பொறுமையைச் சோதிக்காதே. ஆமாம், சொல்லி விட்டேன். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் நம் இருவருக்கும் கல்யாணம் ஆகிவிட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். என்ன, நான் சொல்வது புரிந்ததா?" என்றது ஆண் குரல்.

"ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுக்கவில்லை என்பார்களே, அதுபோல் எதற்கு இவ்வளவு அவசரப்படுகிருய்? இன்னும் கொஞ்ச நாள் நீ ஏன் பொறுத்துக் கொள்ளக் கூடாது? இப்பொழுதுதான் என் சகோதரி இறந்திருக்கிருள். அவள் இறந்து அதிக நாட்கள்கூட ஆகவில்லை. அப்படியிருக்கும் பொழுது நம் இருவருக்கும் இப்பொழுதே கல்யாணம் நடந்தால் ஜனங்கள் என்ன சொல்லிக் கொள்வார்கள்? நம்மை ஏளனம் செய்து ஏசித் தள்ளிவிட மாட்டார்களா? அவர்களுடைய ஏச்சுப் பேச்சுக்குத் தப்பி நாம் அப்புறம் இந்தப் பட்டணத்தில் வாழ்ந்து விட முடியுமா? ஆகவே, சற்றுப் பொறு!" என்றது பெண் குரல்.

"ஜனங்கள் இருக்கிருர்களே, ஜனங்கள்! நீ அவர்கள் பேச்சைச் சிறிதும் காதில் போட்டுக் கொள்ளாதே!"—இது ஆண் குரல்.

"காதில் போட்டுக் கொள்ளாமல் இருப்பதா? இந்த ஊரில் இருந்தால், அவர்கள் பேச்சுக் காதில் விழாமல் இருந்து விடுமா? இந்த ஊரை விட்டு நமக்கு வேறு போக்கிடம் ஏது?" என்று கேட்டது பெண் குரல்.

"சகோதரியின் சாவுக்குச் சோகம் கொண்டாடுகிருயோ?" என்று ஏளனமாகக் கேட்டது ஆண் குரல்.

"நீயோ புருஷன். புருஷர்களே கடின சித்தம் வாய்ந்தவர்கள்; அதனுல்தான் இப்படி நெஞ்சில் சிறிதும் ஈவு இரக்கமின்றிப் பேசுகிருய். நானே பெண். உன்னைப் போல்

கல்நெஞ்சக்காரியாக ஆக வேண்டும் என்றால் அது என்னால் எப்படி முடியும்?''

"எந்தக் கிராதக நெஞ்சத்துடன் கொலை செய்தாயோ, அப்படித்தான்...!''


"உஷ்! இரைந்து பேசாதே! யாராவது கேட்டுவிடப் போகிறார்கள்!'' என்று எச்சரித்தது பெண் குரல்.

"பாவம்! ஏதும் அறியாத, ஒரு குற்றம் புரியாத ஒரு இந்தியப் பெண் அல்லவா அநாவசியமாகத் தூக்கு மரத்துக்கு இரையாகிறாள்! சிற்சில சமயம் நீ கல் நெஞ்சம் என்று சொல்லும் என் நெஞ்சமே இதை எண்ணி நெகிழ்ந்து விடுகிறது!'' இது ஆண் குரல்.

இந்தப் பேச்சு வார்த்தையைக் கேட்டதும், காரிருளில் மின்னொளி எழுவது போல் என் இருண்ட உள்ளத்திலே நம்பிக்கை ஒளி வீசியது. நான் என் அறையை விட்டு வெளியே வந்தேன். எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு ஒரு எல்லை கோலிச் சொல்லமுடியாது. இது வானமா, புவியா என்ற நினைப்பையே மறந்தேன். அடுத்த நிமிஷம் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி விரைந்தேன்.

மறு நாள் உண்மையான குற்றவாளி கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டாள். ஆகவே, வழக்கு மறுபடியும் ஒரு முறை தலையோடு கால்வரை புதிதாக உருவெடுத்து விட்டது.

குற்றம் புரிந்தவள் வேறு யாரும் இல்லை. லூஸியின் கூடப் பிறந்த சொந்தச் சகோதரிதான். முதலில் அவள் தன்னைக் காத்துக்கொள்ள எத்தனையோ விதமான முயற்சிகள் எல்லாம் செய்தாள். ஆனால் போலீஸ் இலாக்காவின் கெடுபிடியும், நியாயஸ்தலத்தின் நேர்மைத் திறனும் அவள் குற்றத்தை ஒப்புக் கொள்ளுமாறு செய்து விட்டுத்தான் மறு காரியம் பார்த்தன. சட்டத்தின் உடும்புப் பிடி அவளை இறுக்கிப் பிடித்துக் குற்றவாளி என்பதை நிரூபித்து விட்டது. ஏமாற்றி விட்டு ஓட முடியாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. ஆகவே, அவள் தன் வாக்கு மூலத்தில் தன் குற்றத்தை ஒளிக்காமல் ஒப்புக் கொள்ளும்படியாகி விட்டது.



அவள் தன் வாக்கு மூலத்தில் கூறியதாவது:—நானும் லூஸியும் சொந்தச் சகோதரிகள். எங்கள் இருவருக்கும் ரூப்சந்திடம் காதல் ஏற்பட்டு விட்டது. ஆனால் நாங்கள் இருவருமே இப்படி ரூப்சந்தைக் காதலிப்போம் என்று நான் கனவிலும் கருதவில்லை. கொஞ்ச நாட்கள் கழிந்த பின்னர் தான் எனக்கு அந்த ரகசியம் தெரிந்தது. என் காதலுக்கு என் தங்கையே குறுக்கே நிற்பதை அறிந்த எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. கோப வெறியில் சீறி விழும் பெண் சிங்கத்தைப் போல் நான் உள்ளம் கொதித்தேன். என் சகோதரியிடம் சென்று 'நீ அந்த இந்தியப் பாதிரியின் நினைவை விட்டு விடு. இல்லா விட்டால் உன் சதையைத் துண்டு துண்டாக்கி விடுவேன்!' என்று கடிந்தேன். ஆனால் லூஸி என் அதட்டல் உருட்டல்களுக்கெல்லாம் மசியவில்லை; அடி பணியவில்லை. அவள் நான் சொன்னதைச் சிறிதாவது காதில் வாங்கிக் கொண்டால் தானே? பித்தனுக்கும் காதல் பித்தனுக்கும் பிறருடைய உபதேசங்கள் எங்கேயாவது காதில் ஏறுவது உண்டா? என் ஆசை அவலமாவதைக் கண்ட நான் என் சுய உணர்வை மறந்தேன். அதன் பலனாக ஒரு நாள் தருணம் பார்த்து, என் சகோதரியை என் இந்தக்



கைகளாலேயே, அந்த இந்தியனின் குடிசையில் கத்தியால் குத்திக் கொன்று போட்டேன்.

* * *

அவள் உண்மையைச் சொல்லிக் குற்றத்தை ஒப்புக் கொள்ளவே, தேவகி விடுதலை பெற்றாள். வழக்கு அவள் மேல் திரும்பியது. திரும்பவும் வழக்குக்கு வேண்டிய ஆயத்தங்கள் அமோகமாக நடந்தன.

ஒருநாள் நான் அவளைச் சந்திப்பதற்கான அனுமதி பெற்று, அவள் வைக்கப் பட்டிருக்கும் சிறைக் கூடத்தை அடைந்தேன். அவளைச் சந்தித்ததும் முதலாவதாக, “நான் ஒரு கேள்வி கேட்கலாமா?” என்று கேட்டேன்.

“என்ன, வழக்குச் சம்பந்தமாகவா?” என்று கேட்டாள் அவள்.

“இல்லை, வழக்குக்கும் அதற்கும் அவ்வளவாகத் தொடர்பு கிடையாது!” என்றேன்.

“அப்படியானால் தாராளமாகக் கேளுங்கள்!” என்றாள்.

“நீங்களும் உங்கள் சகோதரியும் அந்த இந்தியச் சந்நியாசியைக் காதலித்ததாகச் சொன்னீர்களே! அந்தச் சந்நியாசி உங்களில் யாரையாவது காதலித்தாரா என்பதை அறிய விரும்புகிறேன்!” என்றேன் நான்.

என்னுடைய இந்தக் கேள்வி அவளுடைய மனப் புண்ணை மறுபடியும் கிளறச் செய்திருக்கவேண்டும் என்று தோன்றியது. அவள் தலையைக் குனிந்து கொண்டு, “இல்லை அது தான் இல்லை. அவர் எங்கள் இருவரில் யாரையுமே கண்ணெடுத்தும் காணவில்லை; எங்கள் காதலைப் பொருட்படுத்தவும் இல்லை. அவர் அப்படி என் காதலை அலட்சியப் படுத்தவேதான், என் ஆத்திரம் அதிகமாகியது. நான் தருணம் பார்த்து என் சகோதரியை அவருடைய குடிசையில் குத்திப் போட்டேன். ஏன் அப்படிச் செய்தேன் என்றால், ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பார்களே, அது போல் என் இரண்டு விரோதிகளையும் அதாவது என் காதலுக்கிடையே இடையூறாகக் குறுக்கிட்ட என் சகோதரியையும், என் காதலைக் கடுகளவும் பொருட் படுத்தாமல் அலட்சியம் செய்த அந்தச் சந்நியாசியையும் ஏக காலத்தில் பழி வாங்கி விட வேண்டும் என்று எண்ணினேன். ஆனால் என் தலையில் வேறு விதமாக எழுதியிருக்கிறது என்று அப்பொழுது எனக்குத் தெரிந்தால்தானே?” என்றாள்.

சகோதரா! எனக்கு உள்ளத்திலிருந்து மாபெரும் சுமை கீழிறங்கியதுபோலிருந்தது. அசாத்திய ஜுரம் வீசும் ஒருவன் ஜுரம் இறங்கினால், என்ன உணர்ச்சியைப் பெறுவானோ, அதே உணர்ச்சி என் உள்ளத்தை ஆட்கொண்டது. அங்கிருந்து நான் நேரே ரூப்சந்தின் குடிசையை நோக்கிச் சென்றேன். ரூப்சந்த் என்னையேதான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாரோ என்னவோ? என்னைக் கண்டதும் தம் இரு கைகளையும் நீட்டி அன்புடன் வரவேற்றார். அவர் அப்படிக் கைகளை நீட்டி வரவேற்றதைக் கண்ட எனக்கு வைகுந்தத்தின் வாயிலே திறந்து விட்டது போன்ற பெருமித உணர்ச்சி உண்டாயிற்று. நான் மகிழ்ச்சி வெறியில் மனம் நைந்து நெஞ்சு உருகி, நெக்குருகிப் போனேன். மனிதப் பிறவி எடுத்த பயன் அன்றுதான் ஏற்பட்டதாக எனக்குத் தோன்றிற்று. மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்து நான் கும்மாளி போட்டுக் கொண்டு குதிக்கவே தொடங்கிவிட்டேன் என்றால் எனக்கு உண்டான மகிழ்ச்சியை நான் எப்படி வார்த்தை வடிவில் வைக்க முடியும்? யாராவது பார்த்தால் என்ன சொல்லுவார்கள் என்ற சிந்த

ணையே என் உள்ளத்தில் எழவில்லை. நான் எனது அந்த மகிழ்ச்சி வெறியை நாலுபேர் அறியக் காட்டத்தான் விரும்பினேன். இன்பத்தை வெளிக் காட்டிக் கொண்டால் தானே இன்பத்தின் சுவை இன்னும் அதிகரிக்கும்?

மகிழ்ச்சி மயக்கத்திலிருந்து விடுபட்ட பின் நான் நாற்காலியில் ரூப்சந்துக்கெதிரே உட்கார்ந்து கொண்டு, "நீங்கள் எங்களை ஒரேயடியாக இப்படி மறந்து விட்டீர்களே! தங்களைத் தரிசிக்க வேண்டி நாங்கள் என்ன தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தோம், தெரியுமா?" என்று கேட்டேன்.

ரூப்சந்த் வானத்தைப் பார்த்து நீண்ட பெருமூச்சு விட்டார். பிறகு, "நடப்பதெல்லாம் நாராயணன் செயல். அவன் எண்ணம் அப்படியிருக்கும்பொழுது நாம் என்ன செய்யக் கிடக்கிறது? இப்பொழுது இந்தக் குடிசை என் உள்ளத்தில் குடி கொண்டு விட்டது. இந்த வாழ்க்கையில் உள்ள இன்பம்...... ஆகா!......" என்று ஆரம்பித்து விட்டார்.

நான் குறுக்கிட்டு, "அப்படியானால் நீங்கள் திரும்பி வரப் போவதில்லையா?" என்று கேட்டேன்.

"அப்படித்தான் எண்ணிக் கொண்டிருக்கிறேன்!"

"அப்படியானால் தேவகியின் நிலைமை என்ன ஆகும்? பாவம், அதை நினைத்தால் தான் எனக்குப் பரிதாபமாயிருக்கிறது!" என்றேன்.

"அந்தப் பாவியின் பெயரை என்னெதிரே எடுக்காதே!"

"அதென்ன, அப்படிப் பேசுகிறீர்கள்? நீங்கள் இப்படி விட்டேற்றியாகப் பேசுவது கொஞ்சங்கூட நன்றாயில்லை!"

"அவள் பெயரைக் கேட்டாலே என் நெஞ்சு கொதிக்கிறது. மட்டு மரியாதையைக் காற்றில் பறக்க விட்டுவிட்ட அவள் ஒரு பெண்ணா? பேய் அல்லவா? தன் மானத்தைத் தண்ணீரில் மிதக்கவிட்ட அந்தத் துர் நடத்தைக் காரியை......"

அவர் சொன்ன வார்த்தைகளை அதற்கு மேல் என்னால் காது கொண்டு கேட்க முடியவில்லை. ஆகவே, ஆத்திரம் தீர உரத்த குரலில், "நிறுத்துங்கள்! தங்கள் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தன் உயிரைத் தியாகம் செய்யத் துணிந்த அந்த உத்தமியைப் பற்றி வாயில் வந்தபடி பேசுவது தங்களைப் போன்றோருக்கு அழகில்லை!" என்றேன்.

"அதெல்லாம் வாஸ்தவம்தான். ஆனால் பாவத்தின் கறை உள்ளத்தின் உதிரத்தைக் கொண்டு அலம்பினாலும் போகாது!"

"அப்படியானால் உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் பதித்து விட்ட தீர்மானத்தை மாற்றிக் கொள்ளுவதாக உத்தேசம் இல்லையா?"

"மாற்றிக் கொள்ளுவதா? உள்ளத்தில் உண்டான உறுதியை மாற்றிக் கொள்ளுவது என்பது முடிந்த காரியமா? இதோ பார், ஹரிஸேன்! இந்த விஷயத்தில் என்னை அதிகமாகக் கிண்டாதே! இந்த விஷயம் என் ஆத்மாவுக்கு அளவற்ற கிலேசத்தை உண்டு பண்ணுகிறது. அண்டிக் கெடுத்தவர்களை நினைத்தால் இன்னும் ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது!" என்றார் ரூப்சந்த்.

"ஆனால் தேவகி ஒருவிதக் குற்றமும் அறியாதவளாயிற்றே! அவள் சொன்ன ஒரு சின்னப் பொய்க்காக இவ்வளவு பெரும் தண்டனையா?" என்றேன்.

ரூப்சந்த் அதற்கு ஒன்றுமே பதில் பேசவில்லை. அவர் முகத்தைக் கம்பீரமாக வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

என் சொற்கள் அவருடைய உள்ளத்தில் எவ்விதக் கிளர்ச்சியையும் உண்டு பண்ணினதாகத் தெரியவில்லை. ஆயினும் நான் நடந்த சம்பவம் அத்தனையையும் சாங்கோபாங்கமாக முறையிட்டு விட்டு, "தவறு என்னுடையதுதான். ஆகவே, மன்னிக்க வேண்டும்!" என்று மன்றாடினேன்.

அதைக் கேட்ட அவர் எத்தனை ஆட்சேப சமாதானங்கள் சொன்னார். தேவகி பதிவிரதையாயிருந்தால் தம்மிடம் ஒளிவு-மறைவு வைத்துக் கொண்டிருக்கக் கூடாது என்றெல்லாம் வாதாடினார்.

"யாரும் அந்த நிலையில் இருந்தால் அப்படி நடந்து கொள்ளுவது சகஜம்தான். மனிதன் தவறுவது சகஜந்தானே?" என்று நான் வாதாடினேன்.

என் பேச்சைக் கேட்டபின் அவர் மனம் மாறியது என்பதை அவருடைய முகபாவம் எடுத்துக் காட்டியது. என் பேச்சினால்தான் அவருடைய மனம் மாறியிருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. தேவகியின் கற்பின் சக்திதான் அவருடைய மனத்தை அப்படி மாற்றியிருக்க வேண்டும்.

அவர் கண்களிலே நீர் துளித்தது. கடும் கோடை காய்ந்தபின் இனிய மழை பொழிந்தால் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்? அவருடைய வறண்ட முகத்தில் நீரைப் பார்த்ததும் என் உள்ளம் புல்லரித்தது. என் காரியம் கை கூடிவிட்டதாக நினைத்து இறுமாந்தேன். அவர் கண்கள் ஆறாகப் பெருக அழுத வாறே, "ஹரிஸேன்! முன்பின் யோசியாமல் நான் அவளுக்குப் பெருங் கொடுமை இழைத்து விட்டேன். அவள் இரண்டு மூன்று தடவைகள் என்னைப் பார்ப்பதற்காக இங்கே வந்திருந்தான். நான்தான் எரிந்து விழுந்து அவளை இங்கே வரவொட்டாமல் அடித்துத் துரத்தினேன். அப்பொழுது அவள் தன் மனத்துக்குள்ளே என்ன எண்ணியிருப்பாளோ, எனக்குத் தெரியாது. இப்பொழுது என் உள்ளத்தில் அவள் விஷயத்தில் சிறிதும் சந்தேகம் இல்லை. இதுவரை நான் அவளையே குற்றவாளி என்று கருதி வந்தேன். குற்றம் என்னுடையதுதான் என்ற எண்ணம் இது வரை எனக்கு எழுந்ததில்லை. வா, போய் அவளிடம் மன்னிப்புக் கேட்போம்!" என்றார்

# பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

## கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம்: 1933)

தலைமை ஆபீஸ்: மதுரை

சிறந்த சேவை செய்து வருகிறது


**நெருப்பு, கப்பல், மோட்டார், விபத்து**

முதலிய சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

மொத்த ஆஸ்திகள் — ரூ. 87,00,000

கிளைகள்: பம்பாய், கல்கத்தா, நாகபுரி, சென்னை
திருவனந்தபுரம், கோயம்புத்தூர்.

பாசிக்கு நடுவில் காட்சி யளிக்கும் தாமரை மலர் அழகு வாய்ந்ததே. ஆனால் நீண்ட கூந்தலோடு கூடிய ஒரு பெண் மணியின் முகம் அதையும்விட அழகு வாய்ந்தது.



## கேசவர்த்தினி

உபயோகித்து நீண்ட கூந்தல்
அழகுடன் விளங்குங்கள்

கேசவர்த்தினி அணா 14. ஷாம்பூ அணா 14. எங்கும் கிடைக்கும்.

தென் இந்திய ரஸாயனசாலை - கோயமுத்தூர்

# நோய்க்குப் பின் ஏன்ஜியர்ஸ் நரம்பின் சக்தியை அதிகரிக்கின்றது

வலிமை குன்றி நரம்பின் சக்தி குறைந்து தளர்ச்சி ஏற்படுமாயின் பலவிருத்தியளித்து ஊக்க மளிக்க ஏன்ஜியர்ஸ் எமல்ஷன் (Angier's Emulsion) இன்றியமையாத ஓர் அரிய ஔஷதம். நீண்டகால நோய் வாய்ப்பட்டு மிக்க பலஹீனமானவர்களுக்கு ஏன்ஜியர்ஸ் (Angier's) ஓர் வரப்பிரஸாதம் போன்றது.

எல்லா கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் கிடைக்கும்





**ANGIER'S EMULSION**

## வீட்டு சினிமா புரோஜக்டர்



இந்த போர்டபிள் புரொஜெக்டரால் உங்கள் வீட்டிலேயே சினிமாப் படங்களைப் பார்த்து மகிழலாம். இதை மின்சாரத்தினாலும் டார்ச்சினாலும் இயக்கலாம். சினிமாபோன்று 35 m. m. பிலிமையே உபயோகிக்கலாம். திரையில் படங்கள் முழு அளவிலும் கலரிலும் சினிமா போலவே பார்க்கலாம். விலை ரூ. 12-8-0. வி.பி.பி. சார்ஜ் ரூ. 2-8-0 தனி. மேற்கொண்டு பிலிம் கெஜம் 1-க்கு அணா 8.

## புதுமாதிரி அமெரிக்கன் சிறிய ஸ்பிரிட் ஸ்டவ்



உங்களது சிற்றுண்டி, டீ, வெந்நீர் முதலியவைகளை தயாரித்துக் கொள்ள மிகவும் உபயோகமானது. இந்த ஸ்டவ்விற்கு கொஞ்சம் ஸ்பிரிட் செலவு செய்தால் உங்கள் வேலையை பூர்த்தி செய்யும். ஒன்றின் விலை ரூ. 6-0-0. வி. பி. பி. சார்ஜ் ரூ. 1-8-0 தனி.

## எலக்ட்ரிக் & ரேடியோ கைட்

ரூ. 15 செலவில் உங்கள் சொந்த ரேடியோவை தயாரியுங்கள். வீட்டில் எலக்ட்ரிக் ஒயரிங், ரேடியோ ரிப்பேர் முதலிய எலக்ட்ரிக் சம்பந்தமானவைகள் எல்லாம் கற்றுக்கொண்டு மாதம் ரூ. 200 சம்பாதியுங்கள். விலை. ரூ. 4-0-0 தபால் செலவு ரூ. 0-12-0 தனி.

## எம்பிராயிடரி மிஷின்

நவீன ஆங்கில எம்பிராயிடரி மிஷின். இதனால் அழகான பூக்களையும், கலர் படங்களையும் இயற்கை வர்ணனைகளையும் தைக்கலாம். ஒவ்வொரு வீட்டுப் பெண்களுக்கும் மிக உயர்ந்த பரிசு. விலை ஒன்றுக்கு ரூ. 6/8/- வி. பி. பி. சார்ஜ் ரூ. 1/8/- தனி. நூற்றுக்கணக்கான எம்பிராயிடரி டிசைன் புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 2/8/-

## மைக்ராஸ்கோப்



தூரத்திலும் மலையிலுமுள்ள இயற்கை அழகைக் கண்டு மகிழலாம். தூரத்திலுள்ளதும், நுட்பமான சிறிய பொருள்களையும் மிக நன்கு பார்க்கலாம். குதிரைப் பந்தயம், மலைப் பிரயாணத்திற்கும் மிக உகந்தது. விலை ரூ. 6/- வி. பி. பி. சார்ஜ் 1/8/- தனி.

## 14 பாஷைகள் கற்கலாம்

குஜராத்தி, மராத்தி, தமிழ், பஞ்சாபி, ஹிந்தி முதலிய (14 பாஷைகளை) 48 மணி நேரத்தில் கற்கலாம். விலை ரூ. 5. போட்டோ கிராபிக் கலை ரூ. 3. சோப் செய்யும் முறை ரூ. 3. வாசனை திரவியங்கள் செய்யும் முறை ரூ. 3. தையல் & கட்டிங் ரூ. 3. டிராயிங் & பெயிண்டிங் ஆசான் ரூ. 4. சுக வாழ்வு ரூ. 3. ஒவ்வொரு புத்தகத்திற்கும் வி.பி.பி. சார்ஜ் அணா 12 தனி.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதப்படல் வேண்டும்

**MILAP TRADING CO., (128K) KANWARIGANJ, ALIGARH. U.P.**

நாங்கள் இருவரும் புறப்படத் தயாரானோம். அதற்குள்ளாகத் தேவகியே எங்களைத் தேடி வந்து விட்டாள். அவளைக் கண்டதும் என் கண்களை நீர் கட்டியது. இலையுதிர் காலத்தில் புஷ்பச்செடியின் கிளை களையிழந்து குச்சி குச்சியாகக் காட்சி அளிக்குமே, அது போல் அவள் ஒட்டி உலர்ந்து ஒரே துரும்பாகக் காட்சி அளித்தாள்.

ரூப்சந்த் அவளைக் கண்டதும் தம் இரு கைகளையும் நீட்டித் தழுவிக்கொள்ள முன்னேறினார். தேவகியும் மகிழ்ச்சி வெறியில் ஒரே ஓட்டமாக அவரை நோக்கி ஓடி வந்தாள். அப்படி ஓடி வந்தவள் அவரை அணைத்துத் தழுவிக் கொள்ளவில்லை. காலடிகளில் விழுந்து பணிந்து வணங்குவதற்காகக் குனிந்தவள் அப்படியே மூர்ச்சையாகி விட்டாள். ரூப்சந்த் அவளைத் தூக்கி அன்புடன் தழுவிக் கொண்டார். அவர் கண்களில் நீர் கசிந்தது. அந்த நீரில் ஆனந்தமும் துயரமும் அபிமானமும் அன்பும் வெட்கமும் விருப்பமும் ஒன்றையொன்று பிரிக்க முடியாமல் ஒன்றாகக் கலந்திருந்தன. அதேபோல இவ்வளவு நாட்கள் பிரிந்திருந்த தம்பதிகளும் பிரிக்க முடியாமல் கலந்து விட்டனர்.

அன்றிரவு ரூப்சந்தின் குடிசையான ஆனந்த பவனத்தின் அழகே அலாதியாகத் தனித்து விளங்கியது. எங்கும் ஆனந்த வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. ஒவ்வொரு பொருளும் 'ஆனந்தம், ஆனந்தம், ஆனந்தமே!' என்று இசைபாடுவது போலிருந்தது. எங்கள் எல்லோருக்கும் இழந்த அமைதி மீண்டும் கிடைத்து விட்டது.

நான் அங்கே கொஞ்ச நாட்கள் தங்கினேன். அந்தக் காலத்து இன்ப நினைவுகள் இன்னும் என் இருதயத்திலே இன்ப லாகிரியைக் கிளறி விடுகின்றன.

சகோதரா! நான் எத்தனையோ நகரங்களைப் பார்த்திருக்கிறேன். இன்னும் எத்தனையோ நகரங்களைப் பார்க்கப் போகிறேன். ஆனால் ஆனந்த பவனத்திலிருந்த பொழுது காற்றிலே மிதந்து வந்த அந்த இன்பகீதம் காணக் கிடைத்த சொர்க்கத்துக்கு ஈடான சுகத்தையும், ஆன்மீக அறிவிலே புதைந்து கிடந்த பேரின்பத்தையும், வேறு எதிலும் காணவில்லை; காண முடியாது என்றே தோன்றுகிறது. அங்கே காதல்-கீதம் இசைத்துக் கொண்டு காற்று வீசியது. அன்பு மலர் அலர்ந்து நறுமணம் கமழ்ந்தது. தேவகி-ரூப்சந்த் ஆகிய இருவரின் பரிசுத்தமே உருவான கொள்கைகளும் நோக்கங்களும் என்னைப் போன்ற, இகலோக இன்பத்தையே பேரின்பமாகக் கருதும் தன்னலத்தை யன்றிப் பிறநலம் கருதாத, கபடமும் தாபமும் ஒருங்கே நிறைந்த மனிதனின் மனத்தையே அடியோடு மாற்றி விட்டன என்றால், அவர்களுடைய தூய நடத்தையின் பெருமையை எப்படி வர்ணிக்க முடியும்? நிகழ்ந்த அத்தனை சம்பவங்களும் என் மனத்தை மாற்றுவதற்காக ஏற்பட்டவை போலத் தோன்றியது.

இப்பொழுது அவர்கள் அங்கே இல்லை. இந்தியாவுக்குப் போய் விட்டார்கள். இப்பொழுது காச்மீரத்தில் உள்ள வைரி நாக அருவிக்கரையில் அழகிய குடிசை ஒன்றைப் போட்டுக் கொண்டு வசித்து வருகிறார்கள். அதற்கும் 'ஆனந்த பவனம்' என்றேதான் அவர்கள் பெயர் வைத்திருக்கிறார்கள்.

ஆனால் 'ஓம்' என்று ஓங்கார ஓசையுடன் சப்தித்துக் கொண்டு, ஓங்கார ஸ்வரூபியான பகவானின் நினைவை அல்லும் பகலும் அனவரதமும் உண்டு பண்ணிக் கொண்டிருக்கும் அருவிக்கரையில் அந்த ஆசிரமம் அமைந்து விட்டதனால் ஆத்ம ஞானத்துக்கே இருப்பிடமான இந்திய மண்ணில் பிறந்து வளர்ந்தவர்கள் அனைவரும் அதற்கும் 'அருவிக்கரை ஆசிரமம்' என்றே பெயர் சூட்டி விட்டனர்.

நான் இன்று இந்தியாவுக்குப் போவதன் முக்கியமான காரணமே, அந்த அருவிக்கரை ஆசிரமம்தான். நான் அதன் எழில் மிக்க காட்சிகளைக் காணத் தண்ணீருக்காகத் தவியாய்த் தவித்துத் துடியாய்த் துடிக்கும் மீனைப் போலத் துடித்துக் கொண்டிருக்கிறேன். நான் இன்று வரை என் தாய் நாட்டைப் பார்த்ததில்லை. ஆனால் தாயார் எவ்வளவுக் கெவ்வளவு அன்பானவள், எவ்வளவு மரியாதைக்கு உகந்தவள், அபிமானமும் கர்வமும் படுவதற்கு ஏற்றவள் என்பதை நன்கு உணருகிறேன்.

ஆகா! என் தாய் நாட்டின் பெருமையை எழுத்து வடிவில் வைப்பது இயலாத காரியம்!



தங்கை:—அக்கா, நம்ம பக்கத்து வீட்டுச் சாரதா இன்றைக்கு முழுவதும் எதிர் வீட்டிலேயே இருக்கிறாளே!

அக்கா:—ஆமாம். அவள் அப்பா அவளுக்கு இன்றைக்குப் புதுப் புடவை வாங்கித் தந்திருக்கிறார் அல்லவா? அதனால்தான்.

என் தந்தையும் தாயும், பாட்டனும் பாட்டியும், பிறந்து வளர்ந்து, விளையாடி, வயது முதிர்ந்து மண்ணோடு மண்ணாகக் கலந்த அந்தப் பூமி மண்ணின் பெருமையை என்னவென்று சொல்வது? ஆயர்பாடியில் வளர்ந்த கண்ணன் மோகன முரளி வாசித்து, ஆன் நிறைகள் மேய்த்து, அற்புத லீலைகள் புரிந்த புண்ய பூமி அல்லவா என் தாய்நாடு! அன்பு மாரியும் அம்பு மாரியும் பொழிந்து கோசலைச் செல்வன் ராமன் ராட்சதர்களின் கொட்டத்தை அடக்கிப் பரிசுத்தப்படுத்திய பூமி அல்லவா? இன்று நான் என்னுடைய அதே தாய் நாட்டைத் தரிசிக்கப் போகிறேன். வழி தப்பித் தவறிய பாலகனை நான் அன்னையின் அடிகளிலே விழுந்து வணங்கி அழுது புரண்டு உள்ளத்தைத் தூய்மைப் படுத்திக் கொள்வதற்காகப் புறப்பட்டிருக்கிறேன்.

என் தாய் நாடு மிகப் பரிசுத்தமாகவும், ரமணீயமாகவும், எழில் வாய்ந்ததாகவும் பயிர் பச்சை நிறைந்ததாகவும் இருக்கும். உலகினுக்கே உய்யும் வழி காட்டும் உந்நத நோக்கம் கொண்ட நாடு என் தாய் நாடு தான் என்பதை நான் நன்றாக அறிவேன். அப்பேர்ப்பட்ட தாய்நாட்டைக் காணத்தான் நான் புறப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இவ்வளவு குணங்களையும் ஒன்று சேர்த்து ஒருங்கே வைத்து ஒரு இடத்தில் காண முயலும் பொழுது என் கண்களில் ஆனந்த பவனமாகத் திகழும் அருவிக்கரை ஆசிரமத்தின் சித்திரம்தான் தாண்டவமாடுகிறது. என் கற்பனைப் பறவைக்கு அதைத் தாண்டி பறந்து செல்லவும் சக்தி இல்லை.

'நம் பழம்பெரும் பாரத நாடே' பேரானந்தமான அருவிக்கரை ஆசிரமமாகத் திகழும். அங்கே அன்பின் ஆட்சி நிலவி யிருக்கும். இன்ப நாதம் எக்களித்துக் கொண்டிருக்கும். மெய் ஒளி நடனம் புரிந்து கொண்டிருக்கும். அங்கே வசிக்கும் ஒவ்வொரு ஆண் மகனும் ரூப் சந்தாக இருப்பான். ஒவ்வொரு பெண்ணும் தேவகியாகத் திகழ்வாள். தன்னலம் பிடித்த தனி மனிதன் யாருமே அங்கே இருக்க மாட்டான் என்று கருதுகிறேன். என் கனவு கனவாக இராமல் நினைவாகத் திகழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

★

இவ்வாறு சொல்லியவாறே, ஹாரிஸன் தலை குனிந்து கொண்டான். அறியாக் குழந்தையின் உள்ளத்தில் தாய் நாட்டுப் பற்று எப்படி உதயமாகிறது என்பதை நான் முதன் முதலாக அப்பொழுதுதான் கண்டேன்.

வெளியே நீலத் திரைக்கடல் கர்ஜனை புரிந்து கொண்டிருந்தது. உள்ளே என் இருதயத்தில் ஆயிரக்கணக்கான எண்ண அலைகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டு முன்னேறிக் கொண்டிருந்தன. எண்ண அலைகளிலே சிக்கிய நான் சிறிது நேரம் வாய் திறக்க வகையறியாமல் மௌனம் சாதித்தேன். பிறகு, சிறிது நேரம் கழித்துத் தலை தூக்கி ஒரு முறை ஹாரிஸனைப் பார்த்தேன். அப்பொழுது அவன் எனக்கு மிக மிக நெருங்கியவனாக, உற்ற உறவினனாகத் தோற்றம் அளித்தான். நான் அன்பு ததும்பும் குரலில், "ஹாரிஸன்!" என்று அழைத்தேன்.

ஹாரிஸன் என்னை நிமிர்ந்து பார்த்தான். அவனுடைய உள்ளம் உணர்ச்சிப் பெருக்கிலே மிதந்து கொண்டிருப்பதை அவன் முகம் எடுத்துக் காட்டியது. அவன் உள்ள நெகிழ்ச்சியுடன், "என் சொந்த நாட்டுச் சகோதரா!" என்று அழைத்தான். அதற்கு மேல் அவனாலும் ஒன்றும் பேச முடியவில்லை.

கப்பல் இரவின் இருளில் நீலக் கடலின் நீரைக் கிழித்துக் கொண்டு வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது. நாங்கள் தாய் நாட்டுக்கு வெகு சமீபமாக வந்து கொண்டிருந்தோம். ஆனால் என் காதுகளில் ஹாரிஸன் சொன்ன கருத்து நிறைந்த அவனுடைய சுய சரிதத்தின் நெஞ்சிலிச் சொற்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. (முற்றும்)



# 4 காரணங்கள்—

## என் நேஷனல்-எக்கோ ரேடியோக்களை

உங்களுக்கு வாங்க மிகச் சிறந்தவை

● **புதிய மலிவான விலைகள்**

அதிகரித்த திறமையுடன் அதிக அளவில் தயாரிக்கப்படுவதனால், சிறப்போங்கும் நேஷனல்-எக்கோ ரேடியோக்களை நீங்கள் எப்பொழுதையும்விட அதிக மலிவான விலைகளில் வாங்கக்கூடும்.

'பிரமுக்' A-154—நேஷனல்-எக்கோ ரேடியோக்களில் தலைசிறந்து விளங்குவது இதுவே. 5-வால்வு, பாண்டு ஸ்ப்ரெட் சூப்பர்ஹெட்...ஏஸி கரண்டுகளுக்கு...நியாயமான விலை



● **நம்பிக்கை அதிகம்**

கோளாறு ஏதுமின்றி இயங்கும்—ஏனெனில், இந்த ரேடியோக்களின் அமைப்பில், நேஷனல்-எக்கோ என்ஜினியர்களின் மிகக் கடுமையான சோதனைகளில் தேறும் பாகங்களே உபயோகிக்கப்படுகின்றன. தேறாத பாகங்கள் அறவே நீக்கம். இவ்வளவு கண்டிப்பும் கவனமும் இதர ரேடியோக்களில் காண்பதரிது



A-146 ஏஸி; U-146 ஏஸி-டிஸி; B-146 டிரை பாட்டரி....நடுத்தர விலையுடைய பாண்ட்ஸ்ப்ரெட், 5-வால்வு செட்டுகள்

● **"மான்சூனைஸ்ட்"**

நேஷனல்-எக்கோ செட்டுகள் மழைக் காலங்களிலும் தவறாமல் இயங்கும்—ஏனெனில் எல்லா பாகங்களும் வழக்கமாயுள்ளதைக் காட்டிலும் 16-மடங்கு அதிக செம்மையாக வெதர்ப்ரூப் செய்யப்படுகின்றன. அதுவே 'மான்சூனைஸேஷன்' எனப்படுவது

B-132-1....மலிவான விலையில் குறைந்த அளவு சக்தியே உபயோகிக்கும் டிரை பாட்டரி செட்...4-வால்வு, 3-பாண்ட்



● **எளிதில் வாங்கலாம்**

எந்த நேஷனல்-எக்கோ ரேடியோ வாங்கும்போதும் நீங்கள் பூரா விலையும் ரொக்கம் கொடுக்கவேண்டுமென்பதில்லை. விலையில் ஒரு சிறிய பகுதியைக் கட்டி ரேடியோவை வீட்டுக்கு கொண்டுபோய்விடலாம். மீதிப் பணம் ஒரு எளிய வாய்தாத் திட்டத்தின் பேரில் சுலபமான மாதத் தவணைகளாக கொடுக்க வசதியுண்டு.



"குமார்"—மலிவான விலையிலுள்ள 5-வால்வு சூப்பர்ஹெட், 3-பாண்ட்; ஏஸி மற்றும் ஏஸி-டிஸி

## நேஷனல்-எக்கோ ரேடியோ


ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிட். தொழிற்சாலை பிரதிநிதிகள்

## தவணைச் சலுகையுடன் சைகிள்கள்

**ரூ. 1,86,000 மதிப்புள்ள சைக்கிள்கள் விற்பனையாகிவிட்டன. முடிவான குறைந்த விலை. இச்சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்!**

இச் சலுகையை நழுவவிடாது நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். விலையின் 25 சத வீதம் முன்னதாகவும் பாக்கியை ஐந்து மாதாந்திரத் தவணைகளாகவும் செலுத்தலாம்.

ஹிந்த் சைகிள் ரூ. 138/- இங்கிலீஷ் சைகிள் ரூ. 180/-
பிலிப்ஸ் ரூ. 210/- ஹெர்குலஸ் ரூ. 220/-
பி. எஸ். ஏ. ரூ. 246/- ராலே (பச்சை) ரூ. 340/-
டைனமோ செட் ரூ. 28/-



உங்களுக்கு அருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷன் பெயரும் முழு விலாஸமும் எழுதி நிபந்தனைகளுக் குட்பட்டு உடனேயே டெலிவரி எடுத்துக் கொள்ளுங்கள். புதிய டன்லப் டயர்கள், டியூப்கள், புதிய ஒரிஜினல் பார்ட்டுகள் எல்லாம் புத்தம் புதியவை என்பதற்கு உத்தரவாதம். உடனேயே ஆர்டர் செய்யுங்கள்.

# JUPITER TRADING CO.

**Prop. M. T. CO., LTD.**

**Post Bag 16602, Calcutta-4**

---



# பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும்




ப்ரூக்லாக்ஸ்

# மலச்சிக்கலை ஒரே இரவில் அகற்றுகிறது

ஏஜெண்டுகள் :

**ஓரியண்டல் மெர்க்கன்டைல் ஏஜென்ஸி**

99.A. அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்-1.

# ஆரோக்கிய ரகசியம்

**வி. என். குமாரசாமி**

## 2[illegible]. பெண்களும், சிரசாசனமும்

எந்த ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமானாலும் குடும்பத்தில் பெண்களுடைய ஒத்துழைப்பு மிக அவசியம். அதைப் போல ஆண்கள் ஆசனம் செய்ய வேண்டுமென்றாலும் பெண்களுடைய ஒத்துழைப்பு அவசியம். பெண்கள் செய்யா விட்டாலும் ஆண்கள் செய்வதைத் தடுக்காமல் முணு முணுக்காமல் இருந்தால் போதும் என்ற நிலைமை மாறி, இப்போது பெண்கள் செய்வதை ஆண்கள் தடுக்காமலிருந்தால் போதுமென்ற நிலைமை இந்த இரண்டு வருடத்திற்குள் ஏற்பட்டிருப்பதை அறிந்து மிகச் சந்தோஷப்படுகிறேன். அவ்வளவு தூரம் பெண்மணிகள் ஆசனங்களைச் செய்து பல நன்மைகள் அடைந்திருக்கின்றனர். ஆசனங்களின் மேல் அவ்வளவு ஆர்வம் தோன்றியிருக்கின்றது.

குடும்பத் தலைவி படித்திருந்தால், அக் குடும்பத்திற்கு எவ்வளவு உபயோகமோ, அதை விடப் பன்மடங்கு உபயோகமானது ஒரு பெண் ஆசனம் பயின்று ஆரோக்கியத்தைக் காப்பாற்றத் தெரிந்து கொள்வது. முதலில் குடும்பத் தலைவி ஆரோக்கியமாயிருந்தால் அக் குடும்பமே ஆரோக்கியமாயிருக்க முடியும். புருஷனை ஆரோக்கியமாயிருக்க ஆசனங்கள் சொல்லித் தரலாம். குழந்தைகள் ஆரோக்கியமாய்ப் பிறக்கும். குழந்தைகளுக்கு உடம்புக்கு ஒன்றும் வராது ; ஆரோக்கியமாய் வளரும். ஒரு நோயாளிக் குழந்தையை வளர்ப்பதை விட ஒன்பது ஆரோக்கியமான குழந்தைகளை வளர்த்து விடலாம். அப்படி ஏதாவது அபூர்வமாய் நோய் வந்தால் மற்றக் குழந்தைகளைப் படுத்துவதைப் போலப் படுத்தாமல், நோயானது மிக எளிதில் விலகி விடும். நோய்களின்றி எல்லோரும் ஆரோக்கியமாயிருந்தால் மருந்துக்குச் செலவாகும் பணம் மிச்சம். மருந்தை அடிக்கடி குழந்தைகளுக்குப் போடுவதனால் அவற்றின் குணம் கெடுவதும் மிச்சம். சில குடும்பங்களில் மருந்துக்காகவே வருமானத்தில் கால்பங்கு அரைபங்கு கூடச் செலவாய் விடுகிறது. அவ்வளவு பணமும் மிச்சமானால் அதை நல்ல சத்துள்ள உணவுக்காகச் செலவு செய்யலாமல்லவா ! தவிர, குடும்பத்தில், நிம்மதி, சந்தோஷம் நிலவும். அதற்கு ஆரோக்கியம் அவசியம். குடும்பத்தில் யாருக்காவது ஒருவருக்குச் சிறிது அசௌகரியமென்றாலும் அக்குடும்பத்தில் சந்தோஷத்தைக் காண முடியாது. சில குடும்பங்களில் ஒரு சமயத்தில் இரண்டு மூன்று பேர்கள் கூடப் படுத்து விடுவார்கள். சொல்ல வேண்டுமா அக்குடும்பக் கஷ்டங்களை ! எங்காவது ஒரு இடத்துக்கு இஷ்டப்படி செல்ல முடியாது. நிட்டப்படி நடக்க முடியாது. இத்தனையும் ஆரோக்கியம் இல்லாக் குடும்பங்களில் நடப்பது சகஜம்.

இம்மாதிரிக் குடும்பங்களே அதிகம். இந்த நிலைமையில் பெண்களுக்குப் தேகப் பயிற்சியைப் பற்றி ஒன்றும் தெரியாது என்ற நிலைமை மாறி, ஆசனங்கள் செய்தால் நோய்களைப் போக்கடிக்கலாம் ; ஆரோக்கியமாய் இருக்கலாம் என்ற ஒரு நிலைமை இத்தனை நாட்களுக்குப் பின் ஏற்பட்டுள்ளது. இனி நமது நாட்டுக்கு நல்ல காலம் பிறந்து விட்டது. இனி யார் தடுத்தாலும் இந்த ஆசனங்கள் வளரத்தான் போகிறது. பெண்மணிகள் தாங்கள் மட்டும் செய்வதுடன் திருப்தியடைய மாட்டார்கள். தங்களைச் சார்ந்தவர்கள், சிநேகிதர்கள் எல்லோருக்கும் சொல்லுவார்கள். ஒவ்வொரு பெண்ணும் தன் கணவனை ஆசனம் செய்யத் தூண்டுவாள். தன் வீட்டிலுள்ள குழந்தைகளை யெல்லாம் செய்யச் சொல்லுவாள். ஆசனங்களின் குணங்கள் என்ன சாமான்யமானதா ! அதற்கு ஈடு இணை உண்டா !

பெண்களுக்கு இன்றியமையாத பருவங்கள் நான்கு உண்டு. அவை (1) ருதுவாதல் (2) பிள்ளை பெறல் (3) குழந்தைகளுக்குப் பாலூட்டி வளர்த்தல், கடைசியில் இவை அத்தனையும் முடித்து (4) மாத விடாய் நிற்றல்.

இவைகள் அத்தனைக்கும் ஆசனங்களால் மட்டற்ற பலன்கள் உண்டு. அதில் முக்கியமாய்ச் சிரசாசனம் பெரும் பங்கைக் கொள்கின்றது. எதெதெற்கு எப்படி யெப்படி சிரசாசனம் உதவுகின்றது என்பதைச் சிறிது ஆராய்வோம்.

பெண்கள் சாதாரணமாய்ப் பதினான்கு வயதுக்கு மேல் ருதுவாவது வழக்கம். சிலர் இதற்கு முன்பு பன்னிரண்டு வயதிலும் ருதுவாகின்றனர். சிலர் ஒன்பது பத்து வயதில் அபூர்வமாய் ருதுவாகி விடுகின்றனர். சிலர் பதினைந்து பதினாறு வயதிலும் ருதுவாவதுண்டு. இவைகளெல்லாம் அவ



கணவன்:— கண்டிப்பாக வருகிற சனிக்கிழமை சினிமாவுக்குப் போகலாம் !

மனைவி:—அன்றைக்கு உங்களுக்கு ஆபீஸ் வேலை அதிகமாக இருந்து நீங்கள் நேரங் கழித்து வீட்டுக்கு வந்தால் என்ன செய்வது ?

கணவன்:— வெள்ளிக்கிழமையே போய்விட்டு வந்துவிடுகிறது !

# அந்த வயிற்று வலியை இப்போதே குணப்படுத்திக் கொள்ளுங்கள்!

**அலக்ஷியப்படுத்தப் பட்ட அஜீரணம் ஆபத்தை உண்டாக்கும்.**

உங்களுக்குப் பிடித்ததைச் சாப்பிட முடியாதபடி அஜீரணம் உங்களுக்கு ஏற்படுகிறது என்றால் நீங்கள் பாதி உயிருடன்தான் வாழுகிறீர்கள் என்று அர்த்தம். மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பவுடர் உங்களுக்கு உதவியளிக்குமாக; அது உலகம் முழுவதிலுமுள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு உதவியளித்திருக்கிறது.

அஜீரணத்தினால் உண்டாகும் நோவை சிலநிமிஷங்களுக்குள்ளாகவே ஒரே டோஸ் மருந்து குணப்படுத்தும். அஜீரணத்துக்குள்ளான தேக நிலையைச் சரிப்படுத்தி உதவுவதற்கு மருந்து ஒரு தவணைக்கு உட்கொள்ள வேண்டும். அலக்ஷியப்படுத்தப்பட்ட அஜீரணம் ஆபத்தானது; ஞாபகமிருக்கட்டும். இன்றைய அசௌகரியம் நாளைய நோயாகமாறி இறுதியில் ஆபத்தானதும் குணப்படுத்த இயலாததுமான தேக நிலை உண்டாக்கிவிடும். மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பவுடரிடம் நம்பிக்கை வைத்து உட்கொண்டு ருசிகரமான பண்டங்களை மீண்டும் சாப்பிட்டு மகிழுங்கள். உங்களுக்கு இஷ்டமானபடி விதவிதமாகச் சாப்பிடலாம். அப்போதுதான் வாழ்க்கை வாழக் கூடியதாக இருக்கும்.




ஞாபகமிருக்கட்டும். மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பவுடர் உலகப்பிரசித்தி பெற்றது. எனவே அநேகம் பேர் அதைக் காப்பியடிக்கப் பார்க்கிறார்கள். "அலெக்ஸ் ஸி. மக்ளீன்" என்கிற கையொப்பம் இருக்கிறதா என்று பார்த்து உண்மையான சரக்கையே வாங்குங்கள்.

# மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பவுடர்

வியாபார விவரங்களுக்கு:

**ஜே. எல். மாரிஸன், ஸன் & ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட்**

தபால் பெட்டி 6527, பம்பாய் 26; தபால் பெட்டி 387, கல்கத்தா

தபால் பெட்டி 1370, மதராஸ்

MST I TAM

ஏவர் தேகநிலை, போஷாக்கு, குடும்பப் பரம்பரை வழக்கப்படி நடக்கும். ஆனால் சில பெண்கள் பதினெட்டு இருபது வயதானாலும் புஷ்பவதியாக மாட்டார்கள். சில பெண்கள் ஏதோ முதலில் புஷ்பவதியாயிற்று என்று பெயருக்கு இருந்து விட்டுப் பிறகு ஒன்றுமே யில்லாமல் இருந்து விடுவார்கள். இவைகளெல்லாம் பிட்யூடரியின் கோளாறினால்தான் ஏற்படுகின்றது.

ஒரு தாயும் பெண்ணும் வந்தார்கள். பெண்ணிற்குப் பதினெட்டு வயதாம். ஆனால் பார்க்கப் பதினான்கு வயதுக்கு மதிப்பதும் கஷ்டம். அவ்வளவு வளர்ச்சிக் குறைவு. புஷ்பவதியாகவில்லை யென்பது அவர்களுடைய குறை. அந்தப் பெண்ணின் தங்கைக்குப் பதினாறு வயது. புஷ்பவதியாகி இரண்டு வருடமாகின்றது. அவளைக் கலியாணத்துக்குக் கேட்கின்றனர். பெரிய பெண்ணை வைத்துக் கொண்டு சிறிய பெண்ணை எப்படிக் கலியாணம் செய்வது என்பது அந்த அம்மாளின் விசனம். பெரிய பெண்ணுக்கோ இன்னும் யாரும் கலியாணத்திற்குக் கேட்பாரில்லை. இப் பிரச்னையைத் தீர்க்கவே என்னிடம் வந்தனர். என் மனைவி புஜங்காசனம், பஸ்சி மோத்தானாசனம், ஹலாசனம், சர்வாங்காசனம், மத்யாசனம், சிரசாசனம் முதலியவைகளைச் சொல்லித் தந்தாள். அப் பெண் அவைகளைக் கற்று வீட்டில் தினந்தோறும் செய்து கொண்டு வந்தாள். என்ன ஆச்சரியம்! மூன்றே மாதத்தில் அவள் புஷ்பவதியாகி விட்டாள், என்று அந்த பெண்ணின் தாயார் வந்து சொன்னார். அதன் பின் மாதாமாதம் தவறாமல் ஆகிக் கொண்டிருந்தாள். பிறகு அப் பெண்ணுக்கும் அப் பெண்ணின் தங்கைக்கும் சேர்த்து ஒரே நாளில் இரண்டு கலியாணங்களை நடத்திவிட்டனர்.


பெண்கள் ருதுவாவதற்கு முக்கியமாய் வேண்டியது பிட்யூடரியின் ரஸமே. அது எக்காரணத்தினாலோ, சோம்பி, சரிவர வேலையைச் செய்யாவிட்டால், பெண்கள் அந்தந்த வயதில் புஷ்பவதியாகமாட்டார்கள். அதற்கு மற்ற ஆசனங்களுடன் சிரசாசனம் செய்தால் சிரசிற்கு நிறைய ரத்தம் சென்று சோம்பிக் கிடக்கும் பிட்யூடரிக்கு உற்சாகம் கொடுக்கின்றது. இவ்வாறே தினமும் சிறிது நேரம் செய்து கொண்டே வந்தால் அது பூர்ணசுகம் அடைந்து தன் வேலையைச் செய்கிறது.

சில பெண்கள் புஷ்பவதியானதும் பிறகு சரிவர வீட்டு விலக்கு ஆகமாட்டார்கள். ஆறு மாதங்களுக்கு ஒரு முறையும் சிலருக்கு வருஷ கணக்கிலும் ஆகும். சிலருக்கு ஒரு கணக்கின்றி ஆகும். இதற்கெல்லாம் ஊசியைப் போடுவது தற்கால நாகரிகமாய் இருக்கிறது. ஊசி மருந்தில் இருக்கும் ஹார்மோன் உடனே வேலை செய்யும், வீட்டு விலக்காவார்கள். பிறகு பழைய குருடிதான். இப்பேர்ப்பட்டவர்களுக் கெல்லாம் ஊசி குத்தினால் தான் கதி. இப்படி ஊசி குத்துவதினால் நிரந்தரப் பலன் என்னவோ கிடைப்பதில்லை யென்பது தெரியும். ஆனால் வேறு வழி! பாவம் அறியார்கள்! இதோ இருக்கிறது சிரசாசனம் என்னும் சஞ்சீவி! கவலையை விடுத்துக் கைக் கொள்ளுங்கள்.

இம்மாதிரி கோளாறுகள் இருப்பவர்களில் அநேகருக்குக் குழந்தை பிறப்பது கஷ்டம். ஏதோ ஒரு சிலருக்குப் பிறக்கலாம். அநேகமாய்ப் பெரும்பாலோருக்குப் பிறக்காது. பிட்யூடரியின் ரஸமும், தைராய்டின் ரஸமும் இதற்குத் தேவை. இம்மாதிரி நிலைமையிலுள்ள ஒரு பெண்ணுக்குக் குழந்தையே பிறக்கவில்லை யென்று மலடி யென முடிவு செய்துவிட்டார்கள். புக்ககத்தார் வேறு பெண்ணை இரண்டாவது கலியாணம் செய்வதற்காகத் தேடப் பிரயத்தனப் பட்டார்கள். பிறகு அப் பெண் ஆசனங்களைச் சில மாதங்கள் செய்ததும் வீட்டு விலக்கும் சரிவர ஆயிற்று. இப்பொழுது ஒரு குழந்தைக்குத் தாயாய் இருக்கிறாள். இரண்டாவது கலியாணமும் நின்று விட்டது.

* * *

இக் காலத்தில், தான் பெற்ற குழந்தைக்குப் பால் இல்லாமல் திண்டாடும் தாயார் அநேகர். சிலர் பால் கொடுப்பதை அநாகரிக மென்று மறக்கடித்து விடுகின்றனர். அவர்களைப் பற்றி அக்கறையில்லை. தான் அருமையாய்ப் பெற்றெடுத்த குழந்தைக்கு ஏதோ ஒன்றைக் கொடுத்து வயிற்றை நிரப்பிவிடுதல் சுலபமே. ஆனால் அது பூர்ணமான தாய்மையின் தன்மையை அடைந்ததாகாது. ஒரு தாய் பால் தரும்போது அவள் அக்குழந்தைக்குப் பால் மட்டுமா தருகிறாள்! தன் அன்பையே அருவியாகப் பாய்ச்சுகிறாள். தன் இனிமையான குணங்களை அதற்குப் பரவச் செய்கிறாள். குழந்தை பாலை ஆவலாய் அருந்தும்போதும், தாய் அன்புடன் அதற்கு ஆதரவாய்ப் பால் தரும்போதும் ஏற்படும் சுகம் வாத்சல்ய பாவம் அந்த இரு ஜீவன்களன்றி வேறு யார் அறிய முடியும்! அதற்காக வேண்டி குழந்தைக்குப் பால் சுரக்க எது வேண்டுமானாலும் தாய்மார்கள் செய்யச் சித்தமாய் இருப்பார்கள். அமிர்தமாய் இருந்தாலும், குழந்தைக்கு ஆகாது என்றால் தொடக்கூட மாட்டார்கள். குழந்தைக்கு நல்லது என்றால் அது வேம்பாய்க் கசந்தாலும் ஏற்றுக் கொள்ளுவார்கள். தாய்மை உள்ளம் அப்பேர்ப்பட்டது. அவர்களுடைய தியாகத்திற்கு அவர்களையே தான் உபமானம் சொல்ல

புத்தம் புதியதும் சிறந்ததுமான இந்த மூன்று சக்கரம் சைகிள்களுக்கு (Try-Cycle) ஆர்டர் செய்யுங்கள். இதன் விலை ரூ. 25/- விருந்து ரூ. 15/-க்கு குறைக்கப் பட்டிருக்கிறது. ரயில்வே சார்ஜ் சுமார் ரூ. 1/8/- உங்கள் அருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷன் பெயரைத் தெரிவித்து இன்றே ஆர்டரை அனுப்புங்கள்.

JUPITER TRADING CO.,

P. BAG 16602 - CALCUTTA-4



பைல் பீன்ஸ்
மலச்சிக்கலையும் அசதியையும்
போக்குகிறது.

மலச்சிக்கல், வயற்றுக்கோளாறு, மற்றும் உங்கள் உடலை வாட்டி வதைத்து சக்தியை இழக்கச்செய்யும் நோய்களைத் தடுக்கிறது. டாக்டர்கள் சோதனை செய்து அங்கீகரிக்கும் பைல் பீன்ஸை இன்று முதல் க்ரமமாக உபயோகித்து கட்டுதிட்டமாகவும், ஆரோக்கியமாகவும், வாலிபத்தோற்றத்தோடும் இருக்க முயலுங்கள்.




வாழ்க்கையை இன்பமாகக் கழியுங்கள்-டாக்டர்கள் அங்கீகரித்துள்ள பைல் பீன்ஸை உட்கொள்ளுங்கள்.

பைல் பீன்ஸ்

எல்லா மருந்து வியாபாரி கடையிலும் கிடைக்கும்.


மதராஸிற்கு சோல் ஏஜண்டுகள்: நாதர் & கோ., பார்க்டவுன்


முடியும். வேறெதைச் சொல்ல முடியும்! சிரசாசனம் செய்தால் பால் சுரக்கு மென்பதை அநேகர் அறியார்கள். இதற்கு முன்பும் இதைப் பற்றி ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறேன். காலை மாட்டுக்குக் கூட, பிட்யூடரியின் ரசத்தை ஊசி மூலம் செலுத்தினால் பால் கொடுக்கும் போது, தாய்மார்களுக்கா பால் சுரக்காது! கர்ப்பமாவதற்கு முன்பிருந்தே அவர்கள் சிரசாசனம் செய்து வந்தால் பால் ஏதேஷ்டமாய்ச் சுரக்கும். பிரசவமான பின் நான்கு மாதங்களுக்குப் பிறகுதான் சிரசாசனம் செய்யலாம். ஆனால் புஜங்க, பஸ்ஜிமோத்தான, சர்வாங்காசனம் முதலியவைகளைச் செய்ய ஆரம்பித்து ஒரு மாதத்துக்குப் பின்தான் சிரசாசனம் துவக்க வேண்டும்.

சுகப் பிரசவம் உண்டாகவும் ஆசனம் உதவுகிறது. சுகப் பிரசவமுண்டாக வேண்டுமானால் பிரசவ வலி கடைசி வரை விட்டுவிட்டு எடுக்கும். சிலருக்குப் பாதியில் நின்றுவிடும். வலியே வராது. வலி வந்தால்தான் பிரசவமாக முடியும். இந்த நிலைமையில் சில குழந்தைகள் இறந்தும் போகும். பிறகு ஆயுதம் உபயோகித்துத்தான் எடுக்க வேண்டியிருக்கும். இதற்குத் தற்கால விஞ்ஞானம் ஒரு வழி கண்டு பிடித்திருக்கிறது. வலி வராவிட்டால் ஊசியைப் போடுவார்கள். அவ்வூசி பிட்யூடரியின் ரசத்தினால் தயார் செய்ததாகும். ஏற்கெனவே பிட்யூடரி கோளம் பலவீனமானவர்களுக்குத்தான் வலி இம்மாதிரி பாதியில் நின்றுவிடும். அது சீக்கிரம் சக்தியை யிழந்தும் செயலற்றும் போய்விடுவதால் வலி யுண்டாவதில்லை. அதற்கு இந்த பிட்யூடரி ஊசி மிக நல்ல வேலை செய்கிறது. அவை உள்ளே சென்றதும் வலி வர ஆரம்பித்துக் குழந்தையும் வந்துவிடுகிறது. எனவே சுகப் பிரசவத்துக்குப் பிட்யூடரியின் ஆரோக்கியம் முக்கியமென்று நிச்சயமாகிறது. ஆனால் வலி வராதபோது—அந்தச் சமயத்தில் சிரசாசனம் செய்து பிட்யூடரியின் ரசத்தை உண்டாக்க முடியுமா! இதற்கெல்லாம் முன் யோசனையுடன் சாதாரண காலத்தில் பெண்கள் சிரசாசனம் பழகி வந்தால் இம்மாதிரி ஆபத்திற் கெல்லாம் இடமேயில்லை. சிலர் சுகப்பிரசவ மென்றதும் நோயில்லாமல் பிரசவிப்பது யென்று பொருள் கொள்ளுகிறார்கள். நோயில்லாமல் பிரசவிக்கவே முடியாது. நோய் வருவது தெரியாமல் இருக்க மயக்கத்தைக் கொடுக்கலாமே யொழிய நோய் வந்தால்தான் பிரசவிக்க முடியும். சிலர் நாள் கணக்கில் கஷ்டப்படுவர். சிலருக்கு இம்மாதிரி பாதியில் பிரசவ வலி நின்று விடும். கடைசி நேரத்தில் பிரசவ வலி நின்று கழுத்து மாட்டிக் கொண்டு எத்தனையோ சிசுக்கள் இறப்பதும் உண்டு. மற்றும் பிரசவத்தில் எத்தனை எத்தனையோ கஷ்டங்கள் உண்டு. இவைகளெல்லாம் இல்லாமல் பிரசவமாவதற்குத்தான் சுகப் பிரசவ மென்பது.

பிரசவங்களெல்லாம் முடிந்த பின் சிலருக்கு நாற்பது வயதிலும் சிலருக்கு ஐம்பது வயதிலும் வீட்டு விலக்காவது படிப்படியாய் நின்று விடும். நிற்கும் சமயத்தில் சிலருக்குக் குணங்கள் மாறும். எதிலும் பட படப்பு, தன்னைக் குறைவாக மதிக்கிறார்களோ என்ற சந்தேகம், மயக்கம், அசதி முதலியன உண்டாகும். சிலருக்கு இதுவே அதிகப்பட்டால் ஹிஸ்டிரியா என்று சொல்லுவார்கள். இவர்கள் கூட ஆசனங்களைச் செய்து வந்தால் இவைகளை யெல்லாம் தடுக்கலாம். இந்த வயதில் ஆசனம் செய்யக் கூடுமா! சிறு வயதினர்களானும் செய்யலாம். அவர்கள் கடினமான ஆசனங்களைச் செய்ய வேண்டுவதில்லை. சாதாரணமாக சர்வாங்காசனம் ஒன்றை மட்டும் செய்தால் போதும். இந்த வயதில் குடும்ப விவகாரங்களில் அவ்வளவாகம் பட்டுக் கொள்ளாமல், விலகி நின்று சர்வாங்க ஆசனம், சாந்தியாசனம், நாடி சுத்தி தியானம், பூஜை, ஜபதபங்கள், பாராயணம் போன்ற சத் விஷயங்களில் மனத்தைத் திருப்பினால் ஹிஸ்டீரியா ஏற்படுவதை அநேகமாய்த் தடுக்கலாம். நல்ல முயற்சி வேண்டும்.


விளக்கு அணையும் போது அதிக சுடர்விட்டு எரிவது போல சிலருக்குத் தைராய்டு கோளம் அது அதிகமாய் வேலை செய்து படபடப்பு, மயக்கம், பயம் முதலியன உண்டாகும். அவர்கள் வாரம் ஒரு நாள் உபவாசமிருந்து அடிக்கடி நாடிசுத்தி தியானம் செய்து சாந்தி ஆசனத்தில் தைராய்டின் வேகம் தணிய ஜபம் செய்து வர வேண்டும். இவர்கள் ஆசனங்களைச் செய்வது நல்லதல்ல. வேலை செய்யாத உறுப்புகளை வேலை செய்யும்படி தூண்டுமே தவிர அதிகம் வேலை செய்வதைத் தடுக்க முடியாது. அதற்கு உணவுக் கட்டுப்பாடு ஓய்வு, சாந்தி ஆசனம், நாடி சுத்திகளால்தான் குணமாக்க முடியும். அந்தக் காலத்தில் அப்படி அதிகமாய் வேலை செய்வதைத் தடுப்பதற்கு தைராய்ட் கோளத்திலிருந்து சிறிது வெட்டி எடுத்து விடுகின்றார்கள். அதன் பின்பாவது அவர்கள் குறைவில்லாமல் மீதி நாட்களைக் கழிப்பார்களென்று நிச்சயமாய்-உறுதியாய்ச் சொல்ல முடியாது. என்ன செய்வது அப்படி விபரீதமாக நேரிடுவதற்கு! முடிந்த வரைதான் பரிகாரம் செய்ய முடியும். அதற்குப் பதில் நாடிசுத்தி உபவாசம், தியானம், சாந்தியாசனங்கள் முதலியவற்றைச் செய்தால் குணமாகும். (தொடரும்)



வரட்சியிலோ...
அல்லது ஈரத்திலோ...
Erasmic
HIMALAYA BOUQUET SNOW
நீங்கள் எங்கிருந்தாலும்...
ஹிமாலயா புக்கே
ஸ்னோ
உபயோகியுங்கள்.
ஏனென்றால் இது பிரத்தியேகமாக இந்தியாவின்
சீதோஷ்ணத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டது
சீதோஷ்ண நிலை எப்படி இருந்தாலும்—இந்தியாவில் நீங்கள் எங்கிருந்தாலும், ஹிமாலயா புக்கே ஸ்னோ உங்கள் சருமத்தை அதிக மிருதுவாகவும், அழகாகவும் வைத்துக்கொள்கிறது. இதன் நறுமணத்தை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்.
இன்னுமொரு நேர்த்தியான இராஸ்மிக் தயாரிப்பு
HBS. 7-X30 TM

# இந்தியாவின் கல்வி

## அபிவிருத்தி திட்டங்களுக்கு




**தி அஸோஸியேடட் சிமென்டு கம்பெனீஸ் லிமிடெட்**

இவர்களின் வியாபார மானேஜர்கள்-

**தி சிமென்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்**

SISTA'S - CMI - A TAMIL




பகீரதன்

# உழைப்பால் உயர்ந்த ஏழை

## 4

நாடக மேடையில் அரைக் கணத்தில் ஒளி இருளாக மாறுவதுண்டு. இருள் ஒளியாக மாறுவதுண்டு. நாம் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பலப்பல காட்சிகள் தோன்றும். சற்று முன் ஏழைப் பரதேசியாக இருந்தவன் அடுத்த கணத்தில் பெரிய கோடீசுவரனாக மாறிவிடுவான். சிரித்துப் பேசி மகிழ்ந்து கொண்டிருப்பவன் திடீரென்று இந்த உலகத்தையே விட்டுப் போய் விடுவான். இது நாடகமேடைக் காட்சி.

ஆமாம், உலகமே ஒரு நாடகமேடைதானே! இதில் எத்தனையோ விதமான அற்புதங்கள் கணந்தோறும் நடந்து வருகின்றன. நாம் எல்லாவற்றையுமே பார்த்து அநுபவிக்க முடிகிறதா! இல்லை, புரிந்து கொள்ளத்தான் முடிகிறதா! அதற்கு நமக்கு ஓய்வுதான் இருக்கிறதா! நம்முடைய காரியங்களைச் செய்வதற்கே நமக்கு நேரம் போதவில்லையே! இதையெல்லாம் எப்படிக் கவனிப்பது!

அன்றும் அதுபோலவேதான் பலப் பல நிகழ்ச்சிகள் நடந்து விட்டன. இயற்கையும் திடீரென்று மாறிவிட்டது. சற்று முன்பு அடித்த வெய்யில் மறைந்து விட்டது. வானம் இருண்டது. இடி இடித்தது. மின்னல் மின்னியது. மழை பெய்தது. கிழவன் நடேசன் இந்த உலகை விட்டே போய்விட்டான். சிறுவன் வேலன் அனாதையாகி விட்டான்.

அனாதை வேலன் மழையில் நனைந்த வண்ணம் "ஹோ!" வென்று கதறினான். சட்டென்று அழுகையை நிறுத்தினான். இறந்து கிடந்த கிழவன் நடேசனின் அருகில் உட்கார்ந்தான். அவனைக் குனிந்து பார்த்தான். அவன் தோளைப் பிடித்து ஒரு தரம் குலுக்கிப் பார்த்தான். "தாத்தா! தாத்தா!" என்று தன் பலம் கொண்ட மட்டும் கத்தினான். நடேசனின் உயிரற்ற உடல் துவண்டது; அவன் தலை உருண்டது. மீண்டும் வாய் விட்டு அலறினான். விம்மி விம்மி அழுதான்.

அவனுடைய துக்கத்தைத் தாங்க மாட்டாமல் தானோ என்னவோ அந்தச் சமயத்தில் வானமும் அவனுடன் சேர்ந்து குமுறிக் குமுறி அழுதது!

அந்தப் பெரும் மழையின் சத்தத்தையும் மீறி வேலனின் விம்மல் சத்தம் கேட்டது. அவன் மேலே என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தான். 'ஹோய், ஹோய்' என்று சுழன்று சுழன்று காற்று அடித்தது. அந்த அடர்ந்த தோப்பில் இருந்த மரங்களின் கிளைகள் பேயாட்டம் ஆடின. அது போலவே சிறுவனும் ஒரு நிலைக்கு வர முடியாமல் தவியாய்த் தவித்தான்.

அடுத்த கணம் ஏதோ வெறி பிடித்தவன் போல் அங்கும் இங்கும் பார்த்தான். சட்டென்று எழுந்தான்; எழுந்து நடந்தான். நடை சற்று வேகமாயிற்று; பிறகு ஓட்டமாக மாறியது. ஓடிக் கொண்டே இருந்தான். "தாத்தா! தாத்தா!" என்று கதறிய வண்ணம் தலைதெறிக்க ஓடினான். எதிரில் இருப்பவை ஒன்றையும் கவனிக்காமல் ஓடினான். ஏன் அப்படி ஓடுகிறான்! எங்கே ஓடுகிறான்! அது அவனுக்கே தெரியாது. ஏதோ ஓடவேண்டும் என்று தோன்றியது ஓடுகிறான்.

தோப்பை விட்டு வெளியே வந்தான். ஓர் ஒற்றையடிப் பாதை — அது கலக்கும் இடத்தில் ஒரு சின்னத் தெரு; அதற்கு அப்பால் ஒரு பெரிய சாலை — அந்தச் சாலையின் கோடியே தெரியவில்லை. அதில் ஓடிக்கொண்டேயிருந்தான்.

எங்குதான் போகிறானோ!

அந்த நீண்ட பெருஞ் சாலையின் மத்தியில் குறுக்கே ஒரு சந்து வந்து கலந்தது. அந்தச் சந்திலிருந்து ஒரு முரட்டு மாடு வெறிபிடித்து ஓடி வந்தது. தன்னுடைய பெரிய கொம்புகளைக் காட்டிக் கொண்டு ஓடி வந்தது. அதன் கூர்மையான கொம்புகளைப் பார்க்கவே பயமாக இருந்தது. வேலன் அந்த மாட்டைக் கவனிக்கவில்லை. ஆனால் மாடு வேலனைக் கவனித்து விட்டது. அவனை நோக்கித் தலையைக் குனிந்து கொண்டு பயங்கரமாகச் சீறிக் கொண்டு ஓடிவந்தது. அதன் கொம்பில் ஏதோ தினவெடுத்திருக்கிறது போலும். எங்கே யாவது எதையாவது முட்டினால்தான் அதன் கொம்பின் தினவு தணியுமோ என்னவோ! தலையை ஆட்டிக் கொண்டு கொம்பைத் தூக்கிக் கொண்டு வேலனைத் துரத்த ஆரம்பித்து விட்

டது. வேலன் ஓடுகிறான். மாட்டைக் கவனிக்காமல் ஓடுகிறான். மாடு நெருங்கிவிட்டது. இன்னும் வேலன் கவனிக்க வில்லை. அந்த முரட்டு மாடு அவன் முதுகுக்கு நேரே தாவிப் பாய்ந்தது!

வானத்தில் பளீர் என்று ஒரு மின்னல் மின்னியது. பயங்கரமாக இடி இடித்தது. அந்தச் சாலை ஓரத்து மரத்திலிருந்து சட சட வென்று ஒரு பெரிய கிளை 'மளார்' என்று முறிந்தது. இவ்வளவும் கண்மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் நேர்ந்து விட்டது. அந்தச் சமயத்தில்தான் வேலன் அதற்கு நேரே வந்து கொண்டிருந்தான். மாடும் அவனுக்குப் பின்னால் தாவிப் பாய்ந்தது. ஐயோ! வேலன் ஒரே சமயத்தில் இரண்டு ஆபத்துக்குள் சிக்கிவிட்டானே! இல்லை; வேலன் தப்பித்துக் கொண்டான். முன்போலவே ஓடிக் கொண்டிருக்கிறான். அந்தப் பயங்கரச் சத்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அந்த மாடு மடார் என்று முறிந்து விழுந்த பெரிய கிளைக்கு அடியில் அகப்பட்டுத் தவிப்பதைப் பார்த்தான். அவனுக்கு என்ன செய்வது என்றே தெரியாமல் ஒரு கணம் திகைத்து நின்றான்.

அந்தச் சாலை வழியே போய்க் கொண்டிருந்த ஒருவர் இதையெல்லாம் பார்த்து அப்படியே நடுங்கிப் போய் விட்டார். "டேய்! பையா! யாரப்பா நீ! ஏன் இப்படி ஓடுகிறாய்! கொஞ்சம் தப்பியிருந்தால் உயிரே போயிருக்குமே" என்று வேலனை வழி மறித்துக் கேட்டார்.

வேலன் அவரை மேலும் கீழுமாகப் பார்த்துத் திரு திரு வென்று விழித்தான். "என் தாத்தா!... என் தாத்தா...!" என்று மேலே பேச முடியாமல் தவித்தான். அவன் கண்களில் கண்ணீர் வழிந்தது. வெளியில் மழை பொழிந்துகொண்டிருந்தது.

"சரி! சரி! பார்த்து ஜாக்கிரதையாகப் போ!" என்று சொல்லிவிட்டுக் குடையைச் சாய்த்துப் பிடித்துக் கொண்டு அந்த மனிதர் போய்விட்டார். அவருக்கு என்ன அவசர வேலையோ!

வேலன் அவன்பாட்டுக்கு அந்தக் கொட்டும் மழையில் நனைந்த வண்ணம் போய்க் கொண்டே இருந்தான்.

இப்பொழுது அவனுடைய மூளை தீவிரமாக வேலை செய்தது. அதன் பயனாகத்தானோ என்னவோ அச் சாலையின் குறுக்கே வந்த ஒரு தெருவைக் கண்டதும் அவன் நடை சற்றுத் தளர்ந்தது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அந்தத் தெருவும் சாலையும் கலக்கும் இடத்துக்கு அருகில் வந்தான். அங்கேயே நின்று விட்டான்.

நின்றபடி யோசித்தான், யோசித்தான், யோசித்தான். தன் நினைவின்றி யோசித்தான்!

அடுத்த கணம் யாருமே எதிர் பாராதது நடந்து விட்டது.

"பாம்! பாம்!" என்ற மோட்டார்கார் ஹாரனின் சத்தம் கேட்டது. "ஐயோ!" என்ற பயங்கர அலறலும் அதைத் தொடர்ந்து 'கிறீச்' என்ற மண்டையைப் பிளக்கும் சத்தமும் கேட்டன. அந்தத் தெருவிலிருந்து வேகமாகத் திரும்பிய கார் 'கய்...ய்...ய்...ய்' என்ற கர்ண கடோரமான சத்தத்துடன் நின்றது!


திடீரென்று நாலா திசைகளிலிருந்தும் இடியோசை கிளம்பி, காதுகளைத் தாக்குவது போலவும், பூமி பிளந்து கால்களுக்குக் கீழே நழுவிச் செல்வது போலவும் வேலனுக்குத் தோன்றியது. அவன் வேகமாக வந்த காரில் அடிபட்டுப் பந்து போல் தூக்கி எறியப்பட்டான். அவன் இளம் உருவம்; பச்சிளம் உடல் செக்கச் செவேலென்ற இரத்தத்தில் கிடந்தது.

இந்தச் சோகக் காட்சியைப் பார்க்க முடியாமல் கதறுவது போல வானம் உறுமியது!

காருக்குள் இருந்த பெரிய மனிதர் அவசரம் அவசரமாக இறங்கி வந்தார். அடிபட்டுக் கிடந்த வேலனைப் பார்த்தார். அவன் களையான முகத்தைப் பார்த்தார். "அடாடா! பையனைப் பார்த்தால் யாரோ பெரிய மனிதர் வீட்டுக் குழந்தையைப் போலல்லவா இருக்கிறான். டிரைவர்! இவனைத் தூக்கிக் காரில் போடு. நம் டாக்டர் வீட்டுக்குக் காரை விடு. உம்" என்றார்.

டிரைவரின் கைகால்கள் எல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தன. தன் நடுங்கும் கைகளால் சிறுவனைத் தூக்கிக் காருக்குள் போட்டான். காரை டாக்டர் வீட்டுக்கு ஓட்டினான்.

டாக்டர் வேலனைப் பரிசோதனை செய்தார். அடிபட்ட இடங்களில் அவசரம் அவசரமாக மருந்துகளை வைத்துக் கட்டினார். "அபாயம் ஒன்றுமில்லை. மண்டையில் நல்ல அடி பட்டிருக்கிறது. ஏரா



ளமான இரத்தம் குறைந்து விட்டதால் பையன் களைத்துப் போய் விட்டான். அதோடு இந்தப் பெரிய அதிர்ச்சியையும் அவனால் தாங்க முடிய வில்லை. அவனை யாரும் தொந்தரவு செய்ய வேண் டாம். சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளட்டும், காலையில் பார்த்துக் கொள்ளலாம்'' என்றார்.

அதற்குள் பெரிய மனிதர் ''டாக்டர்! பைய னைப் பார்த்தால் யாரோ பெரிய இடத்துக் குழந்தை போலிருக்கிறான். என்ன செலவானா லும் பாதகமில்லை. நன்றாகக் கவனியுங்கள். பையனுக்கு மூர்ச்சை தெளிந்து பேச ஆரம்பித் தால் அவனை யார் என்று விசாரித்து எனக்கு உடனே தெரிவியுங்கள்'' என்றார். டாக்டரிடம் ஒரு நூறு ரூபாயை எடுத்துக் கொடுத்தார். அவ ரிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

நூறு ரூபாய் நோட்டைக் கையை நீட்டி வாங் கிக் கொண்ட டாக்டர் ''ஆகட்டும்'' என்பதற்கு அறிகுறியாகத் தலையைப் பலமாக ஆட்டி வைத் தார். தோளில் கிடந்த 'ஸ்டாதஸ்கோப்'பை எடுத்து மேஜையில் வைத் தார். ''பையனுக்கு அப்படி



ஒன்றும் நல்ல அடி கூட இல்லை. ஏதோ பயத்தில் பெரிய மனிதர் நூறு ரூபாயை எடுத்துக் கொடுத்து விட்டார். நியாயத்துக்குத் தான் யாரும் பணிவதில்லையே! ஏதோ பயத்தில் தன் தவறை மறைப்பதற்கு என்ன வேண்டு மானாலும் செய்யத் தயாராக இருக்கிறார்கள்'' என்று நினைத்து வாய் குலுங்கச் சிரித் துக் கொண்டார் டாக்டர்.

வேலன் ஏதோ முனகினான். அவசரமாக எழுந்து அவன் அருகில் சென்றார். அவனுக்கு நல்ல ஜுரம் அடித்துக் கொண் டிருந்தது. ஜுர வேகத்தில் அவனையும் அறியாமல் ஏதோ முக்கி முனகி யிருக்கிறான். அவ்வளவுதான்.

வேலனின் அழகிய முகத்தைப் பார்த்த வுடன் அவருக்கே மனம் இளகி விட்டது! யார் வீட்டுக் குழந்தையோ! மழையில் ஏதாவது கப்பல் விட்டு விளையாடிக் கொண்டிருந்தானோ என்னவோ. பின்னை

யைக் காணாமல் பெற்றோர்கள் எங்கெல்லாம் தேடுகிறார்களோ என்று எண்ணி அனுதாபப் பட்டார். டாக்டர் கண்டாரா அவன் அனாதை என்று! அல்லது அந்தப் பெரிய மனிதருக்குத் தான் தெரியுமா? அப்படித் தெரிந்திருந்தால் அவனுக்கு இந்த உதவிகள் கிடைத்திருக்குமா!

யாரோ பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளையோ என்ற பயத்தில் எல்லாம் நடக்கிறது. இல்லா விட்டால்! இல்லாவிட்டால் என்ன! கண்ணுக்கு எதிரிலேயே காரில் அடிபட்டு இறந்தவர்களைப் பார்த்திருக்கிறோம். அதற்கு வேண்டிய சாட்சி களும் இருந்திருக்கின்றன. இருந்தும் பணத்தின் உதவியால் தப்பித்துக் கொண்ட சம்பவங்களை நாம் கேள்விப்பட்டதில்லையா! ஏழைகள் அவர்கள் மத்தியில் நீதியை எதிர்பார்க்க முடியுமா!

** ** **

பொழுதும் விடிந்தது. ஆனால் கவிகள் வர்ணனை செய்யும் அந்த அழகுடன் விடியவில்லை. வேறு விதமாக விடிந்தது. அன்று பறவைகள் கீதம் பாடவில்லை; மலர்கள் மலர வில்லை; வண்டுகள் தேனை நாடி மலர்களைத் தேடிச் செல்ல வில்லை. இருண்ட இரவு விடிந்த பகலாக மாறிற்று. ஆனாலும் போதிய வெளிச்சம் ஏற்படவில்லை.

இன்றும் மழையின் வேகம் குறைந்தபாடில்லை. மழை பெய்து கொண்டுதான் இருந்தது.

வேலனுக்கு மூர்ச்சை தெளியவில்லை. ஆனால் அவன் ஏதோ ஒருகனவு கண்டு கொண்டிருந்தான்.

தீபங்கள் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன. வெண்கல மணிகளின் கிண்கிணி நாதம் கேட்கிறது. "டணார்! டணார்!" என்று கண்டாமணியின் ஓசை காதில் மோதுகிறது. எங்கும் தெய்வீக மணம் வீசி மனத்தை மகிழ்விக்கிறது.

எங்கோ எல்லையில்லாத, தொல்லை இல்லாத, பிறப்பும் இறப்பும் இல்லாத ஒரு இடத்திலிருந்து கேட்கும் இன்னொலி. உள்ளமும் உடலும் சிலிர்க்கும் ஒரு இனிமையான சந்தர்ப்பம்.



"எனக்கு இரண்டு நாளாக ஏதோ ஒன்று கண்ணிலே உறுத்திக் கொண்டே இருக்கிறது. என்ன என்று தெரியவில்லை!"

"தெரியாமல் என்ன? மாசக் கடைசி! என் கைப்பெட்டி அடியில் நான் ஒளித்து வைத்திருக்கிற ஐந்து ரூபாய் கண்ணிலே பட்டிருக்கும்!"

அவ்வளவுதான். கண்ணைப் பறிக்கும் ஒரு ஜோதி. அந்த ஜோதிக்குள் கிழவன் நடேசன் மலர்ந்த முகத்துடன் சிரித்துக் கொண்டிருக்கிறான். அவன் முகத்தில் சுருக்கமில்லை. அவன் முதுகில் கூன் இல்லை. கண்கள் முகத்துக்கு மேல் வந்து சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. உடம்பு தள தளவென்று மினு மினுக்கிறது!

சிறிது நேரம் நடேசனைப் பார்த்த வண்ணம் மயங்கி இருந்தான் வேலன். அவனுக்குப் பேசவே தோன்றவில்லை. "வேலா! ஏன் பேச மாட்டேன் என்கிறாய்!" என்று கேட்டான் கிழவன் நடேசன்.

வேலனின் உள்ளத்தையே உருக்கும் அந்த அன்புக் குரலை ஆதரவான பேச்சைக் கேட்டதும் தன் சுய உணர்வு பெற்றான்.

"தாத்தா! என்னை விட்டு விட்டுப் போகிறீர்களே!" என்றான்.

"வேலா! நான் எப்பொழுதும் உன் அருகில் தான் இருப்பேன். நான் சொன்னதை எல்லாம் மறந்து விடாதே! தைரியமாக இரு. தெய்வம் உனக்குத் துணை புரியும். பயம், சந்தேகம், சோம்பல் முதலியவைகளை விட்டு விடு. எத்தனை பெரிய ஆபத்துக்கள் வந்தாலும் அவற்றை நம் பிக்கையினால் வென்றுவிடலாம். நம்பிக்கை கேட்ட வரமெல்லாம் கொடுக்கும்" என்றான் நடேசன். சட்டென்று நடேசனின் புனிதத் திரு உருவம் மறைந்து விட்டது.

அதற்குப் பிறகு தேவ கானம் கேட்கவில்லை. கண்டாமணிகள் அசைந்தாடவில்லை. உள்ளத்தையும் உடலையும் மகிழ்வித்த அந்தத் தெய்வீக மணத்தைக் காணோம்.

'டக் டக்'கென்ற டாக்டரின் பூட்ஸ் சத்தம் தான் கேட்டது.

சிறுவன் வேலன் கண் விழித்துப் பார்த்தான்.

தான் ஒரு கட்டிலில் வசதியுடன் சுகமாகப் படுத்திருப்பதை உணர்ந்தான். அவன் முகத்துக்கு நேர் மேலே டாக்டரின் முகம் இருந்தது. அந்தப் புது முகத்தைப் பார்த்ததும் அவன் பயந்தான். பயத்தினால் விழித்துக் கொண்டிருந்த சிறுவனின் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் முத்துப் போல் வெளி வந்தன. அது கன்னத்தின் வழியே உருண்டோடிக் கழுத்தில் விழுந்த போது அவனுக்குக் குறு குறுத்தது!

வேலனுக்குச் சட்டென்று நடேசனின் நினைவு வந்து விட்டது! அவனுக்கு நடுக்க மெடுத்தது! சுற்றிலும் ஒரு முறை பார்த்தான். அப்படியே கண்ணை மூடிச் சோர்ந்து படுத்து விட்டான். மீண்டும் மூர்ச்சையாகி விட்டான்.

** ** **

மூன்று நாட்கள் ஓடி மறைந்தன. வேலன் அதற்குப் பிறகு கண்களைத் திறந்து பார்க்கவில்லை. அவனுக்கு நல்ல உணர்ச்சி வரவில்லை. அவன் வாய் திறந்து ஒரு வார்த்தையும் பேசவில்லை. டாக்டர் மிகுந்த சிரத்தையுடன் அவனைக் கவனித்து வந்தார். தன்னுடைய திறமை அத்தனையும் காண்பித்துக் கவலையோடு கவனித்து வந்தார். வேலனைக் கொண்டு வந்து டாக்டரிடம் விட்டுப் போன பெரிய மனிதர் தினம் காலையிலும் மாலையிலும் வந்து பார்த்து விட்டுப் போனார். அவர் மனத்தில் ஏனோ அமைதி இல்லை!

நாலாம் நாள்.

எல்லையில்லாத சூன்யத்திலிருந்து ஆழம் காண முடியாத மௌனக் கடலிலிருந்து, எங்கோ அதள பாதாளத்தில் இருக்கும் இருட் சிறையிலிருந்து


திறமை மிக்க வேலைப்பாடு
வெகு நாள் மறையாது
திகழ்கிறது



திருச்சி
மலைக்கோட்டை
273 அடி உயரம்
கி. பி. 11-ம்
நூற்றுண்டில்
நிர்மாணிக்கப்
பட்டதாக
கூறப்படுகிறது.

**Stanes**

'ஸ்டேன்ஸ்'
சிகப்பு லேபில்
சுத்தமான காபி



தி யுனைடெட்
காப்பி ஸப்ளை
கம்பெனி
லிமிடெட்

கோயம்புத்தூர்,
தென் இந்தியா

திருவனந்தபுரத்திற்கு ஏஜண்டுகள் :
மிஸ்டர் ஜி. ஆர். ஹரிஹரன்
செந்திட்டை, சாலை

மதுரைக்கு ஏஜண்டுகள் :
தி ஸ்டேன்ஸ் காபி & ஜெனரல் ஏஜன்ஸி
60, மேல கோபுர வீதி



ஒவ்வொரு புருஷனுக்கும்
அன்றாடம் தேவைப்படுபவை
நீங்கள் டாம்கோ ஓடிகொலோன் ஷேவிங் ஸ்டிக்கை உபயோகித்து முக க்ஷவரம் செய்து கொள்ளும்போது எக்காலும் அறிந்திராத குளுமையும் சுகமும் அனுபவிப்பதை உணர்வீர்கள். அது கொடிப்பொழுதில் நுரை தருகிறது—உலர்ந்துபோவதுமில்லை. கத்தி உங்கள் முகமீது மெத்தென வழுக்கிச் செல்கிறது!
டாம்கோ ஓடிகொலோன் ஸோப்பைத் தேய்த்து ஸ்நானம் செய்யும்போதும் நீங்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைவீர்கள்—நயமான விலையில் அருமை மிக்க ஸோப்பு அது. அதன் ஜில் ஜில்லுப்பான புதுமணம், உங்கள் அன்றாட வேலைகளை மலர்ச்சியுடன் துவக்க உதவி புரியும்!
EAU DE COLOGNE SOAP
SHAVING STICK
டாம்கோ
ஓடிகொலோன் ஸோப்பு
மற்றும் ஷேவிங் ஸ்டிக்
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மேலே மேலே வந்து கொண்டிருந்தான் வேலன். அவன் தலையில் பெரிய பாறாங்கல்லைத் தூக்கி வைத்தது போலிருந்தது. கண்களைத் திறக்க முடியாமல் கட்டிப் போட்டது போலிருந்தது. ஏதோ சில மனிதக் குரல்கள் கேட்டன. யாரோ பேசிக் கொண்டிருந்தனர். வேலன் மிகுந்த சிரமத்துடன் கண்ணைத் திறந்தான். சுற்றும் முற்றும் பார்த்தான். தன்னுடைய ஞாபகத்தை வரவழைத்தான். டாக்டர் வீட்டில் படுத்திருப்பதை உணர்ந்தான். சந்தேகத்துக்கு இடமின்றி உணர்ந்து கொண்டான். டாக்டரும் வெள்ளை உடை தரித்திருந்த ஒரு நர்ஸும் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். தலையைத் தூக்கி அதைக் கேட்க முயன்றான். இப்பொழுதுதான் தன் தலையில் கட்டுக் கட்டியிருப்பதை உணர்ந்தான். தன் தாத்தா இறந்ததும், தான் இன்னது செய்வதென்று தெரியாமல் ஓடி வந்ததும், கடைசியில் காரில் அடிபட்டுப் போனதும் அவனுக்கு நினைவு வந்தது. "தாத்தா! தாத்தா!" என்று சத்தம் போட்டான்.

வேலனின் குரல் கேட்டு டாக்டர் ஓடி வந்தார். அவன் தெளிவான முகத்தைப் பார்த்தார். அவன் கண்களைக் கூர்ந்து கவனித்துப் பார்த்தார். அவர் முகத்தில் ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது. பையன் வெகு விரைவில் குணமாகி விடுவான் என்று திருப்தி அடைந்தார். அவன் கன்னத்தை அன்போடு வருடிக்கொண்டே "தம்பி! உன் பெயர் என்ன!" என்று கேட்டார்.

"வேலன்" என்றான்.

"உன் தந்தையின் பெயர்!"

"தெரியாது."

"தாயாரின் பெயர்!"

"காவேரி."

"அந்த அம்மாள் எங்கே இருக்கிறார்கள்!"

"செத்துப் போய்விட்டார்கள்."

"அப்போ உனக்குத் தாய் தந்தை; உற்றார் உறவினர் யாருமே கிடையாதா!"

"இல்லை."

டாக்டருக்கு ஒரு கணம் ஒன்றுமே புரியவில்லை. மேலும் பலப் பல கேள்விகளைக் கேட்டு அவனைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டார். அவன் ஒரு அனாதை என்பதைப் புரிந்து கொண்டார். "ப்பூ" என்று உதட்டைப் பிதுக்கினார். அவருக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது! அவன் யாராவது பெரிய மனிதர் வீட்டுப் பையனாக இருப்பான்; அங்கிருந்தும் ஏதாவது கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்த அவருக்கு இது பெரிய அதிர்ச்சியாகவே போய்விட்டது. இருந்தாலும் வேலனுடைய களங்கமற்ற முகம் அவர் கடமையை உணர்த்திற்று. ஏதோ ஒரு உணர்ச்சி அவர் இதயத்தைத் தொட்டுவிட்டது. வேலனுக்கு வேண்டிய வைத்திய வசதிகளைக் குறைவில்லாமல் மீண்டும் கவனித்து வந்தார்.

அவசரம் அவசரமாக அவனைக் கொண்டு வந்து விட்ட பெரிய மனிதருக்கு அவனைப் பற்றிச் சொல்லி அனுப்பினார். அந்தப் பையன் ஒரு காதியற்றவன்; அனாதை என்று குறிப்பு அனுப்பினார்.

இதைக் கேட்டதும் அந்தப் பெரிய மனிதர் மிகுந்த சந்தோஷப்பட்டார். போன செல்வம் திரும்பி வந்ததுபோல மகிழ்ந்தார். "அப்பாடா!" என்று ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். "அந்தப் பையன் கையில் பத்து ரூபாய் பணத்தைக் கொடுத்து அனுப்பிவிடுங்கள்" என்று டாக்டருக்குச் சொல்லி அனுப்பிவிட்டார். பணம் படைத்த பெரிய மனிதர் அல்லவா! மிகப் பெருந் தன்மையுடன் நடந்து கொண்டு விட்டார்!

இரண்டு வாரங்கள் கழிந்தன. கையில் பத்து ரூபாய் பணத்தோடு சிறுவன் வேலன் இந்தப் பரந்த உலகில் தன் எதிர்கால வாழ்வைத் தேடி புறப்பட்டு விட்டான். ஏதோ மனம் போனபடி போனான். கையில் காசு இருந்ததால் வேளா வேளைக்குச் சாப்பிட்டான். இரவில் எங்கேயோ வழி நடைப் பாதையில் படுத்துத் தூங்கினான். இத்தனை காலமும் அவன் தாத்தா கூடவே இருந்ததால் அவனுக்கு ஒரு நிம்மதி இருந்தது. கவலையில்லாமல் இருந்தான். இப்பொழுது அவனுக்கு எல்லாமே கஷ்டமாயிருந்தது. எல்லாக் காரியங்களையும் தானே கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது. அதனால் அவனுக்கு இன்னும் பல புதிய விஷயங்கள் தெரிந்தன.

தீயர்கள், திருடர்கள், தீராத நோய் உடையவர்கள் மத்தியில் இரவு நேரங்களில் அவன் துன்பப்பட நேர்ந்தது. அவனையறியாமல் அவர்களுடைய கூட்டுறவால் அந்தச் சோம்பேறி வாழ்வுக்கு அவன் மனம் திரும்பியது. அப்போது அவன் தாத்தா சொன்ன வாசகங்கள் அவன் நினைவுக்கு வந்தன. அவர் சொன்ன வாக்கியங்கள் நாலா பக்கங்களிலிருந்தும் பெரிய ஒலி பெருக்கி மூலம் வந்து அவன் காதுகளில் தாக்கியது போல அவன் உணர்ந்தான். தலையை இறுக்கிப் பிடித்துக் கொண்டான். "பிச்சை எடுப்பதை விடக் கொடுமை ஒன்றும் கிடையாது. உழைக்க வேண்டும்; உழைத்துத்தான் சாப்பிட வேண்டும்" என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டான். பொழுது விடிந்ததும் முதல் காரியமாக எங்கேயாவது வேலை தேட வேண்டும் என்று உறுதியாகத் தீர்மானம் செய்து கொண்டான்.

கையில் இருக்கும் காசு இன்னும் இரண்டு நாளைக்குத்தான் வரும். அதற்குள் வேலை கிடைத்து விட்டால் நல்லது என்று எண்ணினான்.

பொழுது புலர்ந்தது. வேலன் வேலை தேடப் புறப்பட்டான். பலப்பல இடங்களில் வேலை கேட்டான். ஒருவராவது அவன் நிலை கண்டு இரங்கவில்லை. அவனுடைய ஆதரவற்ற நிலைக்குப் பச்சாதாபப்பட வில்லை. அதற்குப் பதில் அவனைப் பலர் ஏசினார்கள், சிலர் தூற்றினார்கள். "வேலை யில்லை போ!" என்று கண்டிப்பாகச் சொல்லி அனுப்பிய நல்ல மனிதர்களும் இருந்தனர். "பிச்சைக்கார நாய்க்கு வேலையாம். எதையாவது திருடிக் கொண்டு போவதற்கா!" என்று விரட்டி அடித்த தயாள குணம் படைத்தவர்களும் இருந்தனர். "தாய் தகப்பன் இல்லை என்று சொல்லுகிறாயே! உன்னை எப்படி நம்புவது!" என்று அவன் நேர்மையைக் கண்டு சந்தேகித்து அவன் இளம் மனத்தைப் புண் படுத்திய புண்ணியவான்கள் சிலரும் இருந்தனர்.

இதையெல்லாம் கேட்டு மனம் நொந்து போனான். அங்குமிங்கும் அலைந்து அலைந்து அலுத்துப் போய் விட்டான். அதனால் வேலனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

அருகில் தெரிந்த ஒரு பெரிய வீட்டுக்கு ஆத்திரத்தோடு போனான். அந்த வீட்டின் கதவைத் தட தட வென்று பலமாகத் தட்டினான்.

அந்த வீட்டுக்காரர் ஒரு டாக்டர். கொஞ்சம் இரக்கமுள்ள டாக்டர். உள்ளதை உள்ளபடி சொல்லும் டாக்டர். ஆகையால் அவரைத் தேடி அதிக நோயாளிகள் செல்லுவதில்லை. ஏதாவது புதுப் பெயரைச் சொல்லி "ஆ! ஊ!" என்று பய முறுத்தி மருந்து கொடுக்கும் டாக்டர்களைத் தானே ஜனங்கள் நம்புகிறார்கள்!

கதவை இடிக்கும் சத்தம் கேட்டவுடன் யாரோ நோயாளிதான் என்று நினைத்து அவசரமாகக்



"பிராண வாயு இல்லாமல் ஜீவராசிகள் உயிர் வாழ முடியாதென்பதை இருநூறு வருஷங்களுக்கு முன்புதான் கண்டு பிடித்தார்களாம்!

"அதைக் கண்டு பிடிக்கிறதற்கு முன்னாலே ஜீவராசிகள் எப்படி உயிர் வாழ்ந்தன!"

கதவைத் திறந்தார் டாக்டர். "யாரப்பா நீ! உனக்கு என்ன வேணும்!" என்று சாவதானமாகக் கேட்டார்.

"நான்தான் வேலன்" என்றான்.

டாக்டருக்குச் சிரிப்பு வந்து விட்டது. "நீ என்ன ஜவாஹர்லால் நேருவா! உன்னைப் பற்றி உலகமே தெரிந்து கொண்டிருக்கும் என்று நினைத்துக் கொண்டாயா!" என்றார்.

"நான் ஏன் ஸார் அப்படி நினைத்துக் கொள்ளப் போகிறேன்! நான் ஒரு ஏழை. எனக்கு ஏதாவது வேலை வேணும்" என்று பல்லைக் காட்டிப் பரிதாபமாகக் கெஞ்சினான் வேலன்.

இப்பொழுதுதான் டாக்டருக்கு விஷயம் விளங்கிற்று. அவனை ஒருதரம் கால் முதல் தலை வரை கூர்ந்து பார்த்தார். அவர் மனத்தை என்னவோ செய்தது. சற்று நேரம் தலையைச் சொறிந்து கொண்டு யோசித்தார்.

"நான் உனக்கு என்ன வேலை கொடுப்பது! அப்படி உனக்கு வேலை கொடுத்தாலும் உன் சாப்பாட்டுக்குப் போதுமான சம்பளம் என்னால் கொடுக்க முடியாது! உனக்கு வேறு யாரும் நிறைய சம்பளம் தரமாட்டார்கள். நான் சொல்லுவதைக் கேள். எங்கேயாவது ஹோட்டலில் போய் வேலை கேளு. ஒரு இடத்தில் இல்லாவிட்டாலும் இன்னொரு இடத்தில் வேலை கிடைக்கும். சம்பளம் கிடைக்காவிட்டாலும் மூன்று வேளை சாப்பாடாவது தாராளமாகக் கிடைக்கும்!" என்றார்.

டாக்டர் சொன்னது வேலனுக்கு மிகுந்த திருப்தியைக் கொடுத்தது. தனக்கு ஏதோ வேலை கிடைத்து விட்டது போலவே சந்தோஷப்பட்டான். அங்கிருந்து புறப்பட்டான். இரண்டொரு ஹோட்டலில் வேலை காலி இல்லை என்று சொல்லி அவனைத் துரத்திவிட்டனர். கடைசியில் ஒரு ஹோட்டலில் அவனுக்கு வேலை கிடைத்தது.

பார்ப்பதற்கு அழகாகவும், சிறு பையனாகவும், குட்டையாகவும், நல்ல உடல் கட்டுடனும் இருந்ததால் அந்த ஹோட்டல் காரர் அவனை வேலைக்கு எடுத்துக் கொண்டார். அந்த ஹோட்டலில் வேலனுக்கு என்ன வேலை தெரியுமா! குழாயில் தண்ணீர் அடித்தல், பாத்திரங்கள் தேய்த்தல், மேஜை துடைத்தல் இன்னும் சில சில்லறை வேலைகள். ஹோட்டலில் எட்டுமணி நேர வேலை என்றுதான் பெயர். வேலனுக்குப் பன்னிரண்டு மணி நேர வேலை இருந்தது. ஆனால் மூன்று வேளையும் வயிறாரச் சாப்பிட்டான். சாப்பாட்டுக்கு ஒன்றும் பஞ்சமில்லை. வெறும் சோற்றை மட்டும் சாப்பிட்டு வருவதால் மட்டும் மனசு திருப்தி அடைந்து விடுகிறதா! ஓய்வே இல்லாவிட்டால் அதில் எப்படி சந்தோஷம் இருக்கும்! வேலனுக்கு அந்த வேலை அவ்வளவாகப் பிடிக்கவில்லை. இருந்தாலும் வேறு வழியின்றிச் செய்து வந்தான். வாரத்துக்கு ஒரு நாள் விடுமுறை கிடைக்கும். அன்றைக்குச் சாப்பாட்டு வாயில் மண்தான். வயிற்றுக்குத் தான் அன்று உணவு அகப்படாதே ஒழிய அறிவுக்கு நல்ல விருந்து கிடைக்கும். நூல் நிலையங்களுக்குச் சென்று பலப்பல புத்தகங்களைப் படிப்பான். உழைப்பால் உயர்ந்த பெரியோர்களின் வாழ்க்கைச் சரித்திரங்களைப் படிப்பான். அவனுடைய சோர்ந்த உள்ளத்துக்கு அந்தச் சரித்திரங்கள் நல்ல தெம்பை அளித்தன. இப்படி ஒரு வருஷம் அந்த வேலையில் காலம் தள்ளினான்.

** ** **

ஒரு நாள் காலை. தன்னுடன் வேலை செய்து வந்த தொழிலாளியை ஹோட்டல் முதலாளி நிறுத்தி விட்டார். அவன் செய்யாத குற்றத்தை அவன் மீது சுமத்தப்பட்டது. ஐந்து வருஷங்களுக்கு மேலாக நாணயமாக வேலை பார்த்து வந்த தொழிலாளியைத் திருடர் என்று சந்தேகக் கண் கொண்டு பார்க்க ஆரம்பித்து விட்டார். யாரோ வஞ்சகன் அவன் மீது திருட்டுக் குற்றம் சாட்டி விட்டான். அதைத் தீர விசாரிக்காமலே அவனை வேலையை விட்டு அனுப்பி விட்டார். அந்தத் தொழிலாளி தான் வேலையை விட்டுப் போவதற்காக வருத்தப்படவில்லை. தன்மீது திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டதை எண்ணி வருந்தினான்.

அவனுடைய நிலை கண்டு வேலன் வேதனைப் பட்டான். அவன்மீது பச்சாதாபப் பட்டான். அவனுக்கு ஆறுதலாக இரண்டு வார்த்தைகள் சொன்னான். "வேலா! இந்த முதலாளிகளே இப்படித்தான். என்னுடைய அருமையான இளமையை இந்த முதலாளிக்கு உழைத்தேன். என் எதிர்காலம் பசுமையாக இருக்கும் என்று உழைத்தேன். இப்பொழுது கொஞ்சம் வயதாகி விட்டது. எனக்கும் கொஞ்சம் உலகம் தெரிய ஆரம்பித்து விட்டது. எனக்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஏதோ காரணம் காட்டி வேலையை விட்டு நிறுத்தி விட்டார்" என்றான். அவன் குரலில் ஏமாற்றம் தொனித்தது.

மொத்தத்தில் இந்த நிகழ்ச்சி வேலனின் சிந்தனையைத் தூண்டி விட்டது. ஏதோ யோசித்தான். நேரே தன் முதலாளியிடம் சென்றான்.

"எசமான்!" என்றான்.

"யாரு, வேலனா! என்ன சேதி!"

"நான் வந்து ஒரு வருஷம் ஆகிவிட்டது!"

"ஆமாம்; அதற்கென்ன!"

"எனக்கு இன்னும் சம்பளம் போடவில்லை."

"உனக்குத்தான் யாரும் இல்லை என்று சொன்னாயே! பணம் எதற்கு!"

"என்ன எசமான் இப்படிக் கேட்கிறீங்க! பணம் எதற்கா! தலையணையில் பஞ்சை அடைப்பதுபோல வயிற்றில் சோற்றை அடைத்து விட்டால் மட்டும் போதுமா! எனக்கு மட்டும் வேறு ஆசைகள் இருக்காதா!"

"டேய் வேலா! நீ பேசவில்லை. என் ஒரு வருஷத்துச் சாப்பாடு உன்னை இப்படிப் பேசச் சொல்லுகிறது. தின்ற திமிரில் நீ பேசுகிறாய்! போடா, போ! உனக்கு எப்பொழுது சம்பளம் கொடுப்பது என்று எனக்குத் தெரியும்!"




# B. I. S. N. கம்பெனி லிமிடெட்

**சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்**

## S. S. "ரஜுலா"

**சென்னை புறப்படும் தேதி — 1952 ஆகஸ்டு 5உ**
**நாகப்பட்டினம் புறப்படும் தேதி — 1952 ஆகஸ்டு 6உ**

கப்பல் புறப்படும் தேதி காலை 6 மணிக்கு மேல் சாமான்கள் ஏற்றப்படமாட்டா.

கப்பலேறுவதற்கான ஏற்பாடுகள்:

**சென்னையிலிருந்து 5-8-52:** *பெர்த் வசதியற்ற பிரயாணிகள் காலை 10 மணிக்கும் ஸலூன் பிரயாணிகள் வைத்திய பரிசோதனைக்கும், கப்பலில் ஏறுவதற்கும் பகல் 12 மணி முதல் பகல் 1 மணிக்கு மேற்படாமல் வந்துவிட வேண்டும்.*

**நாகப்பட்டினத்திலிருந்து 6-8-52:** *பெர்த் வசதியற்ற டிக்கட்டுள்ளோர் காலை 6 மணிக்கும், ஸலூன் டிக்கட் உள்ளவர்கள் 8 மணிக்கும் கப்பலேறலாம்.*

*சென்னையில் ஏறும் பிரயாணிகள் 5-8-52 பகல் 1 மணிக்கு மேல் வந்தால் வைத்ய பரிசோதனைக்கு தாமதமாகி விடும். ஆகையால் அவர்கள் கப்பலேற முடியாது.*

*பினாங்கு, சிங்கப்பூர் துறைமுக சுகாதார விதிகளை அனுசரிக்க வேண்டியிருப்பதால் எல்லா பிரயாணிகளும் சர்வதேச சுகாதார விதிகளின்படி அமைந்த பாரத்தில் அம்மை குத்தியதற்கான சர்ட்டிபிகேட்டும், காலரா எதிர்ப்பு இனாகுலேஷன் செய்ததற்கான சர்டிபிகேட்டும் பெற்று, ஒரு சர்க்கார் அல்லது முனிஸிபல் ஹெல்த் ஆபீஸரின் அத்தாட்சியுடன் செல்லும்படியாகக் கூடிய நிலையில் கொண்டுவர வேண்டும்.*

| | |
|---|---|
| **பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட்**<br>**7, அரமனைக்காரத் தெரு, மதராஸ்** | **மதுரா கம்பெனி லிமிடெட்**<br>**முதல் லைன் பீச்ரோடு, நாகப்பட்டினம்** |

"என்னை உங்களிடமே நிலையாக வேலைக்கு வைத்துக் கொள்கிறீர்களா? அதையாவது சொல்லுங்கள். எனக்கு நிம்மதியாகவாவது இருக்கும்."

"அப்படியெல்லாம் உனக்கு எழுதிக் கொடுக்க முடியாது. அறுதைக் கழுதைக்கு வாயைப்பாரு!" என்று அவன் கழுத்தைப் பிடித்து வெட்டித் தள்ளினார். வேலன் தட தட வென்று வெளியில் போய் பொதகடீரென்று கீழே விழுந்தான்.

ஏமாற்றமடைந்த வேலனுக்குக் கோபம் கோபமாக வந்தது. ஏழையின் கோபம் அவன் வாழ்வைத் தானே கெடுக்கும். ஆமாம் அப்படித்தான் ஆகிவிட்டது. "இவர் எப்பொழுதோ ஒரு நாளைக்குத் திடீர் என்று நிறுத்தும் வரை காத்துக் கொண்டிருப்பானேன்! நாம் இப்பொழுதே நின்று கொள்ளுவோமே" என்று நினைத்தான். அன்றைக்கே அந்த வேலைக்குத் தலை முழுகி விட்டான். அதில் அவன் திருப்தி யடைந்தான்.

பாவம்! இன்னும் போதிய பக்குவம் பெறவில்லை அவன். இன்னொரு இடத்திலும் இப்படித்தான் இருக்கும் என்பதை அவன் இன்னும் அறியவில்லை. உடனே இன்னொரு வேலை கிடைத்து விடுமா? அவனுக்காக யார் வேலையை வைத்துக் கொண்டு காத்திருக்கப் போகிறார்கள்?

பல தினங்கள் வேலை கிடைக்காமல் கஷ்டப்பட்டான் வேலன். ரயிலடியில் மூட்டைத் தூக்கினான். கொத்தனார்களிடம் சிற்றாளாக இருந்தான். பத்திரிகை விற்கும் பையனாக இருந்தான். ஒரு தொழிற்சாலையில் தினக் கூலிக்கு வேலை செய்தான். இப்படி ஒரு வேலையிலும் நிலை இல்லாமல் பத்து வருஷ காலம் பாடு பட்டான். இந்த அனுபவங்கள் அவனுக்கு ஏழ்மையை, வறுமையின் கொடுமையை, வஞ்சகர்களின் சூழ்ச்சியை, தொழிலாளர்களின் கஷ்டங்களை, உலகத்தின் நிலைமையை எல்லாம் கற்றுக் கொடுத்தது.

ஏழைகளிடமும், தொழிலாளர்களிடம் இருக்கும் பல குறைபாடுகளை நினைத்து வருந்தினான். அவர்களுடைய ஒற்றுமைக் குறைவை எண்ணி வேதனைப் பட்டான். அவர்களுக்குள் யாராவது கொஞ்சம் முன்னுக்கு வந்து விட்டால் அவர்களைப் பார்த்துப் பொறாமைப்படும் சமூகத்தை நினைத்துத் துன்பப் பட்டான். ஆடம்பரத்துக்கும் ஆர்ப்பாட்டத்துக்கும் மயங்கும் மதிகெட்ட மக்களை எண்ணி எண்ணி மனம் புழுங்கினான்.

பணக்காரர்களையும், முதலாளிகளையும், லக்ஷவான்தார்களையும் ஈரமற்றவர்களாகச் செய்து வருபவர்கள் ஏழை மக்களே தான். அவர்களிடம் வேலை பார்க்கும் சிலர் அவரவர்களின் சொந்த லாபத்தைக் கருதி முதலாளிகளைக் கெடுத்து விடுகின்றனர். அவர்களுடைய நல்ல மனத்தையும் பாழ்படுத்தி விடுகின்றனர். இதனால் சில நல்ல நோக்கமுள்ள முதலாளிகளும் மனம் மாறி விடுகின்றனர் என்பதைத் தன் பத்து வருஷத்து வாழ்க்கையில் தெரிந்துகொண்டான் வேலன்.

** ** **

இப்பொழுது வேலனுக்குப் பதினெட்டு வயது. ஒரு மனிதன் வாழ்க்கையில் சரியான பருவம்.

சில தினங்களாக வேலை கிடைக்காததால் கையில் காசு இல்லாமல் பட்டினி கிடக்கும்படி நேரிட்டு விட்டது. பசியின் கொடுமையும் நாளைக்கு என்ன செய்வது என்ற வேதனையும் அவனை வாட்டி யெடுக்க நடக்க முடியாமல் நடந்து போய்க் கொண்டிருந்தான். கடற்கரையின் நடைபாதையிலே தான் நடந்து போய்க் கொண்டிருந்தான். வயிறு மட்டும் நிறைந்திருந்தால் இப்பொழுது எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று அவன் மனம் எண்ணமிட்டது.

இந்த உலகம் இருக்கிறதே, இது மிக விசித்திரமானது. வயிற்றுப் பசியைத்தான் போக்கிக் கொள்ள முடியாதே ஒழிய வேறு பல பசிகளைச் சுலபமாய் போக்கிக் கொள்ளலாம். வரிசையாக சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய பெரிய கட்டிடங்கள் அமைந்த தெருக்களில் அலைகிறோம். உள்ளும் புறமும் அவைகள் பார்க்க மிக அழகாக இருக்கின்றன. அவற்றின் அமைப்பு சிற்பத்தையும் சித்திரத்தையும், சுகத்தையும் சுகாதாரத்தையும், மற்றும் எத்தனை எத்தனையோ எண்ணங்களையும் நமக்கு உண்டாக்குகின்றன.

விதம் விதமான உடையணிந்த கவலையற்ற மனிதர்கள் நமக்கு முன் சிரித்தவண்ணம் செல்லுகின்றனர். ஆனால் பட்டினியோடும், பசியோடும் வேலை கிடைக்காத கொடுமையால் இன்னும் உயிரோடு இருக்கிறோம் என்ற சோகமான உண்மையை எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பவர்களைக் கவனிக்காமலே அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பட்டினியோடும் பசியோடும் இருக்கும் மனிதனுடைய மனம் தான் எதையும் அதிகமாக அனுபவிக்க முடிகிறது.

மாலை நெருங்கி விட்டது. வேலன் கடலுக்கு அருகில் போய் ஈர மண்ணிலே உட்கார்ந்தான். அவனைப் பார்த்துக் கடல் சிரித்துக் கொண்டிருந்தது. படை படையாக அலைகள் பிறந்து கரையை நோக்கி ஓடி வந்தன. கரையில் வெள்ளை வெளேரென்ற நுரைத் துளை வாரி இறைத்துவிட்டு மீண்டும் பின் வாங்கி கடலில் கலந்து விட்டன. வானத்துக்கும் கடலுக்கும் இடையே உள்ள பரந்த வெளியில் குமுறித் தாவும் அந்த அலைகளின் 'ஓம்! ஓம்!' என்ற இன்ப நாதம் அந்த வெளி எங்கும் நிறைந்து ஒலித்தது.

தூரத்தில் அந்தப் பெரிய கடலின் பயங்கர அலைகளுக்கு மத்தியில் ஒரு கட்டுமரம் அவ்வப்போது தோன்றி மறைந்து கொண்டிருந்தது. அலையின் உயரத்துக்குக் கட்டுமரம் வரும் உடனே தலைகுப்புற விழும். இப்படியாக அது அலைந்து கொண்டிருந்தது. வேலனின் உள்ளமும் அதைப் போலவே அலைந்து கொண்டிருந்தது. அவன் உள்ளத்தில் ஒரு கேள்வி தோன்றி மறைந்து கொண்டிருந்தது. "இனி மேல் என்ன செய்வது!" "இனி மேல் என்ன செய்வது!" என்று அவன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். அதற்கு விடை காண முயன்றான்; முடியவில்லை. மண்டையைக் குடைந்து கொண்டு "இனி மேல் என்ன செய்வது!" என்ற கேள்வி மீண்டும் அவன் உள்ளத்தில் விசுவரூபம் எடுத்தது.

இப்பொழுது நன்றாக இருட்டிவிட்டது. சுற்றுப்புறத்தில் யாருமே இல்லை. ஒரே சூனியமாகவும் இருள் சூழ்ந்து மிருந்தது.

அந்த நிசப்தத்தில் யாரோ ஓடி வருவது போல் சத்தம் கேட்டது. வேலன் சுற்று முற்றும் பார்த்தான். சற்றுத் தூரத்தில் யாரோ கடலை நோக்கி ஓடி வந்தது தெரிந்தது. சுற்றிலும் நல்ல இருள் சூழ்ந்திருந்ததால் அந்த உருவத்தைச் சரியாக இனம் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஏதோ ஒரு உணர்ச்சி அவனைப் பிடித்து உந்தியது. அவனும் அந்த உருவத்தை நோக்கி விரைந்து சென்றான். அந்த உருவம் கடலுக்கு வெகு சமீபத்தில் வந்துவிட்டது. வேலனும் அருகில் சென்று விட்டான். பெண் உருவின் இருந்த அந்த உருவம் சட்டென்று தாவிக் கடலில் குதித்தது. வேலனும் கடலில் குதித்தான்! (தொடரும்,

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119. Sladens Garden. Poonamallee High Road, Kilpauk, Madras




துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 183-50 TM

**REGD. No. M 4392**

*Registered as a newspaper in Ceylon*



பற்களை சுத்தம் செய்வது பாதி வேலை தான் . . .



தினமும் ஈறுகளைப் பாதுகாப்பது அந்த வேலையை பூர்த்திசெய்கிறது!

உங்கள் பற்கள் எவ்வளவு ஒழுங்கானவையாக இருந்தாலும் ஈறுகள் நோயுற்றுப் போனால் அவை உபயோகமற்றதாகி விடுகின்றன. தினமும் இரு முறை இப்ஸ் எஸ். ஆர். உபயோகியுங்கள். ஈறுகளை ஆரோக்கியமாக வைத்திருக்கும் ஸோடியம் ரிஸினோலியேட் இதில் அடங்கியுள்ளது. மேலும் எஸ். ஆர். டூத்பேஸ்ட் பற்களை பளிச்சென்று வெண்மையாக சுத்தம் செய்கிறது.




இப்ஸ் ரிஜிஸ்டேர்ட் **எஸ்.ஆர்.** டூத்பேஸ்ட்

பற்களை பளிச்சென்று வெண்மையாகவும் ஈறுகளை ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது

GSR. 88-50 TM